பக்கங்கள் : இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 23 சனிக்கிழமை (05.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :71

## தென்னிலங்கையில் நேற்று சுதந்திர தினம்

# தமிழர் தாயகத்தில் துக்கம்!

## பரவலாக எதிர்ப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.பெப்ரவரி5

**இலங்கையின் 57ஆவது சுதந்திர தினம் நேற்றுத் தெற்கில் அமைதியானதாகவும், ஆரவாரமின்றியும் அனுஷ்டிக்கப்பட்டது.**

**அதேசமயம், வடக்கு - கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - இந்த நாள் நேற்றுத் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது. பரவலாக எங்கும் எதிர்ப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.**

கொழும்பில் சுதந்திர தினத்தையொட்டிய பிரதான நிகழ்வு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது.

எனினும், ஆழிப்பேரலையால் நாடு, அழிவுகளைச் சந்தித்துள்ள இச்சமயத்தில் கேளிக்கைகள், ஆரவாரங்கள், கொண்டாட்டங்களைத் தவிர்த்து சுதந்திர தினத்தை அனுஷ்டிப்பது என அரசு எடுத்த தீர்மானத்துக்கு அமைய பிரதான சுதந்திர தின நிகழ்வு கூட மிக அமைதியாகவும் - எளிமையாகவும் - நடத்தப்பட்டது. வழமையான இராணுவ அணிவகுப்பு மட்டும் இடம்பெற்றது.

அதேபோன்று தென்னிலங்கையில் பல்வேறு மாவட்டங்களிலும் அமைதியாக இந்நிகழ்வுகள் நடந்தன.

ஆனால், தமிழர் தாயகத்தில் இலங்கையின் சுதந்திரதினம் வழமைபோல துக்கதினமாக - கரிநாளாக - அனுஷ்டிக்கப்பட்டது. ஆங்காங்கே கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டும், வழிமறிப்புப் போன்ற நடவடிக்கைகளில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புத்துணியால் வாய்களைக் கட்டி வலி.வடக்கு மக்கள் நேற்று எதிர்ப்பு!

வலி.வடக்கு.பெப்.5

இராணுவ நடவடிக்கைகளினால் வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இலங்கையின் சுதந்திர தினமான நேற்று வலி. வடக்கு பிரதேச செயலக அலுவலகம் முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் செயலகத்துக்கு முன்பாகக்கூடிய நூற்றுக்கு மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் அங்கு அமைதியாக அமர்ந்திருந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்தப் போராட்டத்தில் பங்குகொண்ட பெண்களில் ஒருபகுதியினர் கறுப்புத்துணியால் தமது வாய்களைக் கட்டித் தமது உணர்வை வெளிப்படுத்தினர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன், எஸ்.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

'பெப்ரவரி 4 அடிமைத் தினம்' என்ற தலைப்

(20ஆம் பக்கம் பார்க்க)





நேற்று வலி.வடக்கில் இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கையில் வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும், ஜனாதிபதிக்கான மகஜர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனிடம் கையளிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## கருணா குழு உறுப்பினர்கள் மட்டக்களப்பில் கைது; துப்பாக்கிகளுடன்!

மட்டக்களப்பு,பெப்.5

மட்டக்களப்பு நகருக்கு வெளியே நேற்று முன்தினம் நள்ளிரவு துப்பாக்கிகளுடன் நடமாடிய கருணா குழு உறுப்பினர்கள் இருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிரானைச் சேர்ந்த செல்லத்தம்பி சீலன், கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த உதயராஜ் உருத்திரன் ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் குண்டுவீச்சு!

மட்டக்களப்பு நகரப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை கிராமசேவையாளர் ஒருவரின் வீட்டிற்குக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

வன்டிங்ஸ் வீதியிலுள்ள தணிகாசலம் என்ற கிராமசேவையாளருடைய வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வீட்டிற்குச் சிறுசேதம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (த-க)

## கிழக்கில் கரையொதுங்கும் தேங்காய்களில் நச்சுத்தன்மை!

### முகர்ந்தவர் மயங்கி வீழ்ந்தார்!!

ஆழிப்பேரலையினால் காவு கொள்ளப்பட்ட இந்தோனேசியப் பொருள்கள் தினமும் இலங்கையின் கிழக்குக் கரையில் கரையொதுங்குகின்றன.

இவற்றில் இந்தோனேசியத் தேங்காய்களும் ஆயிரக்கணக்கில் கரையொதுங்குகின்றன.

இவ்வாறு கரையொதுங்கும் தேங்காய்களில் ஒருவித நச்சுத்தன்மை காணப்படுவதா

(20ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நெருப்புக் காய்ச்சல்

வவுனியா,பெப்.5

வவுனியா மாவட்டத்தில் நெருப்புக் காய்ச்சல் தீவிரமாகப் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா நகரப்பகுதி பட்டக்காடு, பண்டாரிக்குளம், கூமாங்குளம் ஆகிய பகுதிகளிலேயே இந்த நோய் வேகமாகப் பரவி வருகிறது என்றும் -

எனவே, இதுகுறித்து பொதுமக்கள் விழிப்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையிலும் நேற்று ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம்,பெப்.5

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையத்துக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையப் பகுதியிலுள்ள வீதி கடந்த 1990 ஆம் ஆண்டு பொலீஸாரால் மக்களின் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டது.

அதன் பின்னர் சுமார் 15 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் அந்த வீதி ஊடான போக்குவரத்துக்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இதனால் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் -

எனவே இந்த வீதியைப் பொதுப் போக்கு

(20ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான கிரானில் வைத்து நேற்று முற்பகல் 11.10 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சின்னத்துரை தேவநாதன்(வயது 28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

சின்னத்துரை தேவநாதன் மற்றும் கிருஷ்ணவரதன் என்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் புலிபாஞ்சகல்லில் உள்ள புலிகளின் முகாமிற்குச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தனர்.

கிரானில் உள்ள விஷ்ணுகோயில் வீதியில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரம் படுகொலை நினைவுநாள் அனுஷ்டிப்பு!

1991 ஆம் ஆண்டு இலங்கையின் சுதந்திர தினத்தன்று ஸ்ரீலங்கா விமானப் படையினர் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் நடத்திய விமானத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 9 பொதுமக்களின் 14ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

உயிரிழந்த மக்களை நினைவுகூரும் நிகழ்வு நேற்றுமுற்பகல் 9.30 மணியளவில் உயிரிழந்த மக்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள தூபியடியில் உருத்திரபுர வலய தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் த.அருந்தவச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

முதன்மைச் சுடரினை கிளிநொச்சி மாவட்ட

(20ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சிப் பிரதேச மக்கள் தொடர் மறியலுக்கு முஸ்தீபு

யாழ்ப்பாணம்,பெப்.5

தென்மராட்சி பொது அமைப்புகள் ஒன்றிணைந்து யாழ்.மாவட்ட அரச செயலகம் முன்பாக தொடர் மறியல் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன.

தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தினர் அமைத்துள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி தம்மைத் தமது சொந்த வாழ்விடங்களில் குடியமர நடவடிக்கை எடுக்குமாறு கோரியே மக்கள் இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் யாழ். மாவட்ட அரச செயலகம் முன்பாக இந்த மறியல் போராட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-12)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எதிரிகளையும் கூட இணைத்து நாட்டைக் கட்டியெழுப்புவோம்

## சுதந்திரதின நிகழ்வில் ஜனாதிபதி உரை

கொழும்பு,பெப்.5

"எதிரிகளையும் இணைத்துக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவோம், கடந்த 57 ஆண்டுகளாக நாம் செய்துவந்த தவறுகளை ஆழிப்பேரலை நமக்கு உணர்த்திவிட்டது. எனவே, பேதங்களை மறுத்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவோம்."

இலங்கையின் 57ஆவது சுதந்திரதினம் நேற்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடப்பட்டது. இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று முற்பகல் சுதந்திர தினத்தையொட்டிய பிரதான நிகழவு இடம்பெற்றது.

அங்கு தேசியக் கொடியை ஏற்றிவைத்த பின்னர் 21 பீரங்கிக் குண்டுகளை வெடிக்க வைத்து வழங்கப்பட்ட மரியாதையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டார்.

அவர் அங்கு பேசும்போது மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் வரலாற்றில் நாம் ஒரு முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றோம், கனவிலும் எதிர்பார்க்காத ஒரு பேரழிவை இப்போது சந்தித்தோம். நாம் இத்தகைய இழப்புக்கு முகம்கொடுக்கக்கூடிய ஒரு தயார் நிலையில் இருக்கவில்லை. நாடு சில நிமிடங்களில் பாரிய அழிவைச் சந்தித்தது. அந்த அழிவு ஏற்பட்டு ஒரு மணித்தியாலத்தினுள் அரசு தான் மேற்கொள்ளவேண்டிய பணியை ஆரம்பித்தது. சர்வதேச சமூகமும் எமக்கு மனம் கோணாமல் உதவிகளை வாரி வழங்கியது. எம்மை மீள எழச்செய்த சர்வதேச நாடுகளுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவேண்டும்

ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி எமது நாட்டு மக்கள் மனமுவந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிவருகின்றனர். இன, மத, மொழி பேதமின்றி அனைத்து மக்களும் உதவி வருகின்றனர். அனைவருக்கும் எனது நன்றிக் கடனைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். ஆழிப்பேரலைக்கு சிக்கி ஆயிரக்கணக்கானவர்கள் இறந்துவிட்டனர். சுமார் ஏழு லட்சம் பேர் அகதிகளாகியுள்ளனர். 75 ஆயிரம் வீடுகளை புதிதாக நிர்மாணிக்கவேண்டியுள்ளது. 50ஆயிரம் வீடுகள் புனர்நிர்மாணம் செய்யவேண்டியுள்ளன. ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகளைச் செய்துமுடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

அனர்த்தம் நிகழ்ந்து இரண்டு தினங்களில் செயலணி அமைத்து உடனடி நடவடிக்கைகளில் இறங்கினோம்.

பாரிய அனர்த்தம் நிகழ்ந்தபோதும் அதன் பின்னர் தொற்றுநோய்கள் எதுவும் ஏற்படவில்லை, அந்த வகையிலும் நாம் அதிர்ஷ்டத்துக்குரியவர்கள்.

பாரிய அழிவுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையிலும், அதை ஈடுசெய்யக்கூடிய விதத்திலும் எம்மிடம் சக்தி இருக்கவில்லை. இருந்தும் நாம் இப்போது மீள எழும்பி நிற்கின்றோம் என்றால் எமது மனித சக்தியே இதற்குக் காரணம்.

இந்த அழிவு எமக்கு ஒரு படிப்பினையை ஏற்படுத்திவிட்டுச் சென்றுவிட்டுள்ளது.

எனது அரசு எந்தச் சவாலுக்கும் முகங்கொடுக்கத் தயாராகவுள்ளது. எமக்கு சகல கட்சிகளும் உதவ முன்வரவேண்டும்.

நாம் ஐக்கியத்துடன் செயற்பட்டால் மட்டுமே வெற்றிகொள்ள முடியும். எல்லைகள் கடந்து, எல்லைகள் பிரிக்கப்பட்ட நிலையில் நாம் வாழ்ந்த போதும் ஆழிப்பேரலை எம்மை இணைத்துள்ளது. அனர்த்தம் என்பது எல்லோருக்கும் ஒன்றுதான் என்று உணர்த்தப்பட்டிருக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வில் முப்படைகளினதும் அணிவகுப்பு மரியாதையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.



கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி, சென் பிரிஜெட்ஸ் கொன்வென்ட், தேவிபாலிகா மகளிர் கல்லூரி போன்ற கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும், பக்தி கீதங்களும் இடம்பெற்றன. வெளிநாட்டு ராஜதந்திரிகளும் இந்த சுதந்திரதின நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பிரதமர், சபாநாயகர் உட்பட அரசியல்வாதிகள், நீதித்துறை அதிகாரிகள் போன்றோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (8)

# திருமலைக் கரையில் கரையொதுங்கிய முண்டம்

## வெளிநாட்டவருடையதா?

திருகோணமலை,பெப்.5

திருகோணமலை நகரின் புறநகர்ப் பகுதியில் உள்ள பள்ளத்தோட்டம் கடலோரத்தில் இனந்தெரியாத ஒருவரது முண்டம் கரையொதுங்கியுள்ளது.

இந்த முண்டம் வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மிகவும் சிதைவடைந்த நிலையில் துர்நாற்றம் வீசியபடி தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இது காணப்பட்டது.

இது சுனாமி அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தவருடய முண்டமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

திருமலை மாவட்ட நீதிவானின் முன்னிலையில் கடற்கரையிலேயே அந்த முண்டம் புதைக்கப்பட்டது என்று கூறப்பட்டது.

(த-12)

# திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர் பொதுமக்களிடம் சிக்கினார்

யாழ்ப்பாணம்,பெப்.5

சுன்னாகம், மயிலங்காட்டில் நேற்றுமுன்தினம் இரவு திருட்டு முயற்சியில் ஈடுபட்டார் என்று கூறப்படும் நபர் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டார். படுகாயம் அடைந்த அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதேயிடத்தைச் சேர்ந்த சின்னவி பாலன் என்பவரே தாக்கப்பட்டவராவார்.

அன்று இரவு 10 மணியளவில் ஒருவீட்டில் சைக்கிளைக் களவாடி வேறு ஓர் இடத்தில் வாழைக்குலையைத் திருடிய சமயம் பொதுமக்களிடம் அவர் சிக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களால் தக்கப்பட்டுக் காயமடைநத நிலையில் சுன்னாகம் பொலீஸில் அவர் ஒப்படைக்கப்பட்டார். பொலீஸார் அவரை யாழ் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் யாழ். ஆஸ்பத்திரியில் அவரைப் பார்வையிட்டு விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (த-3)

# சாய்ந்தமருது, நிந்தவூரில் நேற்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## பாதிப்புற்றோர் கவனிக்கப்படாததால் கோபாவேசம்

சாய்ந்தமருது,பெப்.5

இலங்கையின் சுதந்திரதினமான நேற்று கிழக்கில் சாய்ந்தமருது, நிந்தவூர், மாளிகைக்காடு, கல்முனைக்குடி ஆகிய பகுதிகளில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பேரழிவுற்றிருக்கின்ற கல்முனை மற்றும் பிராந்தியத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள் கட்டமைப்புக்கான ஏற்பாடுகள் எவையும் இன்னும் செய்யப்படாதிருப்பதைக் கண்டித்தும், நிவாரணப் பணிகளில் பாரபட்சம் காட்டப்பட்டு வருவதை ஆட்சேபித்துமே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

**சாய்ந்தமருதில்**

நேற்று மதியம் ஜும் ஆத் தொழுகையைத் தொடர்ந்து சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலுக்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். பாதிக்கப்பட்ட மீனவர்களும் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றினர்.

சாய்ந்தமருது ஜும் ஆப் பள்ளிவாசலுக்கு ஜும் ஆத் தொழுகைக்கு வந்திருந்த ஐ.தே. கட்சியின் எம்.பியான எம்.எம்.மயோன் முஸ்தபா, முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான எஸ். நிஜாமுதீன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் முன்னே சென்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தி ஙவாறு கோஷங்களை எழுப்பினர்.

★ அரசே எம்மைப் புறக்கணிக்காதே! ஏமாற்றாதே!

★ உலக நாடுகளின் நிதி உதவிகளை தென்னிலங்கையில் சுருட்டாதே!

★ விமானங்களில் வந்த நிவாரணப் பொருள்கள் எங்கே!

★ அரசே! அமைச்சர் பேரியல் எமக்கு வேண்டாம்! வேறு ஓர் அமைச்சரிடம் பொறுப்பை ஒப்படை!

★ சுனாமிக்கு வயது 40 நாள்கள். கலமுனைப் பிராந்தியத்தின் புனரமைப்பு எப்போது?

★ தற்காலிக இருப்பிடம், நிரந்தர வீடுகள் எல்லாம் எங்கே?

★ அரசே உனது பணிகள் தென்னிலங்கைக்கு மட்டும்தானா?

★ அரசே! நிவாரண நடவடிக்கையில் தென்பகுதிக்குக் காட்டும் ஆர்வத்தை வடக்கு - கிழக்குப் பிரதேசத்திற்கும் காட்டு.

★ கல்முனை கரைவாகுவட்டையிலுள்ள நிலத்தை மூடி மீனவர்களாகிய எங்களைத் துரிதமாகக் குடியேற்று!

★ படிவங்களை நிரப்புவதோடு எங்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் முடிந்து விட்டனவே. செயலில் தாமதமாவது ஏன்?

★ தமிழ், முஸ்லிம் பிரதேச மக்களின் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடாதே!

★ சுனாமி அழிவிலும் அரசியலா?

- இவ்வாறு குறிப்பிடும் பதாகைகளை ஏந்தியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த வாசகங்களைக் கோஷமாகவும் எழுப்பினர்.

மாற்றுக்குடியிருப்புக்கான வீடமைப்புத் திட்டம் கரைவாகு மற்றும் மேட்டு வட்டை வயல் காணிகளில் உடனடியாக அமைக்கப்படவேண்டும். நூறு மீற்றர் எல்லைவரை முடிவை மீள் பரிசீலனை செய்யவேண்டும். அம்பாறை மாவட்ட சுனாமி அனர்த்த முகாமைத்துவ செயலகம் கல்முனைக்கு இடம்மாற்றப்படவேண்டும். தென்னிலங்கையைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரின் தலைமையில் இம்மாவட்ட எம்.பிக்களையும், சமூகத் தலைவர்களையும் உள்ளடக்கியதாக அனர்த்த முகாமைத்துவச் செயலணி ஒன்று உடனடியாக அமைக்கப்படவேண்டும். என்ற கோரிக்கைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அவர்கள் சாய்ந்தமருது பிரதேச செயலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

அம்பாறை மாவட்ட எம்.பிக்கள் மயோன் முஸ்தபா மக்களின் சார்பில் அவர்களின் கோரிக்கைகள் அடங்கிய - ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட - மகஜரை உதவிப்பிரதேச செயலாளர் ஏ.எம்.அன்ஸாரிடம் கையளித்தார்.

**மாளிகைக்காட்டில்**

இதேவேளை, மாளிகைக்காட்டுப் பகுதியிலிருந்து மற்றோர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற பெரும் எண்ணிக்கையான மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

மாளிகைக்காடு ஜும் ஆ பள்ளிவாசலில் இருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் சாய்ந்தமருதில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட அணியுடன் சென்று இணைந்துகொண்டது.

**நிந்தவூரில்**

நிந்தவூர் ஜும் ஆ பள்ளிவாசலில் இருந்து நேற்று மதியம் தொழுகையை அடுத்து மற்றோர் ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது. பலநூற்றுக் கணக்கானோர் அதில் பங்குபற்றினர். நிந்தவூர் பிரதேச செயலகம் வரை அந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதுபோன்று கல்முனைக்குடி ஜும் ஆ பெரிய பள்ளிவாசலுக்கு முன்பாகவும் ஜும் ஆ தொழுகைக்கு பின்னர் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றதாகத் தெரியவந்தது. (த-க)

# தெற்கில் வெலிகமவில் நேற்று வீதி மறியல்

கொழும்பு,பெப்5

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தென்னிலங்கைப் பகுதி பொதுமக்களும் தங்களுக்கு நிவாரணம் உரிய வகையில் வழங்கப்படவில்லை; தம்மைச் சரிவரக் கவனிக்கவில்லை என்று தெரிவித்து வீதி மறியலில் நேற்றுக் காலை ஈடுபட்டனர்.

காலிக்கும் மாத்தறைக்கும் இடையிலுள்ள வெலிகம பிரதேச மக்களே இலங்கையின் சுதந்திர தினமான நேற்று இவ்வாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

நிவாரணப் பணியில் தங்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகின்றது என்றும் தாங்கள் அரசியல் - கட்சி சார்பு அடிப்படைகளில் ஒதுக்கப்படுகின்றனர் என்றும் வீதி மறியலில் ஈடுபட்ட அப்பகுதியைச் சேர்ந்த சுமார் ஐந்நூறு பொதுமக்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதி மறியலையொட்டி அந்தப் பகுதியில் கலகம் அடக்கும் படையினர் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்தனர். ஆனால், அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

# இலங்கையின் சுகாதாரத் துறையை அபிவிருத்திசெய்ய இந்தியா உதவும்

## தூதர் நிருபமா ராவ் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.5

இலங்கையின் சுகாதாரத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு உதவுவதற்கு இந்தியா முன்வந்திருக்கிறது.

சுகாதார அபிவிருத்திக்கு பௌதிக மற்றும் மனித வளங்களை வழங்குவதற்கு இந்தியா தீர்மானித்திருக்கிறது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவா நிருபமா ராவ் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வாவை நேற்றுச் சந்தித்த இந்தியத் தூதர் இந்தியாவின் இந்த உதவித் தீர்மானம் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதன் பிரகாரம் இந்தியா, வைத்தியர்களையும் மருத்துவத் தொழில்நுட்பவியலாளர்களையும் வழங்கும்.

உளவியல் ஆரோக்கியம் தொடர்பாக 3 இந்திய வைத்திய நிபுணாகள் எற்கனவே அம்பாறை, கல்முனை ஆகிய பகுதிகளுக்கு அனுப்பட்டுள்ளனர்.

மருத்துவ வசதிகளுக்கான நிதியுதவியுடன் நவீன தொழில் நுட்பத்திறகமைய யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாந்தோட்டை வைத்தியசாலைகளைப் புனரமைப்பதற்கும் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

டிக்கோயா ஆதார வைத்தியசாலை நிர்மாண வேலைகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ள சிவில் பொறியியலாளர்கள், கட்டடக்கலை நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்ய இருப்பதாகவும் இந்தியத் தூதர் மேலும் தெரிவித்தார். (த-12)

# கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து 3 வயதுக் குழந்தை மரணம்

## ஊர்காவற்றுறையில் பரிதாபம்

ஊர்காவற்றுறை,பெப்.5

வீட்டுக் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த 3 வயதுக் குழந்தை பரிதாபகரமான முறையில் உயிரிழந்த பரிதாபச் சம்பவம் ஊர்காவற்றுறையில் இடம்பெற்றிருக்கிறது.

கடந்த திங்கட்கிழமை பி.ப. 4மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அனலைதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த புண்ணியபாலன் குருபரன் என்ற மூன்று வயதுடைய ஆண் குழந்தையே இவ்வாறு பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளது.

(த-16-203)

# எரிபொருள் விற்பனை நிலையம் நவீனமயப் படுத்தப்படுகின்றது


குருநகர்,பெப்.5

யாழ். கே.கே.எஸ். வீதியில் யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகில் அமைந்துள்ள யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம் நவீனமயப்படுத்தப்பட்டு வருகிறது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருவதாக தலைவர் சொ.சூ. சிறில் தெரிவித்தார். (த-51)

# டிராக்டர்மீது ரயில் மோதுண்டு மகாராஷ்டிராவில் 55 பேர் பலி!



நாக்பூர்,பெப்.5

இந்தியா மகாராஷ்டிராவில் ரயில்வே கடவையைக் கடக்க முயன்ற 'டிராக்டர்' மீது பயணிகள் ரயில் மோதுண்டு விபத்துக்குளானதில் 55 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்; 15 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் டிராக்டரில் சென்ற 10 குழந்தைகளும் பலியாகினர் என்று செய்திகள் தெரிவித்தன.

மகாராஷ்டிரா மாநிலத்தின் நாக்பூரிலிருந்து 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நாக்பூர், ஜப்பூர் தேசிய ரயில்வே நெடுஞ்சாலையிலேயே மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ராம்டெக் என்ற இடத்தில் நடந்த திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களை ஏற்றிக்கொண்டு வந்த டிராக்டரே இவ்வாறு பயணி ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இநத விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில் அநேகர் கூலித்தொழிலாளர்கள் ஆவர். படுகாயமடைந்த 15 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துச் சம்பவத்தால் ரயில்வே பாதை சேதமடைந்தது. மீட்புப் பணியில் ரயில்வே நிர்வாகம் ஈடுபட்டது.

இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 300 இற்கும் அதிகமான விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விபத்து இடம்பெறும் வேளையில் ரயில் வருவதை டிராக்டர் ஓட்டுநர் கவனிக்கவில்லை - காணவில்லை - என்று ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பன்ஜாப் மாநிலத்தில் கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற ரயில விபத்தில் 36 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-8)

## நேபாள இராணுவத் தளபதியின் அழைப்பை நிராகரித்தார் இந்திய இராணுவத் தளபதி

நேபாளத்திற்கு வருமாறு விடுவிக்கப்பட்ட அழைபபை இந்திய இராணுவத் தளபதி ஜே.ஜே. சிங் நிராகரித்துள்ளார்.

இந்த அழைப்பை நேபாள இராணுவத் தளபதி பியார் ஜங் தபா கடந்த திங்களன்று விடுத்திருந்தார். மேற்படி அழைப்பை ஜே.ஜே.சிங் நிராகரித்தா் என இந்தியச் செய்திப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேபாளத்தில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அந்நாட்டு இராணுவத்தளபதியின் அழைப்பைத் தான் நிராகரிக்கிறார் என ஜே.ஜே.சிங் கூறினார்.

இது தொடர்பாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில் -'பயணங்கள் மேற்கொள்ளும்போது அந்நாட்டின் நிலைவரத்தை அறிந்து சரியான தருணத்தில் பயணம் செய்யவேண்டும்.' - என்றார். (க-8)

## ஈரான் அரசு நிராகரிப்பு

ஈரான் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் வெளியிட்ட கருத்தை நிராகரியபதாக அந்நாட்டு அரசு கூறியிருக்கிறது. ஜனாதிபதி புஷ் முன்னர் எழுப்பிய குற்றச்சாட்டையே மீண்டும் எழுப்பியிருக்கிறார் என்றும்- இவை ஆதாரமற்றவை என்றும்-ஈரான் மேலும் தெரிவித்துள்ளது.

ஈரானில் 1979 இல் நடந்த இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர் அமெரிக்கா ஈரானிலிருந்து அனைத்து செல்வாக்கையும் இழந்துவிட்டது. இந்த விடையத்தை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மறந்துவிட்டார்போலத் தெரிகிறது.

இவ்வாறு ஈரானின் வெளிவிவகார அமைச்சின் சார்பில் பேசவல்ல அதிகாரியான ஹமீத் ரேஸா அஸேவி தெரிவித்தார். (க-8)

# முஷாரப்பின் சுயசரிதை நூல்! அமெ.நிறுவனம் வெளியிடும்

இஸ்லாமாபாத்,பெப்.5

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தனது வாழ்க்கை அனுபவங்களைப் புத்தகமாக எழுதவுள்ளார். அதனை வெளியிடும் உரிமையை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு அவர் விற்றுள்ளார் எனவும் பாகிஸ்தான் செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பயங்கரவாதத்துக்கு எதிராகப் புரிந்து வரும் சர்வதேசப் போர் நடவடிக்கைகளுக்கு முக்கிய ஆதரவாளர் முஷாரப்.

அவர் தனது வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டு எழுதிய புத்தகத்தை வெளியிடும் உரிமையை அமெரிக்க புத்தக வெளியீட்டு நிறுவனமான 'பிரிட்டிஷ் சைமன் அன்ட்சுச்சுஸ்டர்' நிறுவனத்திற்கு வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புத்தகம் 2006ஆம் ஆண்டு விற்பனைக்கு வரும் என வெளியீட்டு நிறுவனத்தின் துணைத் தலைவரும், மூத்த ஆசிரியருமான புருஸ் நிகோல்ஸ் தெரிவித்தார்.

அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் தலைவர் பின்லேடனுடனான ஆப்கான் யுத்தம் குறித்தும், அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடனான தனது உறவு குறித்தும் அந்தப் புத்தகத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதிக்கு ஆதரவாக நடந்ததால் தாம் எதிர்கொண்ட சிக்கல்கள் குறித்தும் அந்தப் புத்தகத்தில் அவர் விவரிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் புத்தகத்தை வெளியிடும் உரிமை எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது என்பது குறித்து எந்த விவரமும் தெரியவரவில்லை. (க-8)

## உலக அரங்கில்

# ஈராக் சுதந்திரமாக இருக்கும் வரை அமெரிக்கர் பாதுகாப்பாக இருக்கலாம்

## தமது இராணுவம் இப்போதைக்கு வெளியேறாது! என்கிறார் புஷ்

வாஷிங்ரன்,பெப்.5

ஈராக் சுதந்திரமாக இருக்கும் வரை அமெரிக்கர்கள் பாதுகாப்பாக இருக்கமுடியும். அந்நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்காக நாங்கள் பாடுபடுகின்றோம். ஈராக் மக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளத் தயாராகும் வரை அமெரிக்க இராணுவம் அங்கிருந்து வெளியேறாது.

- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

ஈராக்கில் இருந்து அமெரிக்க இராணுவத்தை வாபஸ் பெறுவதற்குச் செயற்கையான கால அட்டவணை எதையும் நாங்கள் தயாரிக்கவிலலை. அப்படியோர் அட்டவணையைத் தயாரித்தால், அது தீவிரவாதிகளுக்கு ஒரு துணிச்சலைக் கொடுத்துவிடும்.

மேற்கு ஆசியாவில் உள்ள நமது அணியைச் சேர்ந்த நாடுகளான சவூதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகள் தமது மக்களுக்கு அதிகளவிலான சுதந்திரத்தை வழங்கவேண்டும். அந்த நாடுகள் ஜனநாயக ஆட்சிமுறைக்கு விரைவில் மாறவேண்டும்.

மத்திய கிழக்கில் அமைதி ஏற்பட வழிகாணபித்த எகிப்து, மத்திய கிழக்கில் ஜனநாயகத்திற்குத் திரும்பும் பாதையைக் காட்டவேண்டும்.

மத்திய கிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்டத் தொடர்ந்தும் தீவிரவாதிகளை ஆதரிக்கும் நாடுகளுடன் போராட வேண்டியுள்ளது.

சிரியா தன் பகுதியையும், லெபனானின் ஒரு சில பகுதிகளையும் பயன்படுத்தத் தீவிரவாதிகளுக்கு அனுமதித்துவருகிறது. சிரியா அரசு தீவ்ரவாதிகளுக்கு ஆதரவளிப்பதைக் கைவட்டு, சுதந்திரத்துக்குக் கதவைத் திறந்துவிடவேண்டும்.

இன்று தீவிரவாதத்திற்கு ஊற்றுக்கண்ணாக இருக்கும் ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. யுரேனியத்துக்குச் செறிவூட்டும் திட்டத்தைக் கைவிடச் செய்ய நாங்கள் ஐரோப்பிய தோழர்களுடன் சேர்ந்து முயற்சி மேற்கொண்டுள்ளோம்.

ஈரான் மக்கள் சுதந்திரத்துக்காகத் தவிக்கிறார்கள். அவர்களுக்குப் பக்கபலமாக அமெரிக்கா நிற்கும். அணு ஆயுதம் தயாரிக்கும் வடகொரியாவின் திட்டத்தை கைவிடச் செய்யவே நாங்கள் பாடுபட்டு வருகிறோம்.

இஸ்ரேலும் - பலஸ்தீனமும் அருகருகே அமைதியுடன் இரு தனி நாடுகளாக இருக்க வேண்டும் என்பதுவே எமது நோக்கமாகும். எமது இந்த நோக்கம் விரைவில் நிறைவேறும்.

- இவ்வாறு ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

அவர் ஆற்றிய உரை 53 நிமிடங்கள் வரை நீடித்தது. (க-8)

# ஐந்து பெண்கள் உட்பட 182 இந்தியர் 35 வருடங்களாகப் பாக்.சிறையில்

## அவர்களில் பலர் ஞாபகசக்தியை இழந்துவிட்டனராம்

புதுடில்லி,பெப்.5

பாகிஸ்தான் சிறைச்சாலைகளில் ஐந்து பெண்கள் உட்பட 182 இந்தியர்கள் 35 வருடங்களாகச சிறைவைக்கப்பட்டுள்ளார்கள் என்றும், அவர்களில் பலர் தங்களது சுயநினைவை இழந்துவிட்டனர் எனவும் இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் செய்திவெளியிட்டுள்ளனர்.

54 இந்தியர்கள் பாகிஸ்தான் நாட்டில் சிறைவைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரப்பட்டியலை அண்மையில் இந்திய அரசு, பாகிஸ்தான் அரசுக்கு கையளித்ததையடுத்து பாகிஸ்தான் சிறை அதிகாரிகள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர் எனக் கூறப்படுகின்றது. அதன்பின்னரே 182 இந்தியர்கள் பாகிஸ்தான் சிறைகளில் உள்ளனர் என்ற விடயம் தெரியவந்ததாக இந்திய அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதுதொடர்பாகப் பாகிஸ்தான் அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயம் பற்றி இந்திய அதிகாரிகள் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தான் எல்லைக்குள் தவறுதலாக நுழைந்த ஐந்து பெண்கள் உட்பட 182 பேர் கடந்த 35 வருடங்களாகப் பாகிஸ்தான் சிறைச்சாலைகளில் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 30 பேர் முஸ்லிம்கள். ஏனையவர்கள் இந்து, கிறிஸ்தவ மற்றும் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்களாவர்.

கைதுசெய்தவர்களைப் பாகிஸ்தான் நிர்வாகம் இதுவரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யவோ, விசாரணை செய்யவோ இல்லை.

இந்தக் கைதிகளை விடுவிக்க பாகிஸ்தான அரசு இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்தியதா அல்லது ஒப்பந்தம் செய்துகொண்டதா என்பது குறித்து எதுவித விவரங்களும் எமக்குத் தெரியவில்லை.

இந்தக் கைதிகள் பாகிஸ்தானில் எந்தச் சிறையில் இருக்கிறார்கள், இந்தியாவின் எந்தப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்தும் எமக்குத் தெரியாது.

விவரங்களைக் கைதிகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அவர்களில்பலர் தங்களது ஞாபகசக்தியை இழந்துள்ளனர் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க-8)






# இந்தியப் பிரதமரின் காரணத்தை ஏற்கப் பாகிஸ்தான் மறுப்பு!

இஸ்லாமாபாத்,பெப்.5

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவிருந்த சார்க் நாடுகளின் உச்சிமாநாட்டில் தான் கலந்துகொள்வதில்லை என்பதற்கு இந்தியப் பிரதமர் கூறிய காரணத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது எனப் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

டாக்காவில் நாளை நடைபெறவிருந்த சார்க் மாநாடு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்வதில்லை என்று அறிவித்ததைத் தொடர்ந்து மாநாடு ரத்துச்செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்துப் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் கசூரி செய்தியாளர்களிடம் கூறுகையில் தெரிவித்ததாவது:-

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் டாக்கா பயணத்தை ரத்துச் செய்தமை ஏமாற்றத்தை அளித்துள்ளது. அதற்கு அவர் கூறிய காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கலவரம் எல்லா இடங்களிலும் நடைபெறுகிறது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள், பாகிஸ்தானின் பலுக்கிஸ்தான் பகுதிகளில் அடிக்கடி வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நேபாளம் உட்படப் பல் நாடுகளிலும் இவ்வாறே. இதைக் காரணமாகக் கூறமுடியாது - என்றார் அவர். (க-8)

# பயணிகள் விமானத்தை ஆப்கானிஸ்தானில் காணோம்

காபூல்,பெப்.5

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பயணிகள் விமானம் ஒன்று 104 பயணிகளுடன் காணாமற் போயிருக்கின்றது. இச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

'கெம் ஏயார்' என்ற தனியார் நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமான இந்த விமானம் ஹெறட் என்ற மேற்கு நகரில் இருந்து ஆப்கான் தலைநகர் காபூல் நோக்கிப் பறந்ததாகவும் -

பனிப்படலம காரணமாக அவ்விமானம் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

'ஏயர் போயிங் 738' ரகத்தைச் சேர்ந்த இநத விமானத்தைச் செலுத்தியவர்கள், விமான ஓட்டிகள், பாகிஸ்தானில் பெஷாவர் விமான நிலையத்தில் தரையிறங்க அனுமதி கேட்டனர் என்றும் -

அனுமதி வழங்கப்பட்டாலும் விமானம் நேற்றுவரை வரவில்லை என்றும் அறிவிக்கப்பட்டதாக 'ஜெம் ஏயாரின்' அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விமானம் தமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் தரையிறங்கவில்லை என்று அமெரிக்க இராணுவமும் கூறியது.

காணாமற்போன இந்த விமானத்தைத் தேடும் பணிகளில் நேட்டோ சர்வதேச பாதுகாப்பு உதவிப்படையும் உதவி செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-8)






*இருந்தபோது தெரியாத பெருமிதம்*
*இழந்த பின்னர் தெரிகிறது.*
*விரிந்தபோது அறியாத வாசம்*
*விழுந்த பின்னர் வருகிறது.*

அமரர் விஸ்வப் பிரம்மஸ்ரீ

## கந்தையா - வரதலிங்கம்

## "அப்பு"வின்

## ஆறாத் துயரின் ஓராண்டு நிறைவு

அன்புடையீர்!

இன்று 05.02.2005 சனிக்கிழமை எங்கள் குடும்பத் தலைவர் எமைப்பிரிந்த ஓராண்டு நிறைவுநாளாகும். அவர் நினைவாக எங்கள் இல்லத்தில் நடைபெறும் சமயக்கிரியை யிலும் மதிய போசனத்திலும் தங்களை எம்மோடு உடனிருக்க அழைக்கிறோம்.

அன்புடன்

மனைவி வ.பாக்கியம், மருமகன் கா.செ.பத்மநாதன்,
மகன் புதுவை இரத்தினதுரை மற்றும் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

# இலங்கை சுதந்திரம் பெற்ற தினம் தமிழருக்கு மரண ஓலை எழுதிய நாள்

## ஜனாதிபதிக்கு இடம்பெயர்ந்தோர் மகஜர்

வலி.வடக்கு,பெப்.5

சுதந்திரதினம் என்று தாங்கள் கொண்டாடிக் குதூக லிக்கும் இன்றையநாள் எம்மைப் பொறுத்தவரையில் எமது இனத்திற்கு மரண ஓலை எழுதப்பட்ட கரிநாளாகும் என்று ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங் களின் சமாசம் "பெப்ரவரி 4 ஆம் திகதி அடிமைத்தினம்" என்று தலைப்பிட்டு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை நேற்று அனுப்பிவைத்துள்ளனர். அதில், மேற்கண்டவாறு தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழத்தமிழ் மக்கள் மீது 1948ஆம் ஆண்டிலிருந்து கட்ட விழ்த்துவிட்ட ஒடுக்குமுறையின் உச்சககட்டமாகக் கடநத இருதசாப்தங்களாக வலிகாமம் வடக்கு மக்கள் சொந்த மண்ணில் வாழும் உரிமையை இழந்துள்ளனர்.

வலி.வடக்கில சுமார் ஒரு லட்சம் மக்கள் வாழ்ந்த பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற இரும்புத் திரையால் மூடப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கில் இது போன்ற உயர்பாதுகாப்பு வலயங்கள் பல உள்ளன.

வீடுகளை இழந்து, தொழில்களை இழந்து பத்துப்பன்னிரண்டு அடிச்சதுர முகாம்களில் நடைப்பிணங்களாக வாழும எம்மவர் நிலைமை தங்களுக்கு எப்படித் தெரியப்போகின்றது.

எங்கள் குடும்பங்கள் நாளுக்குநாள் எமது கண்முன்னே அழிந்து கொண்டுபோவதைப் பேய்கள் கண்டாற்கூட இரக்கம் கொள்ளும். தாங்களும் பிள்ளைகளைப் பெற்று வளர்த்த தாய் என்பதால் எங்கள் உணர்வுகளைக் கூறுகின்றோம்.

இதேவேளை, சுனாமியால் வடக்கு - கிழக்கில் அழிக்கப்பட்ட குடிசைகளில் சுமார் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவை வலிகாமம் வடக்கில் இருந்து புலம்பெயர்ந்து கரையோரங்களில் வாழ்ந்து வந்த மீனவ மக்களுடையது என்பது தங்களுக்குத் தெரிந் திருக்க நியாயமில்லை.

இந்நிலையில் - எங்களை வேறு இடங்களில் குடியேறும் படி கேட்க முனைந்துள்ளீர்கள். தங்களை வேற்று நாட் டிற்குச் சென்று ஜனாதிபதியாக இருங்கள் என்று நாம் கேட்பதற்கு ஒப்பான சித்தாந்தம் இதுவாகும்.

எனவே, எம்மை எமது மண்ணில் வாழவிடுங்கள். இல் லையேல் எங்கள் பிறப்புரிமையை வென்றெடுக்க நாம் விரைவில் வழியைத் தேடுவது தவிர்க்கமுடியாததாகும் - என்றுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகளை அவர்கள் யாழ். மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்கள், யாழ். மாவட்ட அரச அதிபர், வலி.வடக்குப் பிரதேச செயலர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளனார். (3-86-203)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் அரசரட்ணம் யோசப்

என் அன்புக் கணவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த் திக்கின்றேன்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்து அனுதாபம் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எனது நெஞ்சம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாளை (06.02.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணி (புதியநேரம்) பரிசுத்த திருத்துவ ஆலயத்தில் நடைபெறும் ஞாபகார்த்த ஆராதனை யிலும், தேநீர் விருந்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஆனைக்கோட்டை வீதி,*
*கொக்குவில்.*

**திருமதி கிளாடிஸ் ஜோசப்**
(மனைவி - பேபி).

*(41729)(42-14-18-24)*

## மூளாய் வேரம் வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

வலி.மேற்கு,பெப்.5

மூளாய் வேரம் வீதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

மூளாய் வேரம் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

மழை காலங்களில் இந்த வீதியூடாகப் பயணிக்கும் மாணவர்களும் பொதுமக்களும் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதற்கிடையில் -

இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மூளாய் ஐக்கிய இளை ஞர் சனசமூக நிலையத்தினர் வலி.மேற்கு பிரதேச செயலரைக் கடித மூலம் கேட்டுள் ளனர். (எ-175)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

உருவாய்
04
-
11
-
1922



அருவாய்
06
-
01
-
2005

## அமரர் வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)

**அன்பு காட்டி அறிவு ஊட்டி**
**இன்பமுடன் நாம் வாழ வழிகாட்டிய ஐயா!**
**உங்கள் வாழ்வும் செயலும் நினைவும்**
**எமக்கு வழி காட்டட்டும்**

*முருகேச பண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு.*

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(41743)


Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7608966 முதல் 7620554 வரை
சீட்டிழுப்பு இல. 106 திகதி 3-2-2005

வெற்றி எண்கள் **9 9 7 9 0 1** சுப்பர் எண் **23**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,77,85,525/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,77,85,525/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 50,000/- | 4,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 98 | 5,000/- | 4,90,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,008 | 500/- | 5,04,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,012 | 50/- | 5,00,600/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 99,220 | 10/- | 9,92,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 5,000/- | 50,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 97 | 1,000/- | 97,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,007 | 100/- | 1,00,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,918 | 20/- | 1,98,360/- |
| மொத்தம் | 121,388 | | 59,35,460/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 59,35,460/-

இந்த திங்கட்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,80,63,925/-**

தொடர் இல. 6660773 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 07 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7609720-4-30
7610222-5-58
7609815-1-94
7610656-6-65
7613301-5-55
7615567-8-74
7614704-5-52
7619758-3-07

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## அம்மன் ஆலயங்களில் ஆராதனைகள்

அபிராமிப்பட்டர் தினமாகிய எதிர்வரும் 8 ஆம் திகதி சகல அம்மன் ஆலயங்களிலும் விசேட ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

அன்று நண்பகல் வழக்கம்பறை அம்பாள ஆலயத்திலும் பிற்பகல் சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலும், மாலை சுழிபுரம் கம்பளை அம்பாள் ஆலயத்திலும் ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

ஆராதனைகளில் அபிராமி அந்தாதி பாடப்பட்டு அம்பாள் வீதியுலா இடம் பெறும். (8-28-202)

## சிறப்புற நடைபெற்ற கால்கோள் விழா

ஸ்கந்தபுரம் அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றிற்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.

கடந்த 27ஆம் திகதி மேற்படி பாடசாலை அதிபர் பா.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மாணவர்கள் அருகிலுள்ள ஆலயத்தில் இருந்து மலர் மாலை அணி வித்து பாடசாலை மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு கௌரவிக் கப்பட்டனர்.

பின்னர் அங்கு கலை நிகழ்வுகள் நடை பெற்றன. (எ-381-203)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை நித்தியானந்தம் (நித்தி)

(ஓய்வுபெற்ற சலுசலா முகாமையாளர்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நித்தியானந்தம் (நித்தி) 02.02.2005 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதிகளின் அன்பு மகனும் திரு.திருமதி கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் பூபதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான செல்லத்துரை வைரமுத்து, செல்லத்துரை சச்சிதானந்தன், சிவபாலசிங்கம் செல்வராணி மற்றும் செல்லத்துரை விவேகானந்தன் (க்னடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகந்தி (லண்டன்), ஜெயந்தி (கனடா), தர்ஷினி (கனடா), நந்தினி (கனடா), யாமினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் - சிவகுமாரன் (லண்டன்) ரங்கராஜன் (கனடா), சிவகுமார் (கனடா), இந்திரகுமார் (கனடா), கண்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் - சர்மிகா, நிவேக்கா, சகானா, தக்ஷனா, றோஜெனா, லக்ஷிகா, சரவணா, லாவண்யா, சரண்யா, சௌமியா, இந்துஜா, கோபிகன், கிஷாந், பிரவீந் ஆகியோரின் அன்புப் பேரனும் - சங்கீதா (யாழ்.பல்கலைக்கழகம் - முகாமைத் துவ வணிகபீடம்), சுஜீத்தா, வைகுந்தன் (யாழ்.பல்கலைக்கழகம் - மருத்துவ பீடம்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06-02-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நாகலிங்கம் வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில.*

(41737)(21-19-18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி சௌந்தரநாயகி கனகலிங்கம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி சௌந்தரநாயகி கனகலிங்கம் நேற்று (04.02.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப் பிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் அருமை மருமகளும் சௌந் தரராஜன் (பிரான்ஸ்), ஜெயநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கனகலிங்கத்தின் (உரிமையாளர், கனகலிங்கம் ரெலி கொம், K.M.T.) அன்பு மனைவியும் குகமதன், குகரதன், தர்சிகா, சாந்திகா ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.02.2005) வெள்ளிக் கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகேச பண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு.* (41744) (24)

தகவல்:
**ச.கனகலிங்கம் (கணவர்).**

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## யுத்தத்துக்கான சமாதானம் இது!

தமது விநோதமான கொள்கைக் கோட்பாட்டுப் போக்கினால் கடந்த ஒரு தசாப்த காலமாக இலங்கை அரசியலைக் குழப்போ குழப்பு என்று குழப்பியடித்த பெருமை இலங்கைத் தீவின் ஜனாதிபதிக்கு உண்டு.

இனப்பிரச்சினை பெரும் யுத்தமாக வெடித்த காலத்தில் அமைதிப் பேச்சு வாயிலாக, சமாதான வழியில், சமரசத் தீர்வு காண்பேன் என்று பிரகடனப் படுத்தி அதன் மூலம் ஆட்சியைப் பிடித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சமாதானத் தேவதையாகத் தன்னைக் காட்டிக் கொண்டு அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகா அதன் பின்னர் தமது உண்மைச் சொரூபத்தை - போர் வெறி முகத்தை - அம்பலப்படுத்தினார்.

அதன் மூலம், ஈழத் தமிழர்களுக்கு எதிராக மிகக் கொடூரமான போரைத் தொடுத்து, பேரழிவுகள் மூலம் தமிழர் தேசியத்தை சிதைக்கும் பேரழிவுச் சாதனையைப் புரிந்த சரித்திரப் பெருமையை அவர் சுவீகரித்துக் கொண்டார்.

தமது போர் வெறிப் போக்கை நியாயப்படுத்த புதிய - விநோதமான - கோட்பாடு ஒன்றையும் அவர் பிரகடனப்படுத்தினார். 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற அவரின் 'தத்துவம்' தான் அது.

சமாதானத்தின் பெயரால் ஈழத்தமிழர்கள் மீது அவர் தொடுத்த மிக மோசமான போர் அதன் உச்சக் கட்டத்தை எட்டியபோதுதான், அதிர்ஷ்டவசமாக அவரது அரசு நாடாளுமன்றப் பலத்தை இழந்து கவிழ்ந்தது. ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கட்டில் ஏறியது.

அந்த மாற்றம் இரண்டு தசாப்த கால இனப் போருக்கு தற்காலிகமாகவேனும் முற்றுப்புள்ளி வைத்து, ஒரு யுத்த நிறுத்தத்தை உருவாக்க வழி செய்தது.

கனன்று கொண்டிருந்த துப்பாக்கிகள் இப்போது ஓய்ந்துவிட்டன. யுத்தமும் இல்லை; சத்தமும் இல்லை; வெடிகுண்டுகளுக்கும் ஓய்வு. உயிரழிவு, உடைமை இழப்பு எல்லாம் போரின் பெயரால் நடப்பதில்லை.

இந்த அமைதி நிலையை நிரந்தர அமைதியாக சமாதானமாக - மாற்றுவதற்கு ஐ.தே.முன்னணி அரசு முயன்று கொண்டிருந்த போது அதைக் குழப்பும் வகையில் நான்கு வருடங்கள் முன்னதாகவே அந்த அரசை வீட்டுக்கு அனுப்பினார் சந்திரிகா அம்மையார். பௌத்த, சிங்கள மேலாண்மைவாதிகளுடன் சேர்ந்து கொண்டு நாடாளுமன்ற ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டார்.

சமாதான வேளையில் - அமைதிச் சூழலில் - ஆட்சியை மீண்டும் தனது கைக்குள் கொண்டு வந்த ஜனாதிபதி சந்திரிகா, இப்போது ஒரு புறம் வெளிப்படையாக - சமாதானம், நிரந்தரத் தீர்வு, நிலையான அமைதி பற்றிப் பேசிக்கொண்டு, மறுபுறம் - மறைவில் - தமது போர்வெறிப் போக்கை மீண்டும் நடைமுறைப்படுத்த முயல்கின்றார்.

முன்னர் தமது யுத்தத் தீவிர நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்காக 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற கோமாளித்தனமான கொள்கைப் போக்கைப் பிரகடனப்படுத்திய ஜனாதிபதி, இப்போது சமாதான வேளையிலும் தமது போக்கை மாற்றுகின்றார் இல்லை.

இப்போதைய அமைதி நிலையை 'யுத்தத்துக்கான சமாதானம்' ஆகப் பயன்படுத்த அவர் எத்தனிக்கின்றார்.

ஆழிப்பேரலையால் நாடே அழிந்துபோய் நிற்க, அந்த அழிவிலிருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்குச் சர்வதேச சமூகம் தரும் உதவிமூலம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி, அதைப் பயன்படுத்தி யுத்தத்தின் பக்கம் தனது பார்வையைத் திருப்பப் பார்க்கின்றார்.

ஆழிப்பேரலை அழிவுக்கு மத்தியிலும் படைகளுக்கான ஆயுதக் கொள்வனவுக்கென அதிகாரிகளை ஈரானுக்கு அனுப்பியதும் -

அமெரிக்காவிடமிருந்து சில விமானங்களைப் பெறுவதற்கு இலங்கை விமானப்படை முயல்வதாகச் செய்திகள் வெளியாகியிருப்பதும் -

ஆழிப்பேரலை அனர்த்தத்திலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய இந்தத்தருணத்தில் அதற்குமிக முக்கியமாக அவசியப்படுகின்ற மீள் கட்டுமானத்துக்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் செயற்பாட்டில் சிரத்தை கொள்ளாமல் - அந்தப் பணியை முன்னெடுக்காமல் - இராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்யும் நோக்குடன் ஜனாதிபதி குமாரதுங்க நாளை மறுதினம் பாகிஸ்தான் புறப்படுவதும்-

இதுபோன்ற ஜனாதிபதியின் இன்னோரன்ன நடவடிக்கைகளும் -

இராணுவ மேலாண்மைப் போக்கில் பித்துப் பிடித்தவர் போலிருக்கும் ஜனாதிபதியின் செயற்பாட்டை வெளிப்படுத்துகின்றன; அம்பலப்படுத்துகின்றன.

முன்னர் போர்க்களத்தில் சமாதானத்துக்காக யுத்தம் நடத்தியவர் இப்போது அமைதி வேளையில், யுத்தத்துக்காக சமாதானத்தைப் பயன்படுத்துகின்றார்.

இப்போக்குத் தொடர்வது இலங்கைத் தீவுக்கு விபரீதத்தை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

# கச்சதீவுக்குச் செல்லும் படகுகள் கடற்படையிடம் பதிவது அவசியம்

## நெடுந்தீவு உதவி அரச அதிபர் அறிவிப்பு

நெடுந்தீவு,பெப்.5

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இம்முறை இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த உற்சவ காலங்களில் பயணிகள் படகுச்சேவையில் ஈடுபட விரும்பும் படகு உரிமையாளர்கள் முற்கூட்டியே கடற்படையினரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு நெடுந்தீவு உதவி அரச அதிபர் பற்றிக் நிறைஞ்சன் அறிவித்துள்ளார்.

இது விடயமாக உதவி அரச அதிபர் தெரிவிக்கையில்:-

இம்முறை அதிகளவு பக்தர்கள் இந்த உற்சவத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. பயணிகளுக்கான படகுப் போக்குவரத்துச் சேவைகளையும் அதிகரிக்கவேண்டியுள்ளது.

எனவே, போக்குவரத்துச் சேவையில் ஈடுபடவிரும்பும் படகு உரிமையாளர்கள் எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் தமது படகுகளை குறிகாட்டுவான் துறையிலும், நெடுந்தீவுத்துறையிலும் தினமும் காலை 10 மணிமுதல் மாலைவரையுள்ள வேளையில் படகு தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பித்து பதிவுசெய்துகொள்ள வேண்டும்.

பதிவுகள் முடிந்த பின்னர் கடற்படையினரால் படகுகள் பரிசோதனைக்குட்படுத்தப்படுவதுடன் சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான சான்றிதழும் வழங்கப்படும்.

(எ-112)

## துர்க்காபுர இல்ல 23ஆவது ஆண்டு நிறைவு விழா

வலி.வடக்கு,பெப்.5

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் ஸ்ரீ துர்க்கா தேவி அன்னபூரணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர் ஆஸ்ரீஸ கந்தமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை சிவஸ்ரீ இ.சுந்தரரேஸ்வரக்குருக்கள் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஓய்வுபெற்ற அதிபர் செல்வி சி.கெங்கா மலர்தேவி ஆகியோர் வழங்கவுள்ளனர். (10-86)

## யாத்திரிகர்கள் குடிதண்ணீரை எடுத்துச்செல்ல அறிவுறுத்து

நெடுந்தீவு,பெப்.5

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்திற்குச் செல்வோர் தமக்குத் தேவையான குடிதண்ணீர், உணவு வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்லவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உற்சவ தினங்களில் தற்காலிகமாகத் தேநீர்க்கடை அமைக்க விரும்புவோரும் மற்றும் இதர கடைகளை அமைக்க விரும்புவோரும் அதற்கான அனுமதியை முற்கூட்டியே நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் பெற்றுக்கொள்ளவேண்டும்

இந்த உற்சவ தினங்களில் ஆலயச் சூழலில் களியாட்ட நிகழ்வுகளில் ஈடுபடுவதோ, ஆலயப்பகுதிக்கு மதுபான வகைகளை எடுத்துச் செல்வதோ .முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று நெடுந்தீவு உதவி அரச அதிபர் எம்.பற்றிக் நிறைஞ்சன் அறிவித்துள்ளார்.

இரு தினங்கள் நடைபெறவுள்ள உற்சவகால நிகழ்வில் சனிக்கிழமை மாலை கொடியேற்றமும் தொடர்ந்து திருப்பலி வழிபாடும் நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் புனிதரின் ஆசீர்வாதமும் இடம்பெறும்.(எ-112)

## மேலும் ஒரு தொகுதியினருக்கு குடும்பநல அலுவலர் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் மற்றுமொரு தொகுதி மாணவ குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்குரிய பயிற்சிகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகின.

இதில் 56 மாணவ குடும்பநல உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர் என்று மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

மூன்று மாதம் குறுகிய காலப்பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ள இவர்கள் மூன்று மாதங்களின் பின்னர் வெளிக்களப் பணிகளுக்காக அமர்த்தப்படவுள்ளனர்.

இதேவேளை, முதல் ஒரு தொகுதி மாணவ குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவர்கள் ஒரு வருட பயிற்சியைப் பூர்த்தி செய்ததன் பின்னர் வெளிக்களப் பணிகளுக்கு அமர்த்தப்படுவார்கள் என்றும் பிரதிப்பணிப்பாளா மேலும் தெரிவித்துள்ளார்.

(10-13)

## 25 மையக் கிராமங்கள் தெரியப்பட்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

வலி.மேற்கு.பெப்.5

இரண்டாம் கட்ட நியாப் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 25 மையக் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து மையக் கிராமங்கள் தெரிவுசெய்யப்படும்.

பிரதேச செயலக ரீதியாகத் தெரிவு செய்யப்படவுள்ள மையக் கிராமங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

சாவகச்சேரி - 05, கோப்பாய் - 03, சங்கானை - 02, உடுவில் - 02, சண்டிலிப்பாய் - 02, கரவெட்டி - 02, நெடுந்தீவு - 01, காரைநகர் - 01, நல்லூர் - 01, ஊர்காவற்றுறை - 01, வேலணை - 01, யாழ்ப்பாணம் - 01, மருதங்கேணி - 01, தெல்லிப்பழை - 01, பருத்தித்துறை - 01.

இத்திட்டத்தின் கீழ் மையக்கிராமங்களிலுள்ள வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதுடன், பொது மண்டபங்கள், குடிதண்ணீர்க் கிணறுகளும் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு ஜீவனோபாய கடனுதவியும் வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலகங்களிலுள்ள திட்டமிடல் பகுதியினர் மையக் கிராமங்களைத் தெரிவுசெய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-175)

## புதிய கட்டட நிலப் பகுதியை நிரப்ப உவர்த்தன்மை கொண்ட மணல்

### வலி.கிழக்குப் பாடசாலைச் சமூகம் குற்றச்சாட்டு

அச்சுவேலி,பெப்.5

வலிகாமம் கிழக்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பாடசாலைக் கட்டடங்களின் நிலப்பகுதியை நிரப்புவதற்கு தரம் குறைந்த மணல் பயன்படுத்தப்பட்டு வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

வல்லைக் குடாக்கடலின் நீரேரிப்பகுதிகளில் இருந்து அகழப்படும் உவர்த்தன்மை கொண்ட மணலே இவ்வாறு பயன படுத்தப்படுவதாகவும் கூறப்பட்டது.

உவர்தன்மை கொண்ட மணலைப் பயன்படுத்தி நிலங்களை உயர்த்துவது கட்டடங்களின் தரைப்பகுதியை விரைவில் செயலிழக்கச் செய்துவிடும் என்றும் -

மழைக்காலங்களில் நிலம் ஈரலிப்படைந்து மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையை ஏற்படுத்தி விடலாம் என்றும் - சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்த விவகாரம் குறித்து, அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால் பகுதிப் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடு செய்தும், இதுவரையில் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-11-ரி)

## வெங்காயச் பயிர்களில் ஊதாப்புள்ளி நோய்

தற்போது இரவு நேரங்களில் அதிகமாகப் பெய்துவரும் பனியின் காரணமாக வெங்காயச் பயிர்களில் 'ஊதாப்புள்ளி' நோயின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது.

பங்கசினால் ஏற்படும் இந்த நோய் இலைகளில் மஞ்சள் நிறப்புள்ளிகளை ஏற்படுத்துகின்றது. அதிகளவு புள்ளிகள் ஏற்படும்போது இலையின் உணவுத் தயாரிப்பும் தடைப்படுகின்றது.

இந்நோய்க்கான கட்டுப்பாடு தொடர்பாக உதவி விவசாயப்பணிப்பாளர் ச.சின்னத்துரை தெரிவிக்கையில்:-

மேற்படி நோய்க்கான அறிகுறிகள் காணப்படும்போது, 'டைக்கோனில்' என்னும் பங்கசு நாசினியை 'செவெக்ரன்' என்னும் ஒட்டியுடன் கலந்து விசிறவும். இந்த ஒட்டியைப் பாவிப்பதனால் வெங்காயத்தாளில் பங்கசு நாசினி மருந்தின் நிலைத்து நிற்கும் ஆற்றல் அதிகரிக்கின்றது - என்றார்.

இது தொடர்பாக மேலதிக விவரம் தேவைப்படுவோர் தமது பகுதி விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (10-202)

### நாளை

*தை 24*
*ஞாயிற்றுக்கிழமை*
*(06.02.2005)*
*திதி : துவாதசி*
*நண்பகல் 12.04 வரை*
*நட்சத்திரம் : பூராடம்*
*பின் இரவு 03.13*
*பிரதோஷ விரதம்*
சுபநேரம் : *09.35 - 11.05*
ராகுகாலம்: *05.05 - 06.35*
*(யாவும் பழைய நேரப்படி)*

### உதாவாக்கு

பிறர் உரிமையை பறிப்பது எவ்வாறு குற்றமோ அவ்வாறு நம் உரிமை பறிபோவதைப் பார்த்துக் கொண்டு இருப்பதும் பெருங்குற்றம்.

## ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் நாளை யாழ்ப்பாணம் வருகை



யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆங்கில வள நிலையமும் கல்விக் கூடமும் திறந்து வைக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் ஈவன்ஸ் யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தரவுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினருடன் யாழ்.மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்புத் தலைவர் ரி.ரவிசங்கர் மற்றும் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் நிதியத்தைச் சேர்ந்தவர்களான எஸ்.ஸ்கந்ததேவா, எஸ்நவரட்ணம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (10-202)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



திருக்கணித பஞ்சாங்க ஆசிரியரும்
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆட்சியின் தலைசிறந்த
சிவாச்சாரியாரும்
சோதிட விற்பன்னரும் சமய, சமூகப்
பணிகளில் ஈடுபட்டுவருபவருமாகிய
**சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள்**
அவர்கள் "கலாபூஷண" விருது
பெற்றதைப பாராட்டுவதோடு இன்னும்
பல விருதுகள் பெற்றுப் பல்லாண்டு
காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**கல்வயல், மட்டுவில் இளைஞர்மன்றம்.**

(41720)(42-18-14)


## 39 வறிய குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சு விநியோகம்

வலி.மேற்கு,பெப்.5

சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 'மூவிலமான்டோ' நிறுவனத்தினரால் கோழிக்குஞ்சுகள் வழங்கப் பட்டன.

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் மத்தி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச்சேர்ந்த வருமானம் குறைந்த - வசதிகளற்ற - 39 குடும் பங்களுக்கே இவ்வாறு சுயதொழில் முயற் சியை ஊக்குவிக்கும் முயற்சியாக கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பலகிராம அலுவலர் பிரிவுகளில் மூவிலமான்டோ நிறுவனத்தினர் வசதிகளற்ற குடும்பங்களுக்கு பலதரப்பட்ட அபிவிருத்தி உத விகளை வழங்கி வருவது தெரிந்ததே.

(எ-175)


**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai, Jaffna, Srilanka**

The following Courses will commence on 7 Feb. 2005
1. Diploma in Civil Draughtsmanship
*Duration:* 1 year (Full time) Fees: 2,000/=
2. Certificate in Auto CAD
*Duration:* 4 Manths (Part time) Fees 1,250/=
Facilities: Library, Hostel, Sports

*FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:-*

**Director**
**Jaffna College Institute of Technology,**
**Vaddukoddai.**
T.Phone: 060 2213139 E.Mail:jcit@sltnet.lk
(40802)(42-24-18)



## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 09 - 1920



மறைவு 02 - 02 - 2004

**அமரர் நன்னித்தம்பி நடராசா**
(பிரபல வெங்காயத் தரகர்)

ஆண்டு ஒன்று நகர்ந்தது - ஆயினும்
உங்கள் அன்புத் திருவுருவம் என்றும் எம் கண்முன்!
வேண்டிய வரம் தரும் பருத்தியானே - மீண்டும்
பிறப்பிருப்பின் அவரை எம்மிடம் சேர்த்துவிடு!

இணுவில் மேற்கு,
இணுவில்.
(41719)(42-14-18)

**குடும்பத்தினர்.**
(மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்)


## வீதி புனரமைப்பு

வலி.மேற்கு,பெப்.5

மூளாய் மேற்கு கம மாலைச் சந்தியில் இருந்து பொன்னாலை தெற்கு வரை செல் லும் வீதி நீண்டகால இடைவெளிக்குப் பின் னர் புனரமைக்கப் பட்டுள்ளது.

வலிகாமம் மேற் குப் பிரதேச சபையி னர் இந்த வீதியினைப் புனரமைத்துள்ளனர். குறிப்பாக மழை காலங் களில் போக்குவரத் துச் செய்யமுடியா மல் குண்டும் குழியு மாகக் காட்சியளித்த இவ் வீதியைத்திருத்தி யமைத்தமைக்காகப் பிரதேச சபையினருக்கு இப் பகுதி மக்கள் நன்றி தெரிவித்துள் ளனர். (எ-175)


புதிய பரிமாணத்தில் பூர்த்தியாகும் ஓராண்டு
05.02.2005

**சிறி சிவாஞ்சனா**
**நகையகம்**



**அழகுக்கு அழகு செய்யும் அசல் 22 கரட்**
**தங்க நகைகளுக்கு அஞ்சாமல் நாடுங்கள்!**

*பெயர் மாறி, இடமாறி பெருவெற்றி நடைபோடும் ஓராண்டுப் பூர்த்தி கண்ட முன்னைய அர்ச்சனாவான சிறி சிவாஞ்சனா அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நவில்கின்றார் தனது நன்றியை!*

புதிய முகவரி:
சிறி சிவாஞ்சனா நகையகம்.
149/A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.: 222 5481

**சி.சிவமூர்த்தி**
உரிமையாளர்.

(சி-40800)(24-14-18-42)

**முக்கிய அறிவித்தல்:**
முன்னைய *அர்ச்சனா* நகையகமே பெயர், இடம் மாற்றப்பட்டு இப்போது *சிறி சிவாஞ்சனா* நகையகம் என இயங்கி வருகின்றது என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பின் நிருவாகத்தின் கீழ்

# இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
# இலவச ஆங்கில வள நிலையமும் கல்விக் கூடமும்

London Sri Kanaga Thurkkai Amman

**FREE ENGLISH RESOURCE AND LEARNING CENTER**

**காலம் : 06.02.2005 ஞாயிற்றுக் கிழமை, பிற்பகல் 2.00 மணி**

**இடம் : இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலைய கட்டடம். 401 / 1, கஸ்தூரியார் வீதி, யாழ்.**

**விசேட அதிதிகள்**

**திரு.றோபேர்ட் . ஈவன்ஸ்**
*ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்.*

**திரு.சி.இளம்பரிதி**
*பொறுப்பாளர் அரசியற்றுறை, யாழ்.மாவட்டம்*

**திரு.எஸ்நவரட்ணம்.**
*இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் நிதியம்.*

**திரு.ரி.ரவிசங்கர்**
*தலைவர்,*
*தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு.*

**திரு.எஸ்.ஸ்கந்ததேவா.**
*இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் நிதியம்.*

**ஆர்வலர்களை அன்போடு அழைக்கின்றோம்**


**தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு**

TAMILita.org

TAMIL INFORMATION TECHNOLOGY ASSOCIATION

# 9வது நிறுவன தின விழாச் சிறப்பிதழ்

## 05.02.2005




# INSTITUTE OF INFORMATICS STUDIES

# 100, Clock Tower Road, Jaffna.

# 10வது ஆண்டில் கால்பதிக்கும் IIS



### IIS தொடர்ந்தும் பல்லாண்டு காலம் தனது சேவையை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல வாழ்த்துகிறேன்

யாழ். மாவட்டத்தில் தற்போது தகவல் தொழில் நுட்பத்துறையில் பெரும் பங்காற்றிவரும் தகவல் தொழில் நுட்ப நிறுவனமானது (IIS) 05.02.2005 இல் தனது 9வது ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டும் அதனை முன்னிட்டு சிறப்பிதழ் ஒன்றினை வெளியிடுவதையிட்டும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 02.04.1996 இல் ஆரம்பிக்கப்பட்ட இத் தகவல் தொழில் நுட்ப நிறுவனம் (IIS) தற்போதைய காலகட்டத்தின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்பவும், இம்மாவட்டத்தினுடைய சமுதாயம் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் கணனியியல் சம்பந்தமான அறிவியல் துறையின் தேவைக்கேற்பவும் யாழ். நகரப்பகுதியில் தனது சேவையை விஸ்தரித்துள்ளது. இந்நிலையில் இந்நிறுவனமானது அண்மையில் நடாத்தப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான பயிற்சித்திட்டத்தில் பெரும் பங்காற்றியமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

மேலும் இந்நிறுவனத்தால் கடந்த கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்ட மாணவர்கள் உயர்கல்வியை தொடர்வதற்கேற்ற வகையில் பிரித்தானிய Edexcel நிறுவனத்தின் BTEC HND கற்கைநெறியானது எமது மாணவர் சமுதாயத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதுடன், 10வது ஆண்டு செயற்பாட்டினை ஆரம்பிக்கவுள்ள இக்கல்வியாண்டில் சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றுடன் இணைந்து முகாமைத்துவத் துறையில் முதுமானிக் கற்கை நெறியினை ஆரம்பிக்கவுள்ளதும் பெரு மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ்வாறு தொழில்நுட்ப துறையில் பல்வேறுபட்ட அறிவியல் கற்கை நெறிகளை அறிமுகம் செய்து வரும் இத் தகவல் தொழில்நுட்ப நிறுவனமானது கணனியியல் துறையின் முக்கியத்துவத்திற்கேற்ப தொடர்ந்தும் பல்லாண்டு காலம் தனது சேவையை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**க. கணேஷ்,**
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.



### IIS நிறுவனத்தின் பெரும் பங்களிப்பு

இந்த நிறுவனம் ஒன்பது அகவையை அடைந்து நிறுவன தின விழாவை நடத்துவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். இன்று உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. அதற்கு அடிப்படையாக அமைவது தகவல் தொடர்பு முறைமை களேயாகும். விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளிலே இன்று பலராலும் பேசப்படும் ஒரு விடயமாகத் தகவல் தொழில்நுட்பம் (Information Technology) காணப்படுகின்றது.

எமது நாட்டில் இன்னும் இத்துறை அபிவிருத்தி அடைய வேண்டியுள்ளது. யாழ். குடாநாட்டில் IIS நிறுவனத்தின் பங்களிப்பு இத்துறை வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டுள்ளது. இன்னும் பயன்பட வேண்டும்.

இந்நிறுவனத்திலே பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி ஊக்குவிப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இதனால் பயிற்சி பெற்றவர்கள் பயனடையப் பெரு வாய்ப்புக்கள் உண்டு.

இந்நிறுவனத்தின் 9வது நிறுவன ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் எஸ். மோகனதாஸ்**
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

### மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துக்கள்

சர்வதேச ரீதியிலே இன்று வளர்ச்சியடைந்து வருவதும், உலகின் செயற்பாடுகள் முழுவதையும் இணைக்கக் கூடிய அறிவியல் வளர்ச்சியின் உச்சப் படியான தகவல் தொழில்நுட்பத்தினை யாழ்ப்பாண மண்ணில் புகுத்தி வேரூன்ற வைத்த இந்நிறுவனம் படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று தனது 10வது ஆண்டினுட்புக முயல்கிறது.

இந்நிறுவனத்தின் 9 வருட காலங்களில் நிறைவானதும், நிச்சயமானதுமான தகவல் தொழில்நுட்பக் கல்வியைச் சிறார்கள், மாணவர்கள், உயர்தரக்கல்வி பயிலும் மாணவர்கள், பல்கலைக்கழகமாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், ஆகிய மட்டங்களில் பயிற்றுவித்து வருகின்றனர். புலமைப்பரிசில்கள் மூலம் இலவசமாகவும் தகவல்தொழில்நுட்ப அறிவைப்புகுத்தி வருவதுடன் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து உயர் கல்விக்குரிய வாய்ப்புக்களை சர்வதேசதொடர்புகள் மூலம் ஏற்படுத்திவருகின்றது

தொடர்ந்தும் இந்நிறுவனம் வளர்ந்து அறிவைப்பரப்பும் ஒரு கல்விப்பீடமாக வளர எனது மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்வதில் மனநிறைவடைகின் றேன்.

**திருமதி. எஸ். மகாலிங்கம்**
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



### The Message from the Association of Computer Training Organisations (ACTOS)

It gives me great pleasure to pen this message of congratulation to IIS on their reaching the milestone of 10 years. Having been associated with Institute for the past few years. I have observed the steady growth of the Institute from their humble beginning to the present status. This is the culmination of the hard work of over the years by Mr. Vignesh and his dedicated staff. Mr. Vignesh mission was to give the best ICT education to the Jaffna District at an affordable price.

IIS has always maintained high standards in the field of IT and would. I am sure continue to do so in the future.

I would like to wish Mr. Vignesh and the Institute all success in the future.

**David P. Dominic**
Executive Director
Association of Computer Training Organisations
Colombo 7, Sri Lanka.

### The Message from the Edexcel Country office.

Edexcel International, the UK based leading innovative force behind academic and vocational qualifications worldwide, has partnered with IIS - Jaffna to introduce the internationally recognised, highly-rated BTEC Higher National Diploma (BTEC HND) for Computing, Software Engineering and BIT. The BTEC HND qualifications, offered in 105 countries, have international currency; students can transfer globally for vocational or university programmes around the world. It forms a succinct entry route into 2nd/3rd year of first degrees in most of the universities in the US, UK, Australia, and Canada among others. BTEC syllabuses and qualifications are internationally accredited, recognised and respected by employers and educationalists alike. These qualifications equip students with the vital knowledge, skills and confidence to meet the challenges of work in a global market. The Higher National Diplomas are the flagship qualifications of Edexcel. Internationally BTEC and London Examinations, under Edexcel can be found in 105 countries around the world. BTEC HNDs are normally of 1000-guided teaching-learning hours and the course contents are generally covered in approximately 2 years time.

IIS - Jaffna is the first Institution in the North & East to offer the BTEC HND qualification and has met with immediate recognition and success. IIS Jaffna Has been conducting ICT related qualifications in Jaffna since 1996 and we are pleased to have entered into a partnership with IIS Jaffna to offer these type of career and vocational programs which breed confident youngsters who are the future professional leaders in the competitive working environment.

**Ishan Sidique**
BTEC Services Manager
( Sri Lanka , Maldives & Mauritius)
Edexcel International



### IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி

மாறிவருகின்ற இத்தகவல் தொழில்நுட்ப உலகுக்கு ஏற்ற வகையில் எமது மாணவர்களையும் தயார்ப்படுத்த வேண்டிய ஓர் பாரிய பொறுப்பு எமக்கு உண்டு. அப்பொறுப்பினை மிக நன்கு உணர்ந்து கடந்த 9 ஆண்டுகளாக எமது மாணவர்களை தகவல் தொழில்நுட்ப துறையிலே பயிற்றுவித்து வருகின்றோம். எமது நிறுவனத்தின் ஆரம்ப காலத்தில் போரின் கோரப்பிடிக்குள் சிக்குண்ட எமது மாணவர்களுக்கு அவ்விக்கட்டான காலப்பகுதியில் காலத்தின் தேவையினை நன்கு உணர்ந்து எம்மால் இயன்றளவு சிறந்த சேவையினை வழங்கியிருந்தோம்.

எமது மாணவர்களின் எதிர்காலத் தேவையினை நன்கு ஆராய்ந்து சர்வதேச அங்கீகாரம் உள்ள ஓர் உயர்கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது போட்டி மிகுந்த வேலை வாய்ப்புச் சந்தையினை எதிர்கொண்டு கௌரவமான வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையிலோ மிக நன்கு திட்டமிடப்பட்டு காலத்திற்குக் காலம் புதிய புதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தி வருகின்றோம்.

டபிள் ஐ எஸ் என்னும் செல்லப் பெயருடன் கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க நிறுவனமாய் குடாநாட்டு மாணவர்களின் மனங்களில் விளங்கிவரும் நாம் குடாநாட்டு மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாய் அவர்களின் வளமான ஓர் எதிர்காலத்தின் வழிகாட்டியாய் என்றும் இந்த IIS விளங்கும் என கூறிக் கொள்கின்றோம்.

**திரு. கே. ,விக்னேஸ்**
இயக்குநர், IIS, யாழ்ப்பாணம்.

## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் (வ-து)

### கைதடி

# கூறுவிலை கோரல்

எமது சங்கத்தால் ஆரம்பிக்கப்படவிருக்கும் எரி பொருள் விற்பனை நிலையக் கட்டடத்திற்குக் கீழ்க் காணும் வேலைகளுக்குக் கூறுவிலை கோரப்படு கின்றது.

(1) கூரைவேலை, கதவு, ஜன்னல் வேலை- இதற்கான மூலப்பொருள்கள் சங்கத்தால் வழங்கப்படும். கூலி ஒப்பந்தத்திற்கு மட்டும் கூறுவிலை கோரப்படுகின்றது.

(2) அலுமினிய இணைப்பிலான கண்ணாடி பொருத்துதல் -இதற்கு மூலப்பொருள்கள் யாவும் ஒப்பந்தகாரரே கொண்டுவருதல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களைத் தலைமையகத் தில் கடமை நேரத்தில் ரூபா 100/- செலுத்திப் பெற் றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்தினைத் தபால் உறையினுள் இட்டு, இடது பக்க மேல் மூலையில் *எரிபொருள் விற்பனை நிலையக் கட்டடப் பகுதிக கான கூறுவிலை* என்பதனை எழுதி *"தலைவர், தென்.மேற்கு ப.நோ.கூ. சங்கம், கைதடி"* என விலாசமிட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பவும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 11.02.2005 நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக. கட்டட மாதிரி வரைபடம் தலைமையகத்தில் கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

- பொது முகாமையாளர்.

தென்.மேற்கு ப.நோ.கூ.சங்கம்
மானிப்பாய் வீதி, கைதடி. (சி-40797)

## ஒரு வருட நினைவலைகள்

பிறப்பு 11 - 08 - 1940



இறப்பு 18 - 01 - 2004

அராலி அம்பாள் சனசமூக நிலையத்தின்
மூத்த தலைவரும் முக்கிய ஆலோசகருமான

### அமரர் நாகமணி மாரிமுத்து

அன்பிற்கும் பாசத்திற்கும் வழிகாட்டிய - எம்
இதயங்களில் குடியிருந்த எங்களின் தெய்வமே!
கோயில் இங்கிருக்க தெய்வம் போனது ஏன்?
ஐயா நீங்கள் சென்று ஓராண்டென்ன - ஒரு
யுகம் வந்தால் கூட எங்கள் அன்பு விட்டு விலகாது ஐயா!
எம் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
அராலி அம்மனை வேண்டுகிறோம்.

*இன்று (05-02-2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

அராலி கிழக்கு,
அராலி. (41714)

என்றும் உங்கள் நினைவுடன் உள்ள
மனைவி, மகன் - ஜெசி

## வலிகாமம் பாடசாலைகளில் சுயதொழில் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,பெப்.5

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில், இளைஞர், யுவதிகளுக்கான இலவச சுய தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மானிப்பாய் மகளிர் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவற்றில் கணனி தொடர்பான பயிற்சிகளும், சென்.ஆன்ஸ் றோ.க.த.க. பாட சாலையில் மனை முகாமைத்துவப் பயிற்சி களும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் புகைப்படக்கலைப் பயிற்சியும், உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் உடையமைத தல் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

இப்பயிற்சி நெறிகள் யாவும் கடந்த முதலாம திகதிமுதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாக வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் அறிவித்துள்ளார். (எ-204)

## பண்ணிசைப்போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.5

தீவகக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் மாணவர்களிடையில் நடத்தப்பட்ட பண்ணி சைப் போட்டியின் ஆறாவது வருட பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை புளியங்கூடல் அருள்மிகு மகாமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வே. மகேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், இந்துசமய விவகார அலுவல் கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும் -

மகாமாரியம்மன் ஆலய தர்மகர்த்தா து.சிவ ஞானச்செல்வம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

புளியங்கூடல் மகாமாரியம்மன் ஆலய பிர தமகுரு சிவஸ்ரீ மகா கணபதீஸ்வரக் குருக்களின ஆசியுரையினைத் தொடர்ந்து பண்ணிசைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். (எ-204)

### தபால் மூலம் சிங்களம்

தபால் மூலம் சிங்களம் கற்க விரும்புவோர் கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு சுயவிவரங்கள் மற்றும் பெயர் முகவரி எழுதிய கடித உறை யுடன் அனுப்பிவைக்கவும்.

**STV - வீடியோ சென்ரர்**
நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (சி-40804)

### வெல்டிங் வேலைக்கு ஆள்தேவை

வெல்டிங் வேலையில் அனுபவமுள்ளவர் களும் உதவியாளரும் பழக விரும்புபவர் களும் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு: **M.T.K.வேக் சொப்**
40, நக்கா றோட், யாழ்ப்பாணம்.
(41798) (I.C.R.C.முன்பாக)

### ஒத்துமாறல்

கிளிநொச்சியிலுள்ள பாடசாலை ஒன் றில் கடமையாற்றும் வணிக பட்டதாரி ஆசிரியர் ஒருவர் வவுனியா தெற்கு வல யத்தில் கடமையாற்றும் வணிக பட்டதாரி ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்பு கிறார்.

தொடர்புகளுக்கு: 024 222 2658, 077 6014893.
(34458)(21)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

குழந்தையாக 07 - 12 - 1946



தெய்வமாக 17 - 01 - 2004

### திருமதி மா.புவனேஸ்வரி [புவனம்]

திதி: அபரபக்க ஏகாதசி

மண்ணில் பிறந்த நாள் முதலாய் எம்மை
கண்ணில் மணியாகக் கருதி வளர்த்தாயே!
பெண்ணில் பெருந்தகையே தாய்க்கு
இலக்கணமாகி
விண்ணில் பறந்தாயோ எம்மை மண்ணில்
துடிக்கவிட்டு?

எமை வளர்க்க உடல் வருத்தி உழைத்தாய்
எமக்கு அறிவூட்ட இரவு பகல் கண்விழித்தாய்
பேரிடர்களின் மத்தியில் எமைப் போற்றிப் புகழ்பெறவும்
- வைத்தாய்
அம்மாவே நீங்கள் எங்களுக்குத் தெய்வத்தாய்!

யாக்கரை வீதி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(41701)(21-14-18)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சின்னையா



ஓராம் கட்டை, புலோலி மேற்கைப் பிறப்பிட மாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் வேலுப் பிள்ளை சின்னையா அவர்கள் (92ஆவது வயதில்) 01.02.2005 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் புஸ்ப ராணி (கனடா), லண்டனில் வதியும் தங்கவேல், ஜெராணி, மலர் ராணி, இன்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீசக்திவேல் (நைஜீரியா), லண்டனில் வதியும் Dr.எலியாஸ், கலாவதி, கனக ராஜா, சண்முகராஜா ஆகியோரின் அருமை மாமனாரும் மகேஸ்வரி (லண்டன்), சிவஞானசுந்தரம் (சமாதான நீதிவான், இடைக்காடு), நடராஜசுந்தரம் (பீடாதிபதி - முகாமைக் கற்கைகள் வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்), செல்வானந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனகராசா (லண்டன்), செல்லபாக்கியம், விஜய லட்சுமி (கனடா), மங்களேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் தர்ஷிகா, கௌரி, நிருக்ஷா, சகீரா, பபிதா, அநபாயன், பவன், ஆர்த்தி ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2005) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
**மா.சிவஞானசுந்தரம்** (இடைக்காடு, அச்சுவேலி)
**மா.நடராஜசுந்தரம்** (தம்பசிட்டி, பருத்தித்துறை).
தொலைபேசி: 0044 208 550 8511 (லண்டன்). (41679)(21-14-18)

# உதயன் பதிவில் பொதிந்தவை

கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.

உதயனின் உதயகாலம் தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.

## 1986 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதத்தில்...

இனப்பிரச்சினையில் அமெரிக்கா அக்கறை காட்டக் கூடாது
30.01.1986

அரசின்பதிலை ஆராய ராஜீவ் - அமிர் பேச்சு
பண்டாரி கொழும்பு வருமுன் விடுதலை இயக்கங்களுடன் பேச்சு
01.02.1986

வலயம் வாபஸ் இல்லை
மேலும் முகாம்கள் நிறுவப்படும்
தம்மைச் சந்தித்த யாழ். அதிகாரிகளிடம் லலித்
02.02.1986

கிளிநொச்சியில் இன்று 9 மணி நேர ஊரடங்கு அமுல்
02.02.1986

மன்னாரில் 10 மணி நேரம் நடைபெற்ற கடும் போர்
போராளிகள் நவீன ஆயுதங்களை பயன்படுத்தித் தாக்கினார்கள்
20 சிப்பாய்கள் இறந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை
31.01.1986

முல்லைத்தீவில் இரவிரவாக ஆயுதப் படைகள் குவிப்பு
நேற்று தொடர்ந்தும் சண்டை
01.02.1986

முகாமுக்குள் இருந்து மோட்டோ ஷெல் குண்டுகள்
முல்லைத்தீவில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அகதிகள்
முக்கிய பாலங்கள் தகர்க்கப்பட்டதால் இராணுவம் வெளியேற முடியாத நிலை
02.02.1986

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14 - 10 - 1964



உதிர்வு 06 - 01 - 2005

### செபஸ்ரியாம்பிள்ளை டன்ஸ்ரன்

*"சீவித்தில் என்னை நேசித்தவர்களே*
*மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"*
மாதம் ஒன்று மறைத்தாலும்
மங்காத உன் உருவம் மறையவில்லை
நீர் தேடிக்கரம் பிடித்த ஆருயிர் மனைவியையும்
பாசமுடன் பெற்றெடுத்த அருமை மகனையும்
பாரினில் பரிதவிக்க விட்டுச் சென்றீரோ!
மின்னாமல் முழங்காமல் பேச்சின்றி மூச்சின்றி
உமக்கு மாயம் வீழ்ந்ததோ
எங்கள் வாழ்நாள் எல்லாம்
உம்மை மறவோம்.

இன்று (05.02.2005) சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கற் திருப்பலி நடைபெறும்.

வசந்த இல்லம்,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (41600)(21-11-16-24)

தகவல்:
பொ.அந்தோனிப்பிள்ளை.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி தம்பிஜயா

துர்க்காபுரம், குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி தம்பிஜயா 02.02.2005 புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் தம்பு தம்பிஜயாவின் அன்பு மனைவியும் வைத்தீஸ்வரன் (வைத்தியசாலை வீதி, சங்கானை), தர்மபூவதி (துர்க்காபுரம் குளமங்கால், மல்லாகம்), விஜயரத்தினம் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), அழகேஸ்வரன் (எரிபொருள் நிரப்பு நிலையம், சுன்னாகம்), இராசேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திராணி, சந்திரசேகரம், நேசலதா, தர்மவதனி, இந்திராதேவி, ரோகினி ஆகியோரின் மாமியாரும் கிருஷ்சாந்தி, அரவிந்தன், சயூவன், தர்மிலன், துர்க்கா, செந்தூரன், சனந்தன், லவந்தன், தினேஷன், அபிராமி, கம்ஷன், கட்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2005) சனிக்கிழமை அவரது இலலத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்காபுரம்,
குளமங்கால், மல்லாகம். (41665)(11-16-29-24)

தகவல்:
குடும்பத்தினர்.

## 7ஆவது ஆண்டு நினைவு



### செந்தில்வேல் மணியதாஸ்

(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)

மலர்வு
10-05-1990

உதிர்வு
05-02-1998

அன்புச் செல்வமே மணியதாஸ்!
நீ மறைந்து ஏழாண்டுகள்
உந்தன் புன்சிரிப்பு முகமும்
நீ உதித்த வார்த்தைகளும்
கண் முன்னே காட்சியாகி
எதிரொலித்து நெஞ்சைப் பிழிகிறது
நீ வளர்ந்து ஆளாகி ஆற்றல் பல பெற்று
மானிடம் வென்று முன் செல்ல
பணி புரிவாய் என்றிருந்தோம்
தீராத நோய் வந்து உந்தன் செவ்விரத்தம் குடித்து
உயிர் பறித்துச் சென்றதுவே
மீளாத் துயரத்தில்
உன் நினைவை போற்றுகின்றோம்.

(சி-40766) (24-11-16)

'தாயகம்'
பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

செந்திவேல் - அப்பா,
செல்வராணி - அம்மா,
மோகன் - அண்ணா,
செல்வகௌரி - அக்கா மற்றும்
உறவினர், நண்பர்கள், தோழர்கள்.

# "நொறாட்" திட்டத்தின் கீழ் 15 குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சினால் 'நொறாட்' திட்டத்தின் கீழ் யாழ். மாநகரசபை எல்லைக்குள் அடங்கும் 15குளங்களின் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் தற்போது மாநகரசபையின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படுகின்றன.

நெடுங்குளம், வண்ணான்குளம், உப்புக்குளம், பாலகுளம், மறவகுளம், மூண்டுகுளம், தேவரிகுளம், புல்லுக்குளம், கன்னாதிட்டிக்குளம், கற்குளம், நாச்சிமார் கோவில்குளம், ஆரியகுளம், பிரமணாகட்டுக்குளம், நீர்நொச்சித்தாழ்வுக்குளம், நரியன்குளம் ஆகியவையே புனரமைக்கப்படுகின்றன.

இதற்கென யாழ். செயலகத்தில் நீர்வள சூழலியல் பாதுகாப்புத் திட்ட அலுவலகம் ஒன்று அரச அதிபரின் நேரடி மேற்பார்வையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின்கீழ் காக்கைதீவில் தயாரிக்கும் பரீட்சார்த்த ஆலை ஒன்றும் அதற்கான நிர்வாக அலுவலகக் கட்டடம் ஒன்றும் அமைக்கப்படுகின்றன.

குளங்களைப் புனரமைக்கும் திட்டத்துக்கு ஒரு கோடி ரூபாவை யாழ். மாநகரசபைக்கு முற்பணமாக வழங்கியுள்ளதாக 'நொறாட்' திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இவ்வாண்டு பண்டாரகுளம், மக்கியாகுளம், நாயன்மார் கட்டுக்குளம், இலந்தைக்குளம், சின்னக்குளம், வண்ணான் குளம், பிரப்பன்குளம், பிள்ளையார்கோவில் குளம், வீரமாகாளி அம்மன் குளம் ஆகியன புனரமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான நிதியை நோர்வே அரசு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (8)

### படகுகள் திருத்தும் பணி

வடமராட்சி,பெப்.5

தும்பளையில் இயங்கிவரும் நோர்வே அனுசரணையுடனான படகு திருத்தும் நிலையத்தில் சேதமடைந்த மேலும் 25 படகுகளைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையத்தில் முதலாம் கட்டமாகச் சேதமடைந்த 25 படகுகள் திருத்தப்பட்டு மீனவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. தற்போது இரண்டாம் கட்டமாகத் திருத்துவதற்கென சேதமடைந்த படகுகளை இந்நிலையம் பொறுப்பேற்றுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் சேதமடைந்த படகுகளை இந்நிலையம் இலவசமாகத்திருத்தி வழங்கி வருகின்றது.(10-173)

### சிரமதானப் பணி

யாழ்ப்பாணம்,பெப்5

கியூடெக் நிறுவனத்தின் இளவாலை பிராந்தியம், கரவெட்டிப் பிராந்தியம் மற்றும் சிறு குழுக்கள் என்பன ஒன்றிணைந்து வாராந்தம் மணற்காடு, பொற்பதி பகுதிகளில் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. (10-190)

## 45ஆம் நாள் நினைவு அஞ்சலி



**இ.ஈஸ்வரலிங்கம், ஈ.புஸ்பராணி, ஈ.பிரியங்கன், ஈ.வேணுகா**

பிறப்பு: 1968-02-05 1975-04-06 2001-02-11 2002-12-20

இறப்பு 2004-12-26

ஓ சுனாமியே!
பேரிரைச்சலோடு வந்தாயே!
கண்மூடித் திறப்பதற்குள் ஊரே
தீர்க்கோலமாகியது
பள்ளியில் படிக்க என்று காத்திருந்த
பள்ளிச் சிறார்களையே எடுத்தாய்!
பூமித்தாய் பாரம் இறக்க
கொடிய சாத்தானே நீயா? - சுமக்கிறாய்
பச்சை முகம் மாறாப் பிஞ்சுகளையா
கொண்டு சென்றாய்? உனக்கு
இரக்கமில்லையா கடல் அலையே?
ஓ... ஓ... என அழுதாயா பிரியங்கன்
ஓரலை, ஈரலை, மூவலை என
ஆறலைக்குள் தடம் புரண்டீரா...?
ஈசா, புஸ்பா, பிரியா, வேணு எனும்
நாற்குரவர்களே! உங்கள் சந்ததி எங்கே?
அழுதாலும் புரண்டாலும் எமது
கண்ணீர் என்றும் ஆறாது!

இன்று (05.02.2005) சனிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னார்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழ்கின்ற மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நிரந்தர முகவரி:
வீரகத்தி தங்கராசா
வேல் வீதி, மயிலிட்டி.

தற். முகவரி:
தெணியம்மன் கோயிலடி,
வியாபாரி மூலை, பருத்தித்துறை.

(41561) (24-11-16)

பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரர்கள்.





போன்ற போன்களையும் அவற்றிற்கான Head Set, Battery, Charger என்பவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கைக்கான ஏகவிநியோகஸ்தர்களான "Soft Logic" இன் யாழ்ப்பாணத்திற்கான அனுமதிக்கப்பட்ட Original NOKIA போன்களின் ஏகவிநியோகஸ்தர்களான :

ஒருவருட உத்தரவாதம்
One Year Warranty
NOKIA
CONNECTING PEOPLE

(C/40772)

**வானகம் போன் சிற்றி**
இல. 6, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். ☎: 0773 151411

**டோறா மல்ரி கொம்பிளெக்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி. ☎: 021 226 3432

Dialog gsm kit
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**சிறுவர்களுக்கான விசேட ஆங்கில அறிவூட்டல் வகுப்புகள்**

| | |
|---|---|
| Level 01 | 6-7 வயதுப் பிரிவு |
| Level 02 | 8-9 வயதுப் பிரிவு |
| Level 03 | 10-12 வயதுப் பிரிவு |

வகுப்புகள் ஆரம்பமாகி உள்ளன.

இப்பயிற்சி நெறி

- எழுத்தும் உச்சரிப்பும் (Writing and Spelling)
- Reading (வாசிப்பு)
- செவிமடுத்தல் (Listening)
- கிரகித்தல் (Comperhension)
- இலக்கணமும் மொழிக் கட்டமைப்பும் (Grammer and language structure)
- உச்சரிப்பு (Prounciation)
- பாத்திரமேற்று உரையாடல் (Rale play)

மற்றும் பாடசாலைப் பாடத்திட்டங்களையும் உள்ளடக்கியது.

**LONDON ENGLISH COLLEGE**
# 105, Arasady Road, Jaffna.
Hot lines: 021 222 5889, 0777 252180, 0776910072 (சி-40792) (42-11-45-24)


## சிறப்புற நடைபெற்று முடிந்த விவேகானந்தர் ஜெயந்திதின விழா

நல்லூர்,பெப்.5

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் ஜெயந்திதின விழா கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் உப தலைவர் செ.செல்வரசா தலைமையில் நடைபெற்றது.

இலங்கை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் சார்பில் நடைபெற்ற மேற்படி விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவு.மகாலிங்கம், யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

"இந்து சமயத்தின் மகிமைகள்", "நல்லொழுக்கம் எது?", "கல்வியே வழி", "மாணவர் சக்தி", "மனோ சக்தியும் அதன் வளர்ச்சியும்", "மனதைக் கட்டுப்படுத்துவது எப்படி?", "ஆளுமை வளர்ச்சி", "ஆன்ம விருத்திக்கும் ஆளுமை விருத்திக்கும் அடித்தளமான யோகப் பயிற்சிகள்" என்ற தலைப்புக்களில் கருத்துரைகளும் இடம்பெற்றன.

ஆச்சிரமத்தில் நடத்தப்பட்ட யோகாசனப் பயிற்சியை முடித்துக்கொண்ட கொக்குவில் இராமகிருஷ்ணர் வித்தியாலய மாணவர்களுக்கான சான்றிதழ்களை நல்லை ஆதீன முதல்வர் வழங்கினார்.

"எழுந்திரு விழித்துக்கொள்" என்ற பொருளிலான கண்காட்சியும் இடம்பெற்றது. (10-111)

## புல் துண்டங்கள் விநியோகம்

வலி.தென்மேற்கு,பெப்.5

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் பசுக்களின் பால் உற்பத்தியைப் பெருக்கவல்ல புல் துண்டங்கள் மாடு வளர்ப்பவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

பொலநறுவையிலுள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட புல் துண்டங்களே இவ்வாறு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை, அச்சுவேலியிலுள்ள கோழிப் பண்ணையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் நல்ல இன சேவல் மற்றும் பேட்டுக்குஞ்சுகளை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தேவைப்படுபவர்கள் தங்கள் பெயர்களைப் பணிமனையில் பதிவுசெய்துகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10-135)

**வண்ணார்பண்ணையின் மெதடிஸ்த திருச்சபையின்**
**83ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு**
**மாபெரும் நற்செய்திக் கூட்டம்**

இடம்: வண்ணார்பண்ணை மெதடிஸ்த ஆலயம்
காலம்: இன்று (05.02.2005) சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 4.00 மணி

விசேட செய்தியாளர்
**Rev.L.G.லெஸ்லி மத்தியூஸ்**
(கல்வாரி பூரண சுவிசேஷ திருச்சபை)

*அனைவரையும் இறை ஆசி பெற்றுச்செல்ல அன்புடன் அழைக்கின்றோம்.*

வண்ணார்பண்ணை மெதடிஸ்த ஆலயம்.
ஓட்டுமடம் சந்தி. யாழ்ப்பாணம். சபை பெறுநர்.
(41632) (24-11-16)

**1st HAPPY BIRTHDAY**




சுவிஸில் உள்ள விக்கி -சுதர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன டக்சன (DAGSAN) முதலாவது பிறந்த தினத்தை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் இன்று (05.02.2005) சனிக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, மீசாலையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, சங்கர் மாமா, சுபாச் சித்தி, வதனிச்சித்தி, கரணவாயில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, கொழும்பில் வசிக்கும் தர்சி அத்தை, சுவிஸில் உள்ள பெரியப்பாமார், பெரியம்மாமார், சுவிஸில் உள்ள சூரிச்சில் வசிக்கும் ராஜன் மாமா, நந்தி அத்தை, ஆசையுடன் மச்சாள் கபிஸ்னா, மச்சான் விபிஷேக் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமர்வடிப் பிள்ளையார் அருள்பெற்று சீருஞ் சிறப்புடனும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம்வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:-
மீசாலை மேற்கு, மீசாலை.
அம்மப்பா (சிவசோதி)
சித்தி (வதனி).

செல்வன் **டக்சன்**
05.02.2005
(41652)

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

யாழ்ப்பாணம் ~ வண்ணை
**ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**
**ஏகாதசி உற்சவம் 05.02.2005**

நிகழும் தாரண வருடம் தை மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 5.15 மணிக்கு ஏகாதசி உற்சவம் நடைபெறும்.
அடியார்க்ள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமத் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

**ஆதீன மகா சபை.**
(சி-40734) (24-11-16)

# திருமண அழைப்பு

*பேரன்புடையீர்!*

பருத்தித்துறையைச் சேர்ந்த திரு.திருமதி கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வன் **முரளிதரன்**

பருத்தித்துறையைச் சேர்ந்த திரு.திருமதி பொன்னையா சிவநாதன் தம்பதிகளின் மகள் **நிசாந்தி**

ஆகிய நாம் இருவரும் தெய்வ அனுக்கிரகத்தினாலும், பெரியோர்கள் நிச்சயித்ததினாலும், 06.02.2005 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.05 மணியிலிருந்து 10.36 மணிவரையுள்ள சுபநேரத்தில், இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் திருமண வாழ்வில் அடியெடுத்து வைக்க உள்ளோம். அத்தருணத்தில் பெரியோர்களாகிய தங்கள் வரவும், ஆசீர்வாதமும் எம் வாழ்வைத் தொடங்க உறுதுணையாக இருக்கும் என்பதனால் தாங்கள் எல்லோரும் வருகைதந்து எம்மை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.


நன்றி : மணமக்கள்

எமது பிள்ளைகளின் திருமணத்துக்கும் தொடர்ந்து நாம் அளிக்க இருக்கும் விருந்துக்கும் வருகைதந்து எமது உற்றார், உறவினர், நண்பர்களாகிய நீங்கள் அனைவரும் உங்கள் நல்லாசிகளை அவர்களுக்கு நல்கி சிறப்பிக்குமாறு வேண்டி நிற்கிறோம்.

**க.பாலசுப்பிரமணியம்**
உதவிப் பொது முகாமையாளர்
இலங்கை வங்கி. (வடபிராந்தியம்)
வானகத்திலிருந்து
**திருமதி லோகநாயகி**
பாலசுப்பிரமணியம்
(இரண்டாம் குறுக்குத் தெரு. பருத்தித்துறை.)

**திரு.திருமதி**
**பொ.சிவநாதன்**
செட்டித் தெரு,
பருத்தித்துறை.

இருவீட்டார் அழைப்பு
(இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்)




(41491)

# வர்த்தகத்துறையின் வெற்றிக்கு ஆன்மீகப் பணிகளே உதவுகின்றன!

## 'நில்கம்' நிறுவனப்பணிப்பாளர் ஈஸ்வரன் கூறுகின்றார்

மொறிசியஸ் தீவிற்கான கௌரவத்தூது வரும், இலங்கையில் முதன்முதலில் 'நில்கம்' பிளாஸ்ரிக் கதிரையை அறிமுகம் செய்தவரும் பிரபல தேயிலை ஏற்றுமதியாளரும் ஈஸ் வரன் பிறதேர்ஸ் எக்ஸ்போட் பிறைவேற் லிமிட டெட் உரிமையாளருமான தெ.ஈஸ்வரன் அண்மை யில் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

, சாயி பாபா பகதரான இவர் இறைவன் தான எமக்கு எல்லாமானவர் என்ற கொள்கையை உடையவர்.

இவர் தனது வியாபார, உற்பத்தி அனுபவங் கள் தொடர்பாகவும், ஆன்மீகம் தொடர்பாகவும் உதயன் வாசகர்களுக்காக எம்முடன் கலந் துரையாடினார். அவர் எம்முடன் பகிர்ந்து கொண் டவற்றை உங்களுக்காக இங்கே தருகின்றோம்.

*கேள்வி:* (வணக்கம் சார்) உங்களைப் பற் றிக் கொஞ்சம் கூறுங்களேன்....?

*பதில்:* (நகைப்புடன்) என்னைப் பற்றி என்ன சொல்ல உள்ளது. பொதுவாகச் சொல்லப்போ னால் நான் ஒரு மனிதன் (சிரித்தவாறே...) என்பெயர் உங்களுக்குத் தெரியும் தானே. ஈஸ்வரன், நான் எனது சகோதரர்களுடன் இணைந்து ஈஸ்வரன் பிறதேஸ் எக்ஸ் போட் பிறைவேற் லிமிட்டெட்டை நடத்தி வரு கின்றேன். அத்துடன 'நில்கம்' பிளாஸ்ரிக் கதிரை களையும் இலங்கையில் முதன்முதலில் அறி முகம் செய்தவர்களும் நாங்கள்தான்.

### தொழில் வளம்

தொகுப்பு : குகா

*கேள்வி:* உங்கள் 'நல்கம்' பிளாஸ்ரிக் கதி ரைகள் உற்பத்தி தொடர்பாகக் கொஞ்சம் கூறுவீர்களா....?

*பதில்:* 'நில்கம்' பிளாஸ்ரிக் கதிரைகளை இலங்கையில் அறிமுகம் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றியதும் நாம் பம்பாயில் உள்ள 'நில்கம்' என்னும் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து கொழும்பில் ஒரு கம்பனியை அமைத்தோம்.

இதில் நான் கையாண்ட விசேடம் என்ன வென்றால், நாம் தனியாக ஒரு தொழிலை ஆரம பிக்க முன்வருவோமேயானால் அதனைப் பழகி ஒரு நல்ல நிலைக்கு வருவதற்கு பல வருடங் கள் செல்லும் ஆனால், அதிலே ஊறிப் போனவர் களுடன் கூட்டுச் சேர்ந்தால் ஒரு தொழிலை உடனேயே செய்து அதில் முன்னேறிவிடலாம்.

இதனைக் கடைப்பிடித்தே நான் எனது தொழி லில் முன்னேற்றம் கண்டேன். எனக்குப் பின்னர் எத்தனையோ பேர் இங்கு கம்பனிகளை உரு வாககியிருந்தாலும் எமது கம்பனிக்கு ஒரு தனி யிடம் உண்டு. அதனை எவராலும் மாற்றமுடி யாது.

*கேள்வி:* உங்களின் தேயிலை ஏற்றுமதி பற்றி....?

*பதில்:* நாங்கள் தேயிலையை 32 நாடு களுககு ஏற்றுமதி செய்கின்றோம். மலை நாட டில் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டு, ஒவ் வொரு வாரமும் சராசரியாக 60 லட்சம் கிலோ தேயிலை ஏலத்திற்கு வரும். நாங்கள் அங்கே போய் எமக்கு வேண்டிய தேயிலையை வாங்கி ஏற்றுமதி செய்கின்றோம்.

இதில் எங்கள் தனித்திறமை என்னவென் றால், அங்கு தேயிலையை வாங்கி வந்து அவற றைச் சிறுபைகளில் அடைத்து, ஏற்றுமதி செய் கின்றோம். உடனடியாக ஒரு கோப்பை தேனீர்



தயாரிக்கக்கூடிய சிறிய பைக்கட்டுகளாக அடைத்து அவற்றை நாம் ஏற்றுமதி செய்கின் றோம். மத்திய கிழக்கு நாடுகளுக்கே கூடுத லான தேயிலையை ஏற்றுமதி செய்கின்றோம்.

*கேள்வி:* 'நில்கம்' பிளாஸ்ரிக் உற்பத்தி மற்றும் தேயிலை ஏற்றுமதி ஆகியவற்றில் உங்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர்பு கள் எவ்வாறு உள்ளது?

*பதில்:* நில்கமைப் பொறுத்தவரையில் நாம் அவற்றை ஏற்றுமதி செய்வதில்லை. இலங் கையில் மட்டுமே 'நில்கம்' பிளாஸ்ரிக் கதிரை களை விநியோகம் செய்கின்றோம்.

தேயிலையைப் பொறுத்தவரையில் நாம் அவற்றை ஏற்றுமதி மட்டுமே செய்கின்றோம். விநியோகிப்பதில்லை. அவற்றை அந்தந்த நாடுகளின் உள்ளூராளர்கள்தான் விநியோ கம் செய்கின்றனர். அதற்கும் இதற்கும் எவ் விதத் தொடர்பும் இல்லை இரண்டும் வேறு வேறா னவைதான்.

*கேள்வி:* நீங்கள் ஏன் ஏற்றுமதியை மாத் திரம் செய்கிறீர்கள்..? தற்போது இல்லாது போய் விட்ட பைக்கட் தேயிலைகளை இலங் கையில் அறிமுகம் செய்யலாம் தானே?

*பதில்:* அது நடக்கக் கூடிய காரியம் அல்ல. அதனை இங்கே செய்யவும் முடியாது. தற்போது இங்கே கிட்டத்தட்ட 20 தேயிலைக் கம்பனிகள் உள்ளன. நான் 21 ஆவது ஆளா கத் தேயிலையைக் கொண்டுவந்து என்ன செய்வது. முன்பு இருந்து 20 கம்பனிகளும் விளம்பரங்கள் மூலம் மக்கள் மத்தியில் வளர்ந்துவிட்டார்கள். நான் அவர்களுடன் போட்டி போட வேண்டுமானால் விளம்பரத்திற்கு நிறை யப் பணம் தேவை.

விளம்பரத்திற்கு மட்டுமே ஆரம்பத்தில் 30, 40 கிலோ தேயிலை செலவுபண்ண வேண்டி வரும். இங்குள்ள நிறுவனங்கள் ஆரம்பத்தில் அவ்வாறு செய்து வளர்ந்து விட்டார்கள். அவர் களுடன் போட்டி போட்டு வளர்வதற்குள் எல் லாம் முடிந்துவிடும்.

*கேள்வி:* மொறிசியஸ் தீவுகள் பற்றியும் அதற்கும் உங்களுக்குமிடையே உள்ள உறவு பற்றியும் கூறுவீர்களா?

*பதில்:* நான் மொறிசியஸ் தீவிற்குக் கௌர வத தூதராக உள்ளேன் மொறிசியஸ் தீவு மிக வும் சிறிய தீவு. அங்கே 12 லட்சம் மக்கள் உள்ளனர். எங்களது நாட்டில் ஒருவரது வரு டாநத சராசரி வருமானம் 8 ஆயிரம் ரூபா என் றால், மொறிசியசில் 37 ஆயிரம் ரூபா சராசரி வருமானமாக உள்ளது.

சிலர் கூறுவார்கள் இறைவன் மொறிசி யஸ் தீவைப் படைத்து விட்டு அதன் சாயலில் சொர்க்கத்தையும் படைத்தான் என்று அவ்வா றான, அழகான வளம்மிக்க தீவுதான் மொறிசி யஸ் தீவு.

அங்கு ஆடைத் தொழில் செய்பவர்களே அதிகம் உள்ளார்கள். குறிப்பாக 'ரீசேட்' துணிவகைகளையே ஏற்றுமதி செய்கின்றனர். 'ரீசேட்' துணி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் மொறிசியஸ் தீவு மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கின்றது,

அது மட்டுமல்ல, அங்கு சீனி உற்பத்தியும் இடம்பெறுகின்றது. எங்கு பார்த்தாலும் கரும் புத் தோட்டம் காணப்படும்.

இலங்கையில் தேயிலைத் தோட்டம் செய் வதற்கு இந்தியாவில் இருந்து ஆள்களைக் கொண்டுவந்தைப்போல, மொறிசியஸ் தீவிலும் பிரிட்டிஷ் அரசும் பிரெஞ் அரசும் இந்திய வர்களை கூலியாள்களாக அமர்த்தியுள்ளனர்.

இரண்டு மூன்று சந்ததிக்கு முன்னரே இந்தி யாவில் இருந்து வந்து அவர்கள் மொறிசி யசில் குடியேறிவிட்டனர். அதனால், அவர்களுக குத் தமிழ்மொழி என்பதே தெரியாது.

*கேள்வி:* 'நில்கம்' பிளாஸ்ரிக் உற்பத்தி, தேயலை ஏற்றுமதி இவை இரண்டையும் தவிர வேறுதுறைகளில் ஆர்வம் உண்டா?

*பதில்:* ஆம், நாங்கள் இன்னுமொரு தொழில முயற்சியையும் செய்யவுள்ளோம். என்னவென் றால், இந்தியாவிலே உள்ள சைவ உணவக மான 'சரவணபவன்' என்ற உணவகத்தின் கிளை ஒன்றைக் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் அமைக்கவுள்ளோம்.

இந்த உணவகம் உலகம் பூராகவும் 13 கிளை நிறுவனங்களைக் கொண்டுள்ளது. டுபாய், மலேசியா, கனடா, லண்டன், சிங்கப்பூர், அமெ ரிக்கா போன்ற 13 நாடுகளில் சுத்தசைவ உணவு களை உற்பத்தி செய்து வழங்குவதில் பிரபல் யமான உணவகமாக அது உள்ளது. அதன் கிளையை இங்கே அமைப்பது எனது நோக்கம்.

*கேள்வி:* றம்பொடை ஆஞ்சநேயர் ஆலயம் பற்றி கூறுவீர்களா?

*பதில்:* அங்கு நீங்கள் சென்றிருக்கின்றீர்களா, செலலாவிட்டால் உங்கள் வாழ்நாளிலே பாதியை இழந்துவிட்டீர்கள். அந்த மலை உச்சியில் 18 அடி உயரமான பக்த ஆஞ்சநேயரை ஒரே கல்லில் செதுக்கி அங்கே அமைத்துள்ளோம்.

ஆஞ்சநேயப் பெருமாள் முதன்முதலாக இலங்கை வந்து அங்கேதான் கால் வைத்தார் என்பது ஐதீகம். அந்த மலை உச்சியில் இருந்து கிட்டத்தட்ட 8 மைல் தூரத்தில் சூழவுள்ள இடங் களைப் பார்க்கலாம். அங்கேதான் நாம் அவருக குரிய ஆலயத்தை அமைத்துள்ளோம் என்று கூறு வதைவிட அவரே தனக்குரிய ஆலயத்தைக் கட் டிக் கொண்டார் என்று கூறலாம். கடல் மட்டத் தில் இருந்து 4ஆயிரத்து 500 அடி உயரத்தில் அக்கோயில் அமைந்துள்ளது. அங்கு சென்று நாம் தியானம் செய்யத் தேவையில்லை. தியா னம் தானாகவே வந்துவிடும் அவ்வாறு அமைதி வாய்ந்த சூழலில் அந்த ஆலயம் உள் ளது.

*கேள்வி:* ஆத்மீகம் தொடர்பான சில விடயங்கள் கூறுவீர்களா?

**செவ்வி: கங்கா, தீபா**

*பதில்:* நான் ஒரு சாயிபாபா பக்தன். இறை வன் யார் என்பதையும் அவன் எப்பேர்ப்பட்ட வன் என்றும் என்னால் கூறமுடியும். நல்ல உள் ளம் கொண்டவன் இறைவன். அதனை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

நமது நாட்டில் எவ்வளவோ அனர்த்தம் நடந் துள்ளது. எவ்வளவோ பேர் தமது உறவு களை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்றார் கள். இவ்வளவு அனர்த்தம் நடந்தபோது இங் குள்ள சமித்தியிடமும் கேட்காது இலங் கைக்கு உலகளாவிய ரீதியில் சத்திய சாயி பாபாவின நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பு கொணட மருத்துவர்களுக்குத் தலைவரான வைத் தியரை இங்கே அனுப்பி வைத்தார் சாயிபாபா.

அது மட்டுமல்ல சத்தியசாயி நிறுவனத் திற்கு சர்வதேச ரீதியில் தலைவராக உள்ள மைக்கல் யோல்ரின் இங்கே வரவுள்ளார். மக்களது தேவைகளை இனங்கண்டு தேவை யானவற்றை வழங்கவுள்ளார்.

*

---

# சைக்கிளை மோட்டார் சைக்கிளாகப் பயன்படுத்தப் புதிய தொழில்நுட்பம்

## உடுவில் இளைஞன் அறிமுகம்

இது ஒரு வித்தியாசமான தொழில்நுட்ப முயற்சி. நாம் அன்றாடம் பயன்படுத்தம் சைக் கிளிலேயே பெடலை மிதிக்காமலேயே வெகு தூரத்திற்குப் பயணம் செய்யலாம். அப்படியே பயணமும் செய்கிறார் ஒருவர்.

இந்தப் புதுத்தொழில்நுட்பம் வேறு நாட்டி



லல்ல நமது நாட்டிலே நமது ஊரிலேயே அறி முகபபடுத்தப்பட்டுள்ளது. நம்மவரே அதைப பயன்படுத்தியும் வருகின்றார்.

எப்படி இது சாத்தியம் என்கிறீர்களா?

துவிச்சக்கர வண்டியில் பொருத்தப்பட்ட மோட டார் சைக்கிளின் இயந்திரத்தின் மூலம் 'ரூ- இன்-வண்' ஆகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த 'ரூ-இன்-வண்' மோட்டார் சைக்கிளை சுன்னாகம் கிழக்கு, உடுவிலைச் சேர்ந்த வில்பத்துராஜா அருந்தவராஜா (வயது 27) என்பவரே உருவாக்கிப் பயன்படுத்தி வ்ருகிறார்.

தும்பு மிட்டாஸ் வியாபாரத்தை மேற்கொள் ளும் இவர், மாலை நேரங்களில் சைக்கிள் திருத் தும் தொழிலையும் செய்துவருபவர்.

சாதாரணமாக நாம் பயன்படுத்தும் சைக் கிளில் மோட்டார் சைக்கிளின் இயந்திரத்தைப் பொருத்தி, அவ்வியந்திரத்தின் மூலம் பெடலை மிதிக்காமலேயே சைக்கிளை இயங்கச் செய்யும வகையில் வடிவமைத்திருக்கிறார். இதனைத் தயா ரிதது முடிப்பதற்கு 20 ஆயிரம் ரூபா வரை செல வானதாகவும் ஒரு லீற்றர் பெற்றோலில் 120 கிலோ மீற்றர் தொடக்கம் 150கிலோமீற்றர் வரை இச்சைக்கிளில் பயணம் செய்ய முடியும் என்றும அருந்தவராஜா தெரிவித்திருக்கிறார்.

நம்மவர்கள் மத்தியிலும் இப்படியான புது மையான சிந்தனையுடையவர்களும், தொழில் நுட்பத் திறன் உள்ளவர்களும் அதனை ஆக் கப்படுத்துவதற்கு வேண்டிய தற்துணிவுள்ளவர் களும் இருபபது நாம் பெருமைப்படவேண்டிய விடயமே.

**- சிவகோணேசலிங்கம்**

---

# சுவிஸ் மினரல் குடிதண்ணீரை விநியோகிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்து



**ஒப்பந்தப் பத்திரத்தை இருவரும் பரிமாறு கின்றனர்.**

சுவிஸ் மினரல் எனும் சுத்திகரிக்கப்பட்ட மினரல்கள் அடங்கிய குடிதண்ணீரை யாழ். மாவட்டத்தில் விநியோகம் செய்வதற்கு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங் கங்களின் சமாசத்திற்கும் சுவிஸ் மினரல் குடி நீரைத் தயாரிக்கும் நிறுவனமாகிய Global Business Network இற்கும் இடையில் ஒப்பந் தம் செய்யப்பட்டுள்ளது.

Global Business Network நிறுவனம் சார்பில் அதன் இயக்குநர் சிவசுப்பிரமணியம் பிரபாகரனும் யாழ். மாவட்ட விவசாயநுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சார்பில் அதன் தலைவர் ப.கனகலிங்கமும் இந்த வர்த் தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். (3)

---

# இளம் பொறியியலாளர்கள் பட்டயம் பெற வாய்ப்பு

## இரு நிறுவனங்களுக்கு அங்கீகாரம்

இளம் பொறியியலாளர்கள் தமது தொழில் முன்னேற்றத்திற்கான படியாக பட்டயம் பெறுவ தற்கு வடமாகாணத்திலும் இரு தனியார் நிறு வனங்களை இலங்கை பொறியியலாளர் சங் கம் அங்கீகரித்துள்ளது.

நிர்மாணத்துறையில் ஈடுபட்டுக்கொண்டி ருக்கும் ரூலின்ஸ், யூரோவில் என்ற நிறுவ னங்களே இவையாகும்.

இதில் ரூலின்ஸ் நிறுவனத்தில் ஒரே தட வையில் மூன்று பேரும் யூரோவில் நிறுவ னத்தில் இரண்டு பேரும் பயிற்சி பெறுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு முதல் முதலாக தனியார் நிறுவனங்களில் இரண்டிற்கு இலங்கையில் இவ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

அதில் ரூலின்ஸ் நிறுவனமும் ஒன்று என் பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(3)

---



**எச்.என்.பி அசூரன்ஸின் பிராந்திய நிலையம் ஒன்று அண்மையில் திருகோணமலையில் திறந்து வைக்கப்பட்டது.**

**ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதம நிறை வேற்று அதிகாரி மஞ்சுள டி.சில்வா அலுவலகக் கட்டடத்தினை நாடாவெட்டித் திறந்து வைப்ப தனைப் படத்தில் காணலாம். (3-5)**

## ஆத்மசாந்திக்காக திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன

வடமராட்சி,பெப்.5

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பலியானோருக்கு ஆத்மசாந்தி வேண்டிப் பளை இராயப்பர் தேவாலயத்தில் மிருசுவில் உதவி பங்குத்தந்தை அருட்திரு.எஸ்.வசந்தசீலன் அடிகளார் தலைமையிலும் குடத்தனை போதுவானவர் தேவாலயத்தில் மணல்காடு பங்குத்தந்தை அருட்திரு.றோய் பேர்டினன்ட் அடிகளார் தலைமையிலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

இத்திருப்பலிப் பூஜைகளின்போது பலியானோரின் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (10-173)

## பாத்திரக் கொள்வனவுக்கான பணம் இன்னும் வழங்கப்படவில்லை

வடமராட்சி,பெப்.5

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள கொட்டடி, சுப்பர்மடம் ஆகிய மீனவக் கிராமங்களில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு வீட்டுப் பாத்திரங்களை வாங்குவதற்கான கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை என்று வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் குற்றம் சுமத்தியுள்ளது.

மீளக்குடியமரும் குடும்பங்களுக்குப் பாத்திரங்கள் வாங்குவதற்குத் தலா 2 ஆயிரத்து 500 ரூபா பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வருவதாகவும் இப்பணம் மேற்படி இரு கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் சமாசம் மேலும் தெரிவித்துள்ளது. (10-173)

## இரு முனைகளில் தாக்கியது

வடமராட்சி,பெப்.5

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் கற்கோவளம் மீனவக் கிராமம் மீது சுனாமி பேரலை இரு முனைகளில் தாக்கியதாக அக்கிராம மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அக்கிராமத்திற்கு நேராகக் கிழக்குப் புறத்தில் இருக்கும் வங்காளவிரிகுடாவிலிருந்தும் வடக்குப் புறத்தில் இருக்கும் பாக்குநீரிணையிலிருந்தும் இத்தாக்குதல் நிகழ்ந்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இத்தாக்குதலின்போது அக்கிராம மீனவர்கள் புத்திசாதுரியமாகத் தப்பினார்கள். ஆனால், கரையோரத்தில் காவலரண்களில் இருந்த படையினருக்குப் பெரும்பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

(10-173)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
14.10.1934

இறைவனடியில்
18.01.2004

திதி: 05. 02. 2005

திருமதி
## இரத்தினபூபதி மகேந்திரன்
(கோணம் போவில், வல்வெட்டி.)

தையுடன் ஆண்டொன்று மறைந்தாலும்
யாரம்மா உங்களை மறக்க
ஓடுகின்ற கதிரவன் உறங்க நினைத்தாலும்
நீங்கள் ஒரு பொழுதும் ஓய்வெடுக்க நினைத்ததில்லை
நோயின்றி நொடியின்றி நொடிப்பொழுதில்
வெகுதூரம் கடுகதியில் காலனுடன் சென்றுவிட்டீர்களே!
எத்தனை பிறப்புக்கள் எடுத்தாலும் எங்கள் நிழலில் தான்
மழலையாக உதிப்பீர்கள் அம்மா.

உங்கள் பிரிவால் தவிக்கும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள், பெறாமக்கள், உறவினர்கள்.

(C/40750)

# அனலாய் தகிக்கும் நினைவுகளுடன்....



தளிராக
30.10.1975

சருகாக
17.01.2004

திதி :- ஏகாதசி 05.02.2005

அன்னை தந்தைக்கு கடைக்குட்டி - நீ
நமக்கோ ஆசைக்கு ஓர் தம்பியன்
ஆனந்தமாய் நாமிருக்க
காலனவன் தன் ஏட்டிலிருந்து
உன் பக்கத்தை மட்டுமல்ல
உடலையும் கருக்கிவிட்டானே!
என்னத்தில் வஞ்சமில்லா உன்னை
அலைகடலுக்கு அப்பால் தன்னுடன்
ஐக்கியமாக்கியதோ அக்கினி?
ஓ என்று கதறினாலும் - நீ
ஆரம்பித்த இறுதிப்பயணம் என்றும்
எம் உள்ளங்களில்
அனலாய் தகிக்கிறது ரஜனன்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தணலாய் தகிக்கும் நினைவுகளுடன்....

## சின்னத்துரை ரஜனன்

"லோகஸ்தான்"
பிரதான வீதி,
சுன்னாகம்.

பெற்றோர்:- திரு.திருமதி லோகேஸ்வரி சின்னத்துரை
சகோதரர்கள்:-
ரமணன் குடும்பம் (கனடா),
ரமணி குடும்பம் (பிரான்ஸ்),
ரஜனி குடும்பம் (கனடா).

(41485)

# ஆசிரிய சேவை தரம் I பதவி உயர்வு நிபந்தனைகளில் விரைவில் மாற்றம்

## அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது

அச்சுவேலி,பெப்.5

ஆசிரியர் சேவை தரம் I பதவி உயர்வுக்கு 50 வயது பூர்த்தியடையவேண்டும் என இது வரை இருந்து வந்த நிபந்தனை தளர்த்தப்பட்டு ஆசிரியர் சேவை தொடர்பான புதிய பிரமாணக் கோவையைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஆசிரியர் சேவையின் தரம் I இற்கு ஆசிரியர்களைப் பதவி உயர்த்துவதற்கு சேவை மூப்புடன் 50 வயதும் பூர்த்தி அடைய வேண்டும் என்ற நிபந்தனை பின் பற்றப்பட்டு வந்தது. 50 வயது பூர்த்தி அடைய வேண்டும் என்ற நிபந்தனை உட்பட ஆசிரியர் சேவைப் பிரமாணக் கோவையில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி அவை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தி வந்தன.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக இழுபட்டு வந்த இந்தப்பிரச்சினைக்கு கல்வி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி செய்துள்ள சிபார்சு அமைச்சரவை ஏற்றுக்கொண்டு 50 வயது பூர்த்தி அடையவேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி ஆசிரியர் சேவை தொடர்பான புதிய பிரமாணக் கோவையைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அறியப்படுகின்றது.

இலங்கை ஆசிரியர் சேவை 1994 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. அப்போது ஆசிரியர்கள் சேவைத் தரங்கள் ஐந்து வகைப்பாட்டில் - புள்ளி அடிப்படையில் வகைப்பாடு செய்யப்பட்டு ஆசிரியர்கள், ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டனர்.

இரண்டாவது தடவையாக ஆறு வருடங்களின் பின்னர் 2000 ஆம் ஆண்டு திருத்தம் செயயப்பட்ட ஆசிரியர் சேவைப் பிரமாணக் கோவையின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டது.

அப்போது ஆசிரியர் சேவை தரம் I பதவி உயர்வுக்கு 50 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்பட்டது.

தற்பொழுது மூன்றாவது தடவையாக ஆசிரியர் சேவை பிரமாணக் கோவை திருத்தி அமைக்கப்படுகின்றது. இது மிகவிரைவில் சுற்றறிக்கையாக வெளிவரும் என அறியப்படுகின்றது. இதில் காணப்படும் சிபார்சுகள் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் முடியவுள்ள காலப் பகுதியை உள்ளடக்கி நடைமுறைப்படுத்தப்படலாம் எனக் கூறப்படுகின்றது. (எ-11)

## நூல் வெளியீட்டு விழா

ஆசிரியர் நயினை தில்லையம்பலம் மதிவதனன் எழுதிய 'இந்து மத வரலாறு- 2' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், நூல் வெளியீட்டுரையை முன்னாள் அதிபர் கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரையும் - அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (எ-202-28)

# அரிவு வெட்டும் இயந்திரம் கிளிநொச்சியில் அறிமுகம்

கிளிநொச்சி,பெப்.5

கிளிநொச்சி வன்னிவேளாண் தொழிலநுட்ப நிறுவனத்தால் நவீன தொழிநுட்பத்துடன் கூடிய அரிவுவெட்டிச் சூடடிக்கும் இயந்திரம் ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பகுதியில் அமைந்துள்ள வயல் ஒன்றில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந்த அறிமுக வைபவத்தில் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் விவசாயத்துறை சார்ந்தோர், விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த இயந்திர அறிமுகம் தொடர்பாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

13 லட்சம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரம் வன்னியின் ஒவ்வொரு பிரிவிலுமுள்ள வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்திலும் வைக்கப்படவுள்ளது என்றும் -

விவசாயிகள் இந்த இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்தி தமது விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்றும்- தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் பயன்பாட்டிற்கு வந்ததும் விவசாய நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தொழிலாளர் பற்றாக்குறைப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணப்படும் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (8-12-305)

## அச்சுவேலி தபாலகத்துக்கு புதிய தபாலதிபர்

அச்சுவேலி,பெப்.5

அச்சுவேலி தபால் நிலையத்தின் பதில் தபால் அதிபராக பி.சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி தபால் நிலையத்தின் தபால் அதிபராகக் கடமையாற்றிய எஸ்.கணேசமூர்த்தி சேவையில் இருந்து ஓய்வு பெற்றதையடுத்து பி.சிவஞானம் நியமனம் பெற்றுள்ளார்.(எ-11)

## கிளிநொச்சியில் விபத்து ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,பெப்.5

கிளிநொச்சி சந்தைக்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரான வெங்கட்ராமன் சண்முகராசா (வயது-26) என்பவரே படுகாயமடைந்தவராவார். காயமடைந்தவர் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினமிரவு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டார். (சு12)

## வாழும் முறையை வாழ்ந்து காட்டியவர்



'ஒருவர் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும்' என்று வாழ்ந்து காட்டியவர் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த அமரர் பண்டிதர் தம்பு கணேசபிள்ளை.

சித்தாந்தியாய் வாழ்ந்து காட்டி வேதாந்தியாய் வாழ்ந்து தமது நிலைப்பாட்டினை உலகிற்கு நன்கு உணர்த்தியவர். சாதாரணமான எழுதுவினைஞராக சேர்ந்தபொழுது சிங்களப் படிப்பினை ஏற்க மறுத்து உடனடியாகத் தமது வேலையை விட்டு விலகி ஆசிரியராகக் கடமையேற்றார். அக்கடமையினைச் செவ்வனே செய்து பலராலும் போற்றப்பட்டார்.

## நீத்தார் நயப்புரை

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர் கல்லூரியின் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றார். கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவராக இருந்து 'நான் முருகன் தொண்டன்' என்ற நிலையுடன் திருப்பணி வேலைகள் சிறப்புடன் நடைபெற உதவினார். திருப்பணி வேலைகளில் தடைகள் வரும்போது 'மூலஸ்தானத்தில் இருப்பனை நினைப்பேன்'. 'அவன் அருளாலே வெற்றி கிட்டும்' என்று கூறுவார்.

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்துக்கு முழுமனதுடன் முன்னின்று உழைத்தவர். இவரிடம் பல மாணவர்கள் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய பாடங்களைக் கற்று முன்னேறியுள்ளனர். இவருடைய கற்பித்தலதிறமையும், ஆளுமையும், அடக்கமான அறிவாற்றலையும ஆசிரிய சமூகத்தினர் பின்பற்றுவார்களானால் நல்லதோர் சமுதாயம் உண்டாகும் என்பதில் சந்தேகம் இல்லை. 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர். சைவம் தமிழ் இரண்டையும் தமது இரண்டு கண்கள் போல் காத்து வந்தமை இங்கு நினைவு கூரத்தக்கவையாகும்.

சிவகுரு தேவராசலிங்கம்.

# நூல்வரிசை



நூல் :- சந்நிதி முருகன் செஞ்சொன்மாலை
ஆசிரியர் :- புலவர்மணி, பண்டிதர் க.மயில்வாகனனார் (சிகண்டியார்)
வெளியீடு :- பதிப்பாளர் வட்டம், சிவன்கோவில் வளாகம், வட்டுக்கோட்டை.

இப்பத்திப் பனுவல் 102 மரபுவழி செய்யுள்களைக் கொண்டது. முருகக் கடவுளின் திருவருட் செயல்களான நாரதர் வேள்வியில் வந்த ஆட்டுக்கடாவை அடக்கி ஊர்ந்தமை, பிரமனைச் சிறையிலிட்டமை, கிரவுஞ்சத்தை வேல்விடுத்து பிளந்தமை, மாக்கடல் நடுவன் மாவாய் நின்ற சூரனைத் தடிந்தமை போன்ற மற்றும் பல பல அருளிச் செயல்களையும் இடையிடையே கூறிச் செல்கின்றது. சுருங்கச் சொல்லின் இயல்பான உணர்வெழுச்சி, மார்புசால் நம்பிக்கை மற்றும் ஈடுபாடு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

பாடல்கள் அந்தாதி என்னும் வடிவ நிலையில் அமைந்துள்ளன. ஒரு பாடலின் முடிவுச் சொல் (எழுத்து அல்லது சொற்றொடர்) அடுத்துவரும் பாடலின் தொடக்கமாக, அமையும் வகையில் பாடப்படுவதாகும். பாடல்கள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் செந்தமிழ்ச் சொற்களால் ஆனவை. சொற்சுவை, பொருட்சுவை, சந்த இன்பம், உணர்ச்சிபாவம் என்பன எல்லாம் நிறைந்துள்ளன.

சுவைகளை ஒன்பதாக விரிப்பர். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சாந்தம் என்பனவாகும். இச்சுவைகளுள் சில செஞ்சொன் மாலையில் ஆங்காங்கே செறிந்து விரிந்து வருவதைக் காணலாம்.

முருகப்பெருமானை ஆசிரியர் கேசாதிபாத முறையிலே வருணிக்கின்றார்.

உதாரணமாக ஒரு செய்யுள்.

"பெரிதே வதனம் கருணை பெருகும்
விரியும் விழிகள் வினைகள் தடியும்
புரிபுன் னகையில் புலமை வளரும்
இரியும் உறுநோய் பதமென் மலரால்"

(செய் - 11)

நூலாசிரியர் பண்டிதர் க.மயில்வாகனார் தமிழ்ப் பற்றும் சைவப் பற்றும் மிக்க பேரறிஞர், கலாபூஷணம், கலாவாருதி, புலவர்மணி முதலாய விருதுகளைப் பெற்றவர்.

தனது தள்ளாத வயதிலும் 'சஞ்சீவி' வார இதழில் 'சிகண்டியார்' என்ற பெயருள் மறைந்திருந்து சங்க இலக்கியங்களின் சுவையை வாசகர்களுக்கு விருந்தாகப் படைத்து வந்தவர்.

இவர் திருப்பள்ளியெழுச்சி, பதிகம், இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, பிள்ளைத்தமிழ் முதலிய பல பகதிப்பனுவல்களை ஆக்கியுள்ளார். விசுவேசர் புராணம் என்னுஞ் சீரிய நூலினை மரபுவழிக் கவிதைகளாற் புனைந்து அரங்கேற்றியுள்ளார்.

இவர் தமது எண்பத்தேழாவது பிறந்தநாள் அன்று - தைப்பூசத்திருநாளன்று (25.01.2005) "பூமாலை வாடும் பொன்மாலைக்கு மணமில்லை" என்று எண்ணி சந்நிதி முருகன் செஞ்சொன் மாலையைத் தொண்டைமானாறு வேலோன் திருவடிகளில் சாத்தி வழிபட்டார்.

அன்பர்கள், முருகனடியார்கள், தமிழ்ப் பற்றாளர்கள் இந்நூலினைப் பெற்றுப் படித்துச் சந்நிதியான் திருவருள் கைகூடப்பெறுவார்களாக.

- வட்டூர் சுந்தரனார்.



நூல்:- தவிர
ஆசிரியர்:- தானா விஷ்ணு

கவிதைக்கான இரு மாத இதழாக 'தவிர' வெளிவரத் தொடங்கியுள்ளது. இளம் கவிஞராக அறியப்பட்ட தானா விஷ்ணு இவ்விதழின் ஆசிரியர். சிறந்த வடிவமைப்புடன் கையடக்கமான அளவில் 'தவிர' வாசகர்களைக் கவர்கிறது.

"இளைய தலைமுறையினர் கவிதை பற்றிய தேடல்களைச் சரியான முறையில் நிகழ்த்த முடியாமல் உள்ளனர். இன்றைய பத்திரிகைகள் கூட கவிதைக்கான சரியான அந்தஸ்தினை வழங்காமல் வெறுமனே தமது வியாபார நோக்கத்தினை மட்டும் கருத்திற்கொண்டு மலினமான கவிதைகளையும் அறிமுகங்களையும் செய்கின்றன. இதனால் இளையவர்கள் அவற்றையே கவிதை என நம்பிவிடும் அபத்தமான ஒரு நிலைமை எமது புலத்திலே தோன்றுவதையும் அவதானிக்க முடிகிறது. அதுமட்டுமன்றி சில மலினமான கவிதைத்தொகுப்புகளை சில மூத்த படைப்பாளிகள் உச்சமெனப் புகழ்ந்து முன்னுரை எழுதும் நிலைமையும் கவிதைக்கான அடுத்த கட்டத் தேடலினைத் தடுத்துவிடுகிறது.

எனவே, நேர்த்தியாகவும் கலை நுணுக்கத்தோடும் வெளிவரும் கவிதைகளை சமூகத்தில் அறிமுகம் செய்யும் நோக்குடன் 'தவிர' வெளிவருகிறது என்ற ஆசிரியனின் கருததோடு வெளிவந்திருக்கிறது. 1ஆவது இதழ். தரமான கவிதைகள், கவிஞருடனான நேர்காணல், கவிந்நூல் அறிமுகங்கள், விமர்சனங்கள் என நல்ல படைப்புக்களை உள்ளடக்கியுள்ள இவ்விதழில் -

எஸ்.போஸின், யாத்ரீகன், செல்வமனோகரி, தா.இராமலிங்கம், ஆத்மரிஷி, த.மலர்ச்செல்வன், நா.ஜனனி, ஜொனி மதுரநாயகம் ஆகியோரின் கவிதைகளும் ந.சத்தியபாலன், ரெங்கராஜன் ஆகியோரின் மொழிபெயர்ப்புக் கவிதைகளும் இடம்பிடித்துள்ளன.

மேலும், வாசகனின் உணர்வாக சசி எழுதிய அஸ்வகோஸ் கவிதை பற்றிய ஆக்கமும் யாத்திரீகன் ந.சத்தியபாலனிடம் நேர்கண்டவையும் ஷாங்கின் செய்யும் 'ஓரிடம்' கவிதைநூல் பற்றிய அறிமுகமும் இந்த இதழை கனதியாக்கியுள்ளன. பல்வேறு கருத்துநிலைகளையும் சமகால கடப்புகளுக்குப் பொருத்தமானவாறு உள்வாங்கி கலையுணர்வுடன் பதிவுசெய்துள்ள 'தவிர' இதழ் இருமாதங்களுக்கொருமுறை எம்கைகளில் வருதல் அதன் சிறப்பு.

'தவிர' நல்ல கவிஞர்களும் வாசகர்களும் தவிர்க்கக் கூடாத ஒன்று.

- லக்ஷ்மணன்



நூல்: அணிதிரளும் சிறு அலைகள்
ஆசிரியர்: தேவி பரமலிங்கம்
வெளியீடு: யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்

'அணி திரளும் சிறு அலைகள்' என்ற நாவல் ஏற்கனவே அறிமுகமாகிவிட்ட ஒன்று. யாழ.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் வெளியீடாக வெளிவந்த இந்நாவல் ஆசிரியர் த.பரமலிங்கம்.

தேவிபரமலிங்கம் என்று அறியப்பட்ட இவர் 25 வருடங்களுக்கு முன்பாகவே எழுத்துலகில் பிரகாசிததவர். தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களுக்காகவும் முதலாளி வர்க்கத்தின் சுரண்டல்களைக் கண்டித்தும் இவரது அநேக எழுத்துக்கள் அமைந்தன. இந்நாவலின் கதைப்பரப்பு பெரும்பாலும் ஒரு 'சலூன்' ஐ மையமாகக் கொண்டு நகர்கிறது. இந்தச் சலூனின் சொந்தக்காரன் 'கணபதி' இக்கதையின் நாயகனாகவே இனம் காணப்படக்கூடியவன்.

கடற்றொழிலாளர்கள், சம்மாட்டிமார்கள் வந்து செல்லும் ஓர் இடத்தில் கணபதியின் சலூன் இருக்கிறது. இதனால், ஒரு நன்கு தெளிந்த அறிவுடையவராகக் காட்டப்படும் கண பதி முதலாளிகளின் சுரண்டல்கள் பற்றி விவாதிப்பவராகக் காட்டப்படுகிறார்.

மொத்தத்தில் இந்த நாவல் கால்நூற்றாண்டுக்கு முன்னர் எமது தேசத்தில் தமிழ் மீனவர்கள எப்படி வாழ்ந்தார்கள், இவர்களுக்கிருந்த வாழ்வியல் சிக்கல்கள் என்னவென்பதை படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. ஊரையே கடல் காவுகொண்டுபோய்விட்ட இந்த நாளில் இந்நாவல் எங்கள் கடந்த காலங்களை மனசில் நிறுத்துகிறது. ஓவியர் ரமணியின் முகப்போவியம் இந்நாவலின் பதிப்புக்கும் கருவுக்கும் மேலும் கனதி சேர்க்கிறது.

-சிவசைலஜா.

# சிறையில் எஸ்.பிக்கு அடுத்த அறைகள் ஜே.வி.பியினருக்குக் காத்திருக்கின்றன!

## ஜனாதிபதி இப்படி சூசகமாகக் கூறியுள்ளார் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு,பெப்.5

அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுககு எதிராக ஜே.வி.பியினர் செயற்பட ஆரம்பித்தால் அவர்கள் உரிய முறையில் கையாளபபடுவார்கள். தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்துவதற்கான முஸ்தீபுகளை மேற்கொண்டுவரும் லால்காந்தாவும், சகாக்களும் சிறையில் அடைககபபடுவார்கள் என ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இப்படிச் சுட்டிக்காட்டுகின்றார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ராஜித சேனரத்தன.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நீர் முகாமைத் துவச்சட்டம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்கை பாரத் எண்ணெய் கம்பனிக்கு வழங்குவது சம்பந்தமான ஒப்பந்தம் என்பன தொடர்பாகப் பரிசீலனை செயயப்பட்டுள்ளது. அங்கே வாலைமடக்கிக் கொண்டிருந்த ஜே.வி.பி. அமைச்சர்கள் நால்வரும் வெளியேவந்து கர்சிக்கின்றனர். இவர்களுக்கும் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு அடுத்த அறைகள் தயாராகின்றன என்கிறார் டாக்டர் சேனாரத்ன.

மின்சாரசபை, பெற்றோலிக் கூட்டுத்தாபனம், ரயில்வேத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் சபை ஆகிய நான்கும் பெரும் நஷ்டத்தில் இயங்குகின்றன என்றும், இது வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடுவதற்குச் சமம என்றும், எனவே, இவற்றைத் தனியாா துறையிடம் ஒப்படைப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்றும் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம அமைச்சரவையில் கூறியுள்ளார்.

அப்போது ஜனாதிபதி முன் அங்கு வாலை சுருட்டிக் கொண்டிருந்த ஜே.வி.பி.அமைச்சர்கள் பின்னர் வெளியேவந்து பொதுமேடைகளிலும், பத்திரிகைகளிலும் வீரம் காட்டுகின்றனர்.

ஜே.வி.பினருக்குத் தைரியமிருந்தால் நேரடியாகவே அரசின் தனியார்மயப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கம் கேட்டு கடிதம் எழுது வார்கள் எனச் சவால் விடுக்கின்றேன்.

இவர்களால் ஒருபோதும் முடியாது. அதற்கான தைரியம் இவர்களிடம் இல்லை. இப்படி எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ராஜித சேனரத்ன மேலும் தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மூன்றில் ஒரு பங்கு இந்திய எண்ணெய்க் கம்பனிக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும் மூன்றில் ஒருபங்கு பாரத் எண்ணெய்க் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு கம்பனிகளும் நேரடியாகவே இந்திய அரச நிர்வாகத்தில் உள்ளவை. இவை இரண்டும் ஒன்றிணைக்கப்படவுள்ளன. பாரத் எண்ணெய்க் கம்பனியின் தலைவர் கூட்டுக் கம்பனிகளின் தலைவராக நியமிககப்படவுள்ளார்.

இதற்கான ஒப்பந்தம் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுவிட்டது.

அடுத்து மின்சாரசபை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நான்கு தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அரசின் திட்டங்களை எதிர்ப்பவர்களுக்கு எதிராகத் தடியடியோ அல்லது பொலஸ் சித்திரவதையோ மேற்கொள்ளப்படமாட்டாது. சொகுசான அறைகளில் பூட்டிவைத்து வசதியான சாப்பாடு கொடுக்கப்படும். சாப்பிட்டுவிட்டு நித்திரை கொள்ள வேண்டியதுதான் - என ஜனாதிபதி வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

அப்படியானால் எதிர்த்துப் பேசுபவர்கள் எவராக இருந்தாலும் சிறைக்குள் தள்ளப்படுவர் என அவர் சூசகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தைரியமிருந்தால் ஜே.வி.பியினர் ஜனாதிபதியிடம் நேரடியாக மோதட்டும் பார்க்கலாம் - என்று மேலும் குறிப்பிட்டார் டாக்டர் ராஜித சேனரத்ன. (க-3)

# திருமலைப் பாடசாலையில் பெற்றோர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,பெப்.5

திருகோணமலை, செல்வநாயகபுரம் பாடசாலையில் நேற்றுமுன்தினம் பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இடம் பெயர்ந்த சுமார் ஆயிரத்து 200 பேர்வரை இப் பாடசாலையிலுள்ள நலன்புரி முகாமில் தங்கியுள்ள நிலையில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு பெரும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாகப் பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்குத் தனியாகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாயினும் அவர்கள் வகுப்பறைகளே பயன்படுத்துகின்றனர் எனவும், பெரும் சுகாதாரச் சீர்கேட்டுக்குப் பாடசாலை உள்ளாகியுள்ளதாகவும் பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (க-3)

## சுனாமியில் சிக்கி உயிரிழந்த

# சுகாதார கூட்டுறவுச் சங்க ஊழியர் குடும்பத்துக்குத் தலா ரூ 1 லட்சம் கிடைக்கும்

சுனாமியால் உயிரிழந்த சுகாதாரத் திணைக்களத்தின் கூட்டுறவு சிக்கனக் கடனுதவிச் சங்க அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கபபட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றினை சங்கத்தின் தலைவர் டபிள்யூ ஏ.டி.விமலரத்ன அனைதது சுகாதர நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

சுனாமி ஆழிப்பேரலையால் உயிரிழந்துள்ள சிக்கன கடனுதவிச் சங்கத்தின் அங்கத்தவர்களின் குடும்பத்தினருக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது மாதாந்தச் சம்பளத்தில் 20 வீதமான தொகையினை தொடர்ந்து 10 மாதங்களுக்கு இதற்கென உருவாக்கப்பட்டுள்ள நிதியத்திற்கு வழங்கி உதவவேண்டும். இந்த நிதியம் இம்மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமது மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்க விரும்பாதவர்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கடிதம் மூலம் "வரையறுக்கப்பட்ட சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம், இல. 37/36, பன்சல் வீதி, கொழும்பு-10 என்னும முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும் - என்று அதில் உள்ளது.

இதேவேளை சுனாமியால் பாதிப்படைந்த சிக்கன கடனுதவிச் சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது விவரத்தினை மேற்படி முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் - அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-13)



முதியோர் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் றோட்டறக்ட் கழகமும், சுவாமி விவேகானந்தா நற்பணி மன்றமும் இணைந்து அண்மையில் கைதடி வயோதிபர் இல்லத்தில் இறை வழிபாட்டு நிகழ்வொன்றை நடத்தினர். அதன்போது எடுக்கப்பட்ட படம் இது. (3-203)

# வாசகர் திருமுகம்

## தோட்டப் பாடசாலைச் சேவை ஓய்வூதியத்தில் புறக்கணிப்பு

ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு கணக்கிடும்போது அரசினர் பாடசாலையில் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் (S.S.C, A/L, O/L தகுதியுடையவர்) ஒரு வருட சேவைக்கு ஒரு புள்ளி வீதம் அவர் ஆசிரியர் பயிற்சியை முடிக்கும்வரையான காலப்பகுதியைக் கணிப்பிட்டுப் புள்ளிகள் வழங்கியும் அதே தராதரமுடைய தோட்டப் பாடசாலையில் கற்பித்து அரசினர் பாடசாலையில் சேவையைத் தொடர்ந்த ஆசிரியர்களுக்கு தோட்டப்பாடசாலைச் சேவைக்கு ஒரு புள்ளிதானும் வழங்காது ஓய்வூதியம் கணிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்டக் கல்வித்திணைக்களங்களினால் தோட்டப்பாடசாலை ஆசிரியர்களின் தராதரச் சான்றிதழ்கள் பரிசீலித்து ஆசிரியர் தகுதியானவர் என (Approval) அனுமதிக்கடிதம் பெற்று, வருடாந்தம் வட்டாரக்கல்வி அதிகாரி (C.E.O) உதவிக் கல்விப் பணிப்பாளர்களினால் (A.D.E) தோட்டப் பாடசாலைகளுக்குச் சென்று ஆசிரியர்களின் தராதரம் மாணவர்களின் தரம் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தும் வந்துள்ளார்கள்.

அரசினர் பாடசாலை மாணவர்களின் கல்வித்தரத்திற்குத் தோட்டப் பாடசாலை மாணவர்கள் எந்தவகையிலும் குறைந்தவர்களாக இருந்ததில்லை. பௌதிக வளங்கள் குறைவாக இருந்தும் தரம் குறையவில்லை. இன்றும் சில அரசினர் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் சிலருககு 7ஆம், 8ஆம் தரங்கள் கல்வி கற்றபோதும் எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், தோட்டப் பாடசாலை மாணவர்களை ஒப்பிட்டால் இந்த நிலை மிகக்குறைவே. எந்த வசதிகளுமற்ற நிலையில் குளிர் பிரதேசங்களில் பல கஷ்டங்களின் மத்தியில் ஆசிரிய சேவையை தோட்டப் பாடசாலைகளில் 15 வருடங்களும், அரசினர் பாடசாலையில் 21 வரு டங்களுமாக மொத்தம் 36 வருடங்கள் சேவையாற்றிய ஓர் ஆசிரியருக்கு முழுமையான ஓய்வூதியம் கிடைக்கவில்லை. காரணம் தோட்டப் பாடசாலைச் சேவை கணிப்பிடப்படாமையே ஆகும்.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு (வடக்கு-கிழக்கு மாகாணம்) தோட்டப் பாடசாலைச் சேவைக்கான சான்றிதழ் ஓய்வூதிய உரித்து வழங்கலும் ஓய்வூதிய நோக்கங்களுக்காகவும் என தோட்டப் பாடசாலைச் சேவையைக் கணிப்பீட்டுக் கடிதம் கொடுத் துள்ளார்கள். ஆனால், அச்சேவைக்கு ஓய்வூதியம் பெறும் ஆசிரியரின் தரத்தைக் கணிப்பதற் கான ஒரு புள்ளிதானும் வழங்காது ஓய்வூதியம் கணிக்கப்பட்டுள்ளது. இதனால் பல ஆசிரியர் கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

எனவே, ஏற்பட்ட் பாதிப்பை நிவர்த்தி செய்ய பெருந்தோட்ட உட்கட்டு அமைச்சு, மலையக மக்கள் முன்னணி, இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியவை தலையிட்டு இதற்குப் பொறுப்பானவர்களுடன் தொடர்புகொண்டு பாதிப்புக்கு உள்ளான ஆசிரியர்களுக்கு விமோசனம் கிடைக்க ஆவன செய்யுமாறு பாதிப்புக்குள்ளான ஆசிரியர்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

*வாதரவத்தை, புத்தூர்.* **எம்.எம்.தங்கத்துரை.**

## சுனாமி அனர்த்தம் பற்றி முன்கூட்டியே தகவல் தராதது சதியா? விதியா?

இன்று ஆசியாக் கண்டத்தை.... ஏன் உலகையே உலுக்கி வைத்துள்ள 'சுனாமி' கடல் கொந்தளிப்பானது பல்லாயிரக்கணக்கான விலை மதிப்பற்ற மனித உயிர்களைக் காவு கொண்டுள்ளதை நாம் அனைவரும் நன்கு அறிந்ததே. பச்சிளம் பாலகன் முதல் வயதானவர் வரை வேறுபாடின்றி அவலச் சாவினை ஏற்படுத்தி உள்ளது. இக்கடல் அனர்த்தமானது அலையுடன் அடிப்பட்டுச் சென்றோர், இடிபாடுகள் மத்தியில் நசுங்கிப் போனோர், சேறு சதிக்குள் புதையுண்டு மாண்டு போனவர்கள், மரக்கிளைகளில் மாட்டிக்கொண்டு மடிந்தோர் இன்னும் காணாமல் போனோர் என ஆயிரமாயிரம் கடல் கொந்தளிப்பின் பின்விளைவை, அவல நிலையை, கொடூரத்தை வெளிக்காட்டி நிற்கிறது.

இத்தகைய அவல நிலையின் பின்னணியை நாம் சிந்திப்போமானால், மறைக்கப்பட்ட விடயங்களை வெளிச்சம் போடமுடியும். உலகிலே அதிக பலம் வாய்ந்த வல்லரசு நாடாகத் திகழும் அமெரிக்காவானது, தனது விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாஸாவில் அதி வசதி வாய்ந்த தொழில்நுட்பத்தினைக் கொண்டுள்ளது. அத்துடன், புத்திஜீவிகளான விஞ்ஞானிகளைக் கொண்டுள்ளமை கண்கூடு. இத்தகைய நவீன கணனி தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டுள்ள அமெரிக்க விஞ்ஞானியால்தான் உணர்ந்து கொண்ட 'சுனாமி' கடல் கொந்தளிப்பை ஏன் முன்கூட்டியே எச்சரிக்க முடியவில்லை? இதை சிறு குழந்தையால் கூட நம்ப முடிந்த விடயமாகுமா?

சிறு சமிக்ஞை கூட கொடுக்க முடியாது விட்டதாக கூறுகிறார். இதை ஏற்க முடியுமா? அதுவும் இவ்வனர்த்தம் ஏற்படுவதற்கு ஏறக்குறைய 3மணித்தியாலங்களிற்கு முன்பே உணர்ந்த இப்பாரிய விடயத்தை எச்சரிக்கை செய்ய இக்கால அவகாசம் போதாதா? இதன் பின்னணி நோக்கம்தான் என்ன? இந்த அசட்டையீனத்தின் காரணம்தான் யாது?

எது எப்படியோ பல்லாயிரக்கணக்கான பாலகர்களையும் ஏனையோரையும் காவு கொண்டதை இன்னும் ஜீரணிக்க முடியவில்லை. புது வருட பண்டிகையைக் குதூகலமாக கொண்டாட ஆவலாக இருந்தவர்களிற்கு கிடைத்த பரிசு இந்த அவலச் சாவும், ஓங்கி ஒலிக்கும் சாக் குரலும், மரண வேதனையுமே.....

*யாழ்ப்பாணம்.* **எஸ்.தீபா.**

## மீசாலை வடக்கில் மின்சாரம் ஒளி இல்லை

மீசாலை ஊரெல்லைத் தெரு வீதியில் வதியும் குடும்பங்களுக்கு தரப்படும் மின்சார வெளிச்சம் மிகக் குறைவாக இருக்கின்றது. குறிப்பாக இரவு 7 மணி தொடக்கம் இரவு 11 மணி வரையிலான காலப்பகுதியில் இப்படி இருக்கிறது. இதன் காரணத்தினால் பிள்ளைகள் படிப்பைத் தொடர முடியாமல் மிகவும் கஷ்ரப்படுகின்றார்கள். வீட்டில் இருக்கும் கைவிளக்குக் கூட வெளிச்சமாக இருக்கும். ஆனால், எமக்குக் கிடைக்கும் மின்சாரமோ மிகவும் மோசமாகவுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி மின்அத்தியட்சகர் கவனத்திற்கு கொண்டு வந்தும், இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்து எமது வீதியில் 25 இற்கும் மேற்பட்ட வீடுகள் மின்சார வசதியைப் பெற்று பயனடைகின்றன. இன்னும் பலர் மின்சாரம் பெறுவதற்கு உள்ளனர். இதனால் மேலும் மின்சாரம் குறைவு ஏற்படும் என நம்புகின்றோம். எல்லா இடங்களிலும் மின்சாரம் சீராக வழங்கியுள்ள போது எமது வீதிக்கும் சீரான மின்சாரம் தரப்படும் என நம்புகின்றோம்.

எமது பகுதிக்கு பிரதான வீதியில் இருந்து மின்சாரத்தை இணைத்துத் தரவும். இப்படி இணைத்துத் தந்தால் எமது பகுதி மிகவும் நல்ல மின்சாரத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இதிலே ஏதாவது ஒரு வழிவகைகளினைச் செய்து எமது பகுதிக்குரிய மின்சாரத்தை சீர்செய்து தரும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

*மீசாலை வடக்கு.* **வே.கிருஷ்ணராசா.**

## வடமராட்சி கிழக்குக்கு மேலதிக கடமைகளுக்கென அலுவலர்கள் இடமாற்றம்

தென்மராட்சி,பெப்.5

சுனாமி கடல் பேரலைகளால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதியில் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தும் வகையில் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சிலர் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிக்கு மேலதிக கடமைகளுக்கென யாழ். அரச அதிபரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நான்கு கிராம அலுவலர்களும், தென்மராட்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இரண்டு கிராம அலுவலர்களும் கணக்காளரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் -

ஜனவரி 26ஆம் திகதி தொடக்கம் இந்த இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## புகுமுக மாணவர் வரவேற்பு

முழங்காவில்,பெப்.5

வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் முதலாம் தரத்தில் கல்வி பயிலும் புகுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.கே.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புகுமுக மாணவர்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டு, ஆசிரியர்கள், மாணவர்களை வகுப்பறைக்கு அழைத்துச் சென்றனர். (10-323-204)

## கண்ணகைபுரம் கிராமம் 'நியாப்' திட்டத்தில் தெரிவு

ஸ்கந்தபுரம்,பெப்.5

கிளிநொச்சி கண்ணகைபுரம் படித்த வாலிபர் திட்டக் கிராமம் 'நியாப்' திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு அதற்கான ஆய்வுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

கிராம அலுவலர் எஸ்.கே.மகேந்திரன் தலைமையில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், உதவி அரச அதிபர் செல்வி சுலோஜினி, 'நியாப்' திட்டப் பிரதிப்பணிப்பாளர் வினோதராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், ஸ்கந்தபுரம் மேற்குப்பகுதி 'நியாப்' திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (10-381-203)

## தாதியர் பயிற்சிக்கு நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,பெப்.5

கடந்தமாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்து பிற்போடப்பட்ட தாதியர் பயிற்சி நெறிக்குத் தெரிவான மாணவிகளுக்கான நேர்முகப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமையும் நாளைமறுதினம் திங்கட்கிழமையும் நடைபெறும் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் த.பத்மநாதன் தெரிவித்தார். (எ-202)

# அரச நிர்வாகம் திறம்படச் செயற்பட பட்டதாரிகள் ஒத்துழைக்கவேண்டும்

### சுகாதாரத் திணைக்களக் கூட்டத்தில் அழைப்பு

குருநகர்,பெப்.5

பட்டதாரிப் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டு அரச திணைக்களங்களில் சேவையை ஆரம்பித்துள்ள பட்டதாரிகள் தராதரம் பற்றிச் சிந்திக்காமல் அரச நிர்வாகம் திறம்படச் செயற்பட தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் மேலதிகப் பிரதிப் பணிப்பாளர் (நிதி) க.தனரஞ்சிதராஜன் -

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் அலுவலர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் கடந்த 2 ஆம் திகதி சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பௌதிகப் பிரதிப் பணிப்பாளர் (நிதி) க.தனரஞ்சிதராஜன் தொடர்ந்து தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் பட்டதாரிகள் பலர் அரச திணைக்களங்களில் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறே எமது அலுவலர்கள் மற்றும் அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் சுகாதார நிறுவனங்களில் பலர் நியமனம் செய்யப்பட்டு, தமது கடமைகளை ஆற்றி வருகிறார்கள்.

- இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் மற்றும் கணனித்துறைகள் ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்களாக உள்ளனர். இவர்கள் நியமிக்கப்பட்டதும் எமது அலுவலக வேலைகள் தடையின்றி நடைபெற்று வருகின்றன. இவர்களைப் போன்று பல பட்டதாரிகள் ஏற்கனவே, அரச துறைகளில் நியமிக்கப்பட்டு கடமைபுரிந்து வருகிறார்கள்.

எனவே, தற்போது நியமனம் பெற்று கடமைபுரிந்து வரும் பட்டதாரிப் பயிலுநர்களும் தமது தராதரம் பற்றிக் கவலைப்படாமல் அரச நிர்வாகம் சிறப்பாக நடைபெறுவதற்கு தமது அறிவை சம்பந்தப்பட்ட திணைக்கங்களுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன், அரச நிர்வாகச் சுற்றறிக்கை தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்களைக் கற்று தமது அறிவை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார். (எ-51)

## ஐ.ஐ.எஸ். கணனி நிறுவன ஆண்டுநிறைவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ். ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுதின விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் யூபிலி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

வருகை அணிவகுப்பு, அறிமுகவுரை என்பவற்றுடன் நிறுவன இயக்குநர், கற்கைநெறி இயக்குநர் எஸ்.பிரபாகரன் ஆகியோரின் உரைகள் முதலில் இடம்பெறும். தொடர்ந்து நிர்வாக உத்தியோகத்தர் அன்ரன் கிறிஸ்ரியன் வருடாந்த அறிக்கை வாசிப்பார்.

பின்னர் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும். அதிக மதிப்பெண் பெற்றுச் சித்தியடைந்த மாணவிக்குத் தங்கப் பதக்கமும், வேறுபல மாணவிகளுக்குச் சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (எ-202)



யாழ்.மறைமாவட்ட இளையோர் தினமான கடந்த 31 ஆம் திகதி இளவாலை புனித யாகப்பர் ஆலய புனித டொன் பொஸ்கோ கழகம் தனது 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளவாலை மறைக்கோட்ட முதல்வரும் பங்குத்தந்தையுமான அருட்திரு.பி.எவ்.பொனிபஸ் அடிகள் புனரமைப்புச் செய்யப்பட்ட டொன் பொஸ்கோ நூலகத்தைத் திறந்துவைப்பதையும், அருகில் கழகத்தின் தலைவர் ஜே.யூட் நிறஞ்சன் நிற்பதையும், ஆண்டு விழா ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பூங்காவை கழகத்தின் முன்னாள் போஷகரும், ஓய்வுபெற்ற மறையாசிரியருமான சூ.டேவிற் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

## கூட்டுறவுச் சங்க பொதுக்கூட்டம்

குருநகர்,பெப்.5

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்கத்தின் கேட்போர் கூடத்தில் தலைவர் சொ.சூ. சிறில் தலைமையில் நடைபெறவுள்ளது.

சென்றவருடம் டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த இப்பொதுக்கூட்டம் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. (8-51)

## மந்துவில் கிழக்கில் சட்டவிரோத மணல் அகழ்வு

தென்மராட்சி,பெப்.5

மந்துவில் கிழக்கு வேதக்காடு குடியேற்றத்திட்டப் பகுதியில் சட்ட விரோதமாக மணல் அகழப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதனைத் தடுக்கச்செல்லும் கிராமமக்கள் மணல் ஏற்றுபவர்களால் தாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# சமய, சமூகப்பணிகளை முன்னெடுப்பதில் முன்னுதாரணமான இலங்கை இந்து மாமன்றம்

**அகில இலங்கை இந்து மாமன்றம் நேற்று பொன்விழா ஆண்டில் கால்பதித்தது. இந்த மன்றத்தின் கடந்தகால, அண்மைக்கால செயற்றிட்டங்கள் தொடர்பாக விளக்குகின்றது இந்தக் கட்டுரை.**

இலங்கை வாழ் மக்களின் உச்ச நிறுவனமாக - இந்நாட்டில் உள்ள இந்து மத நிறுவனங்களினது கூட்டமைப்பாக - ஜய வருடம் தைத்திங்கள் 22ஆம் நாள் (1955 பெப்ரவரி 06) அன்று உதயமான அகில இலங்கை இந்து மாமன்றம் தன் சேவையின் ஐந்து தசாப்தங்களைப் பூர்த்திசெய்துகொண்டு இவ்வருடம் தைத்திங்கள் 22 (2005 பெப்ரவரி 04) அன்று பொன் விழா ஆண்டில் அடி எடுத்துவைத்துள்ளது.

இறைபணிநிற்க, இது மாமன்றத்தின் இலட்சியம், அந்த இலட்சியத்திற்கிணங்க இந் நாட்டில் சமயப் பணிகள் பலவும் மக்கள் துயர் துடைக்கும் சேவையையும் மகேசுவரன் பூசையாக ஏற்றி நடத்தி வருகின்றோம். அதேசமயம், இந்நாட்டு இந்து மக்களின் குரலாக எங்களின் உடன் பிறப்புகள் பல வேதனைகளையும் சோதனைகளையும் எதிர்நோக்கிய வேளையில் அவர்களின் பிரச்சினைகளை உரியவர்களுக்கும் உலகத்திற்கும் எடுத்துச் சொல்லி வந்திருக்கின்றோம்.

இந்த நாட்டில் இந்து மக்கள் தமிழ் பேசும் மக்களாக - தமிழினத்தைச் சார்ந்தவர்களாக - அரசியல் தாக்கங்கள் பலவற்றை எதிர் நோக்கி வந்திருக்கின்றனர். அந்தக் கட்டங்களிலும் அரசியல் சார்பின்றி இவர்களின் சார்பில் குரல் கொடுக்கவும் மாமன்றம் தயங்கவில்லை. சர்வகட்சி மாநாட்டில் கொழும்பு இந்து பிரஜைகள் குழுவின் அங்கமாக வெளிநாட்டுத் தூதரங்களுடனான சந்திப்புக்களில் தமிழ்மக்களின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தும் அரசியல் தீர்வே சமாதானத்திற்கு ஒரு வழியென எடுத்துரைத்திருக்கிறோம். மாமன்றத்தின் கருத்துக்களையொட்டித் தமிழ்ப் பத்திரிகைகள் தலையங்கங்களும், ஆசிரிய கருத்துரைகளும் எழுதியிருக்கின்றன. வெளிநாட்டு ஊடகங்கள் மாமன்றத்தின் அறிக்கைகளுக்கும் செய்திகளுக்கும் முக்கியத்துவம தந்திருக்கின்றன.

மாமன்றத்திற்கு அரசினால் நீண்டகாலக் குத்தகையில் (மற்ற மதத்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டது போல) கொழும்பு மாநகரில் கிடைத்த காணியில் தலைமையகம் அமைப்பது பல காரணங்களுக்காகத் தாமதமானாலும், 1990 ஒக்ரோபர் முதல் எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகளால் பல பிரச்சினைகளுக்கு எதிர் நீச்சல் போட்டு தலைமையகக் கட்டட வேலைகள் சுமார் ஐந்தரை ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டு, 03.05.1996 இல் தலைமையகத்தின் ஐந்தாம் மாடியில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் எழுந்தருளி மகா கும்பாபிஷேகத்துடன் திருவருள் பாலிக்க ஆரம்பித்தார். தலைநகரில இந்துக்களின் தலைமையகக் கட்டடம் எழும்பவில்லையே என அங்கலாய்த்துக் கொண்டிருந்த இந்துமக்களுக்கு இந்த நிகழ்வு நிம்மதியைத் தந்தது.

இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரிக்குப் பின்னால் இருக்கும் 118 'பேர்ச்' காணியைக் கொள்வனவு செய்து இந்துக் கல்லூரியில் அமைத்து விடுதிகளை விஸ்தரித்து, பெண பிள்ளைகளுக்கும் வயோதிபர்களுக்கும் விடுதிகள் அந்தச் 'சக்தி இல்லத்தில்' நிறுவி நடத்தி வருகின்றோம். அதற்கு அண்மையில் இருக்கும முதலாவது ஒழுங்கையில் அமெரிக்காவில் வசிக்கும் திரு.திருமதி செல்வரத்தினம் தம்பதியினர் மாமன்றச் சமூகப் பணிகளுக்கென்றே சுமார் 10 'பேர்ச்' காணியை நல்ல வீடு ஒன்றுடன் நன்கொடையாக வழங்கியிருக்கின்றனர். அந்தச் 'செல்வா இல்லத்தில்' இளம் சமுதாயத்திற்கு தொழில்வழிகாட்டல் பயிற்சியளிக்க இருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குக் கிட்டிய ஒழுங்கை ஒன்றில் 27½ 'பேர்ச்' விஸ்தீரணமான காணியை வெளிநாட்டுகளுக்குச் சென்ற திருமதி பேரம்பலம் அம்மையார் மாமன்றத்திற்கு நன்கொடையாகத் தந்திருக்கின்றார். அந்தக் காணியில் சமய பிரசாரகர் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிக்க விரும்புகிறோம்.

தலைமையகக் கட்டடம் பூர்த்தியான 1996 ஆம் ஆண்டு முதல் மாமன்றத்தின் காலாண்டிதழான 'இந்து ஒளி' இந்து மக்களுக்கு - குறிப்பாக உயர் வகுப்புகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு - பயன்படும் வகையிலான பல கட்டுரைகளையும் ஏனைய ஆக்கங்களையும் கொண்டதாக ஒழுங்காக வெளியிட்டு வரப்படுகின்றது. ஓர் இந்துசமய ஆராய்ச்சி இதழ் வெளியிடவும் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இந்து மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு உதவும் வகையில், மக்கள் தங்களின் மத தத்துவங்களை விளங்கி அறிந்து கிரியைகளின் நோக்கங்களையும் கருதத்துக்களையும் அறிந்துணர்ந்து வாழும் வகையில் இந்து மக்களுக்கு ஒரு கையேட்டினை மாமன்றம் வெளியிட்டது. இதன் பிரதிகள் எல்லாம் விநியோகித்து முடிந்த காரணத்தால் மறுபிரசுரம் செய்ய ஒழுங்குகள் நடக்கின்றன.

தலைமையகக் கட்டடம் பூர்த்திசெய்யப்பட்டபோது மாமன்றம் இந்நாட்டின் இந்துசமய வரலாற்றைப் பிதிபலிக்கும் வகையில் ஒரு சிறப்பு மலரை வெளியிட்டுவைத்தது. அது ஒரு வரலாற்றுப் பதிவேடாகப் பலராலும் போற்றப்பட்டது. பொன்விழா மலர் ஒன்றினை வெளியிடவும் ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. மலையகத்திலும் பின்தங்கிய பல இடங்களிலும் வழிபாட்டுத் தலங்களில் பயிற்சி பெற்ற பூசகர் இல்லாத குறை நிலவுகின்றது. எனினும், பக்தியுடன் பூசை செய்பவர்கள் தங்களுக்கு ஒரு வழிபாட்டுமலர் தொகுப்பு இருந்தால் தமிழில் இறைவனுக்குப் புகழ்பாடி அர்ச்சனை செய்யலாம் என விடுத்த வேண்டுகோளையடுத்து, சிவ வழிபாட்டு மலர் ஒன்றினை மாமன்றம் வெளியிட்டுள்ளது. இப்பிரசுரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. திருக்கேதீச்சர வரலாறு, சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் எழுதிய 'சைவத்தின் மகிமை', சைவப் பெரியார் ஆ.குணநாயகம் எழுதிய 'புதுமைக்கும் வழிகாட்டும் சைவசமயம்' சமயக் கட்டுரைகளின் தொகுப்பு முதலியவற்றை மாமன்றம் வெளியிட்டு வைத்திருக்கின்றது.

**கந்தையா நீலகண்டன்**
(பொதுச் செயலாளர்)

வடக்கு - கிழக்கில் யுத்தம் காரணமாக சொந்த நாட்டில் மக்கள் அகதிகளாகிய துர்ப்பாக்கிய சூழ்நிலையிலும் மலையகத்திலும், களுத்துறை போன்ற இடங்களிலும் மக்கள் வெள்ளத்தினால் அகதிகளான போதும், சமீபத்தில் சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் அம்பாறை (கல்முனை), மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் அல்லலுற்ற அகதிகளுக்கு கொழும்பு மாநகரில் சேர்த்ததும் மாமன்றம் கொள்வனவு செய்ததுமான நிவாரணப் பொருள்களை உடனடியாக அனுப்பிவைத்தோம். சில இடங்களில எமது மாமன்ற அங்கத்தவர்கள் நேரடியாகச் சென்று இக்கடமையில் ஈடுபட்டனர். குடும்பங்கள் அகதி முகாம்களிலிருந்து வீடுகளுக்குத் திரும்பியபோது மனித மனிதநேயத்தின் ஆதரவுடன் சமையல் பாத்திரங்கள் வழங்க ஒழுங்கு செய்தோம். மேலும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்களும் வழங்கினோம். பிள்ளைகளைப் பராமரிக்கும் திட்டம் ஒன்றையும் அறிவித்திருக்கின்றோம். ★

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

... மீன்தொட்டிகள், லவ்பேட்ஸ், ... ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், ... குருவிகளும், கூடுகளும் மற் ... செவ்வரத்தை, றோசாக் கன்று ... பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் ... சந்தி, வண்ணார்பண்ணை, (சி-40623)

... நல்லநிலையிலுள்ள சிசில் 60 ... லவ் பேர்ட்ஸ் (LOVE ... களும் விற்பனைக்குண்டு. ... மருத்துவமனை வீதி, யாழ்ப் ... 222 5401 (41677)

... ஐயனார் கோயில் வீதிக்கு ... பயன்தரு மரங்கள் அடங் ... காணி உடன் விற்பனைக்கு ... தொடர்பு: செ.சிவஞானம், ஐயனார் ... சண்டிலிப்பாய். (41657)

... குக்கர் (4 அடுப்புகள்), நல்ல ... தாங்கிகொண்ட பெட்டகம் ... மேசை (முதிரை) என்பன ... தொடர்பு: S.பரராஜசேகரம், ... (மதவடி) (மயில்வாகனம் ... விடுமுறை நாள்களில் பார்வை (41727)

... 14 Srixxx தொடர் இலக்க ... உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ... முதலியார் கோயில் வீதி, ... கொக்குவில். (41712)

... xxxx தொடர் இலக்கமுடைய ... (வெள்ளை) விற்பனைக்குண்டு. ... 0776280153 (சி-40813)

## ... விற்பனைக்கு

... இருபாலை வீதியருகில் ... சுற்றாடலில் 10 பரப்புக் காணி ... விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக் ... தொடர்புகளுக்கு: க.நாகராஜா, 282, ... வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். ... 2585 (41723)

... பல்கலைக்கழகத்தில் பிரதான வாயி ... 100 m தூரத்தில், இராமநாதன் ... அமைதியான சூழலில் 4 பரப்புக் ... உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு ... ஞானேஸ்வரி, 55A, பழம் வீதி, ... T.P.: 0776647985 (41718)

... பச்சிலைப்பள்ளியில் இருக்கும் ... 15 பரப்பு விஸ்தீரணம் கொண்ட ... சோலைக்காடு' அல்லது 'சோலை' ... தென்னந்தோட்டக் காணி விற்பனைக் ... வாங்கவிரும்புவோர் தொடர்புகொள்ள ... "ராஜாவாசா", 151, கச்சேரி ... யாழ்ப்பாணம். T.P.: 2873, ...203974. (41442)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாடு, வெளிநாடு (பிரஜா உரிமை உள்ள) மணமகன், மணமகள்களின் ஜாதகங்கள் உண்டு. போட்டோ, ஜாதகத்துடன தொடர்புகொள்ளவும். M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் வீதி, சாவகச்சேரி. (41287)

## மணப்பெண்கள் தேவை

யாழ்ப்பாண இந்துகௌரவ, 1965 - வர்த்த கர், 1968 - அரச உத்தியோகத்தர், 1975 - ஐந் தடி, சைவபோசன, காப்புறுதி உத்தியோகத்தர் கிரகபாவங்கள் முறையே நாற்பது, ஐந்து, ஐம பதுள்ள சகோரதர்களுக்குத் தொழிலுள்ள, செவ்வாய் தோஷமற்ற மணப்பெண்கள் மட்டும் ஜாதகம் முழு விவரத்துடன் விண்ணப்பிக்க வும். தொடர்பு: விள/இல. 2490, மே/பா. உத யன், யாழ்ப்பாணம். (41721)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்நத 35 வயதுடைய, நட்சத்திரம் அவிட்டம் 2ஆம் பாதம், கிரகபாவம் 12, செவ்வாய்க் குற்றமற்ற பட்டதாரி ஆசிரிய மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடனும் குடும்ப விவரத்துடனும் தொடர்புகொள்க. விள.இல. 2495, C/o. உதயன். (41634)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்து, உத்த ராடம், 3ஆம் பாதம், 1970இல் பிறந்த, பாவக் கிரகம் 39¼ உள்ள, வேலைபார்க்கும், அழகான, படிதத மணமகளுக்கு அரச உத்தியோக மண மகன் தேவை. சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகத்துடன் சாவகச்சேரி, துர்க்காதேவி ஆலய வீதி, M.ரவீந்திரன் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (41643

## மணமகன்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்து, 1981இல் பிறந்த, விசாகம் முதலாம் பாதம், அழகான, படித்த மணமகளுக்கு லண்டன் பிரஜாவுரிமை யுள்ள மணமகனும் 1969இல் பிறந்த, உத்த ரம் முதலாம் பாதம், 4இல் செவ்வாய், ஆசி ரியைக்கு உள்ளூர் அரச உத்தியோக மண மகனும் தேவை. சமீபத்தில் எடுத்த புகைப் படம், ஜாதகத்துடன் M.ரவீந்திரன், துர்க்கா தேவி ஆலய வீதி, சாவகச்சேரி என்ற முகவரி யில் தொடர்புகொள்ளவும். (41644)

## வீடு விற்பனைக்கு உண்டு

மானிப்பாய், நவாலி வடக்கு, புலவர் வீதியில் டாக்டர் சரவணபவான் வீட்டிற்கு அருகில் நிலப்பரப்பு பத்து (நி.ப 10) விஸ்தீரணம் கொண்ட காணியும் அதில் அமைந்த ஆறு (06) அறைகள் கொண்ட பெரிய வீடும் விற்பனைக்கு உண்டு. இவ்வாதனத்தினை விலைக்கு வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் என்னுடன் தொடர்புகொள்ளலாம்.

**சபாபதி வன்னியசிங்கம (உரிமையாளர்)**
**ஸ்ரீகணேசன் புடைவை அகம. சுன்னாகம்.**
தொலைபேசி இலக்கம்: 0777-147983-மாலை 7.30 மணிக்குப் பின்.
(41633)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41598)

புறொயிலர், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்) தொடர்புகளுக்கு: New R.S.K. FARM, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், New R.S.K. FARM, பெரிய மதவடி, மானிப்பாய் வீதி, உடுவில். (41733)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர், கல்பேட் கூடிய நிறையில் தினமும் சுத்தம்செய்து கொடுக்கப் படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (41736)

## வீடு வாடகைக்கு

மாநகர சபை அலுவலகத்திற்குப் பின்புறம் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகை / ஒத்திக்கு உண்டு. தொடர்பு: T.P.: 0773089963 (41709)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 14.02.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் சென்ரர் - சந்நிதி, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (41599)

## தேவை

**யாழ். நகரில் இயங்கும் மென்பான நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி, வேலையாள்கள் அமைய அடிப்படையில் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.**

*தொடர்புகளுக்கு:*
**0777 589608**
(41731) (24-14-18)

## தவறிவிட்டது

திரு.கந்தையா என்பவருடைய மோட்டார் சைக்கிள் முன் இலக்கத்தகடு NPHT 8250 சாவகச்சேரிக்கும் மட்டுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாபு றெக் கோடிங் ஸ்பொட், பஸ் நிலையம், சாவகச் சேரி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
T.P.: 222 5401 (40436)

## மோ.சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலருக்கும் மோட்டார் சைக்கிள் வாடகைக்கு வழங்கப்படும். தொடர்பு: 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.:077 6544544, 077 6660177. (40436)

## ஈழவர் திரைவிருந்து வீடியோக் காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ். பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புவியியற்றுறை மண்டபத்தில் 'ஈழவர் திரைவிருந்து' என்னும் மூன்று குறுந்திரைப்படங்கள் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளன.

ஐரோப்பாவில் வசிக்கும் தமிழர்களது வாழ்வுத் தரிசனங்களை இந்தக் குறும்படங்கள் காட்சிப்படுத்துகின்றன.

இந்தப் படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசாவின் நெறிப்படுத்தலின் கீழ் மேற்படி படங்கள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும்.

ஆர்வலர்கள் அனைவரும் படக்காட்சி நிகழ்வில் கலந்துகொள்ளலாம் என்று இதன் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-203)

## தபாலதிபருக்கு இடமாற்றம்

அச்சுவேலி,பெப்.5

காங்கேசன்துறை தபால் நிலையத்தின் தபால் அதிபர் எஸ்.பவளத்துரை யாழ்ப்பாணம் தபால் நிலையத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை தபால் நிலையத்தின் தபால் அதிபராக சிரேஷ்ட நிலை உதவியாளர் தே.கோபாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-11)

## ... விழா

...,பெப்.5 ... புத் ... கொழும் ... புதிய ... விழா ... று ... 11 ... யில் ... துது. ... பிர ... (முன் ... கி.வி. ... னும் ... ளாக ... தே. ... கலந்து ... த்தை ... வங்கி ... சர்வ ... பிரிவுத் ... அதிகாரி ... சம்பிர ... திறந் ... (எ-202-204)

## ... மாணவர் ... அங்குரார்ப்பணம

...ணம்,பெப்.5 ... உயர்தொழில் ... நிறுவனத்தின் ... மாணவர் ... அங்குரார்ப்பண ... இன்று ... கிழமை காலை ... மணிக்கு நிறு ... வனத்தில் நடைபெற ... (எ-202)

## பதவி வெற்றிடம்

**Dialog G.S.M இன் அதிகாரமளிக்கப்பட்ட முகவரான The Phone Shop நிறுவனத்திற்குக் கணனியில் Page Maker, Corel Draw, Photoshop தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.**
**பணியாற்ற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் 2005.02.05, 06, 07 ஆகிய தினங்களில் நேரடியாகச் சமுகந்தரவும்.**

தொடர்புகளுக்கு:
**The Phone Shop**
பஸ் நிலைய முன்பாக,
நெல்லியடி.

T.P.No.: 021 2263770
077-7570110

(C/40810)(42-14-18-24)

## அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

**தோற்றம்**
**14 - 11 - 1932**



**மறைவு**
**07 - 01 - 2005**

### அமரர் முருகுப்பிள்ளை இராமஜெயம்

07.01.2005 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து எமது வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியினை நவில்கிறோம்.

அத்துடன், இன்று (05.02.2005) தும்பளை, முத்துமாரி அம்மன் அந்தியேட்டி மடத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மணியகாரன் சந்தி,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.* (சி-40798) (24-14-18)

**மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## பணிநிலை வேண்டுகை

**கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது தன்வரலாறடங்கிய (சுயவிவரம்) வேண்டுகைகளை 2005.02.15 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.**

### பணிநிலை

1. அலுவலர் (ஆண்கள்)
2. உதவி அலுவலர் (ஆண்கள்)
3. கணினித் தரவுப்பதியுநர் (இருபாலாரும்)

### கல்வித்தகைமை

| | |
|---|---|
| பணிநிலை 01. | க.பொ.த. (உ/த.) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |
| பணிநிலை 02. | க.பொ.த. (சா/த.) பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சி அடைந்திருத்தல் வேண்டும். |
| பணிநிலை 03. | க.பொ.த. (சா/த.) பரீட்சையில் தோற்றியிருப்பதுடன் எம்.எஸ்.ஒபிஸ் கற்கைநெறி முழுமை செய்திருத்தல் வேண்டும். |

### வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:

**பொறுப்பாளர்,**
**மனிதவள மேம்பாட்டுப்பகுதி,**
**நாகதம்பிரான் வீதி,**
**கிளிநொச்சி.**

### நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:

**2005.02.23**
**காலை 10.00 மணிக்கு**

### நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:

மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

குறிப்பு: நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(சி-40817)
(24-14-16)

**ஆளுகை, மனிதவள மேம்பாட்டுப் பகுதி.**




இலங்கையின் 57ஆவது சுதந்திரதினமான நேற்று யாழ். செயலகத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டிருப்பதையும் யாழ். பல்கலைக்கழகத்தில் சுதந்திரதினத்தைத் துக்கதினமாக அனுஷ்டித்து கறுப்புக்கொடி ஏற்றப்பட்டிருப்பதையும் யாழ். நகரப்பகுதியில் உள்ள படையினரின் காவலரண் ஒன்றில் தேசியக்கொடி ஏற்றப்பட்டிருப்பதையும் நகரப்பகுதியில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)



வடமராட்சிப் பிரதேசத்தில் மந்திகைச்சந்தியில் உள்ள படையினர் முகாமில் தேசியக்கொடி ஏற்றப்பட்டிருப்பதை முதல் படத்திலும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையில் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் வடமராட்சி தேசிய எழுச்சிப் பிரதேச செயலகத்தில் கறுப்புக்கொடி பறப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

### தவணை தொடங்கி ஒருமாதம் கடந்தது

# தரம் ஏழு மாணவர்களுக்குச் சில பாடப்புத்தகங்கள் கிட்டவில்லை

அச்சுவேலி,பெப்.5

முதலாம் தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பமாகி ஒருமாதம் நிறைவடைந்துள்ள நிலையிலும் தரம் 7 மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் சில இன்னமும் விநியோகிக்கப்படவில்லை என்று பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

தரம் 7 இற்கான கணிதம், தமிழ்மொழியும் இலக்கியமும், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆகிய பாடநூல்களே இன்னும் வழங்கப்படவில்லை. கடந்தவருடம் ஆறாம் தரத்தில் தொனப்பொருள் பாடத்திட்டத்தின் அடிப்படையில் வீடு, நீர், உணவு, சக்தியும் தொடர்பாடலும், பயணமும் போக்குவரத்தும் என்ற ஐந்து தலைப்பில் புதிய பாடநூல்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

கடந்த வருடம் 6ஆம் தரத்தில் அறிமுகம் செய்யப்பட்ட தொனப் பொருள் சார்ந்த பாடத்திட்டம் இந்தவருடம் 7ஆம் தரத்திலும் அடுத்த வருடம் 8 ஆம் தரத்திலும் தொடரப்படவுள்ளது.

புதிய பாடநூல் விநியோகத்தில் உள்ள தடங்கல் குறிப்பிட்ட ஒரு மாணவர் குழுவை தொடர்ச்சியாக பாதிப்படையச் செய்துவருவதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

7ஆம் தர மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தக விநியோகத்தின் தடங்கலுக்குக் காரணம் தொனிப்பொருள் சார்ந்த பாடத்திட்ட புத்தகங்களைத் தெரிவுசெய்வதில் ஏற்பட்ட தாமதமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது கல்வி வலயங்களுக்குத் தேவையான புத்தகங்களின் எண்ணிக்கையை உரியகாலப்பகுதியில் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதமும்தான் எனக் கூறப்படுகின்றது.

கடந்த காலங்களில் இலவசப்பாட புத்தகங்கள் கல்விச்சமூகத்தின் விருப்பத்திற்கு ஏற்பத் தெரிவுசெய்யப்படாமல் குறிப்பிட்ட பாடப் புத்தகங்கள் நேரடியாகப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தற்பொழுது தொனிப்பொருள் சார்ந்த பாடத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர் குழுக்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் முன்கூட்டியே பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுப் பாடசாலைச் சமூகத்தின் தெரிவுக்குச் சந்தர்ப்பம் வழங்கித் தெரிவுசெய்யப்படும் புத்தகத்தை மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கும் நடைமுறை பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

மேற்படி நூல்கள் விநியோகிக்கப்படாமையால் இங்குள்ள தனியார் கல்வி நிலையங்கள் சில அந்தப்பாடநூல்களைப் பிரதி செய்து ஒரு பாட அலகு 10 ரூபா என்ற அடிப்படையில் மாணவர்களுக்கு விநியோகித்து வருவதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (10-11)

## நினைவுக்கல் திரைநீக்கம்

விசுவமடு,பெப்.5

'ஓயாத அலைகள் - 3' இன் போது வீரச்சாவடைந்த வீரவேங்கை பாலன் என்றழைக்கப்படும் ஞானவேல் கோணேஸ்வரனின் நினைவுக்கல் திரைநீக்கமும் வீரவணக்கக்கூட்டமும் கடந்த வாரம் நடைபெற்றன.

விசுவமடு மாவீரர் மண்டபத்தில் வீரவணக்கக்கூட்டம் நடைபெற்றது. விசுவமடு மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சீதாராம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் வீரவணக்க உரையினை நிகழ்த்தினார்.

பின்னர் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் நடுகல் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பொதுமக்கள், போராளிகள் எனப்பலர்கலந்துகொண்டனர். (10-402-204)

# யாழ்.சிறைச்சாலையிலிருந்து நேற்று 42 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம்,பெப்.5

இலங்கையின் 57 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்.சிறைச்சாலையிலிருந்து 42 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இவர்கள் நேற்று முற்பகல் 11 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

கசிப்பு உற்பத்தி, மணல் கடத்தல், மரம் கடத்தல், திருட்டு மற்றும் மதுபோதையில் பொதுமக்களைத் தொந்தரவு செய்தல், கோஷ்டி மோதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 40 ஆண் கைதிகளும், இரண்டு பெண் கைதிகளுமே பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட 42 பேரில் ஏழு பேர் வேறு வழக்குகளுக்காக மீண்டும் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்- என்று சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் தெரிவித்தார்.

இதேவேளை - நேற்று நாடு முழுவதும் சுதந்திர தினத்தை முன்னிட்டு 2 ஆயிரம் கைதிகள் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டனர். (10-13)

# வரணி நலன்புரி முகாமில் நிலவும் இட நெருக்கடியைச் சீராக்க ஏற்பாடு

தென்மராட்சி,பெப்.5

வரணி மகா வித்தியாலய நலன்புரி நிலையத்தில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியினை - நிவர்த்தி செய்யும் முகமாக அங்கு சேதமடைந்துள்ள கேட்போர் கூடமும், விறாந்தையும் திருத்தப்படவுள்ளன. இவற்றின் கூரைகளுக்கான கூரை விரிப்புகள் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நலன்புரி நிலையத்தில் மணல்காட்டைச் சேர்ந்த 45 குடும்பங்கள் தங்கியுள்ளன என்றும் -

வித்தியாலயம் ஆரம்பிப்பதற்காக நலன்புரி நிலையத்தில் இருந்த குடும்பங்கள் அங்குள்ள கட்டடம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டதால் இடநெருக்கடி ஏற்பட்டதையடுத்து, கேட்போர் கூடத்திற்கும் அதன் விறாந்தைக்கும் விரைவில் கூரைவிரிப்புகள் பொருத்தப்படவுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)



ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் யாழ். சிறைச்சாலையில் இருந்து சுதந்திரதினமான நேற்று விடுவிக்கப்பட்ட கைதிகள் சிறைச்சாலையிலிருந்து வெளியேறிக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: கவிதரன்)*

# யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தால் சைக்கிள்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,செப்.5

வடமராட்சி வடக்குப் பிரதேசத்திலும், வடமராட்சி கிழக்கில் உள்ள குடத்தனை, மணல்காடு ஆகிய கிராமங்களிலும் இயற்கை அனர்த்தத்தினால் சைக்கிள்களை இழந்தோருக்கு யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் புதிய சைக்கிள்களை வழங்கி வருகின்றது.

அமெரிக்காவில் உள்ள ஒஸ்ரால்வில் ஐக்கிய மெதடிஸ்த ஆலயம் (Osterville United Methadist Church) இதறகான நிதியினை அங்கு வசிக்கும் அருட்திரு. டி.எஸ்.தர்மபாலன் ஊடாக யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்திடம் வழங்கியதாக ஒன்றியத் தலைவர் டி. ஆர். அருமைநாயகம் தெரிவித்தார்.

முதற்கட்டமாக 250 சைக்கிள்கள் வழங்கப்பட்டதாகவும், அடுத்த கட்டமாக பருத்தித்துறையில் உள்ள கொட்டடி, தும்பளை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கும், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசப் பணியாளர்களுக்கும் புதிய சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்றைய உதயனில் வெளியான செய்திகள் யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் என்பதற்குப் பதிலாக யாழ்.கத்தோலிக்க ஒன்றியம் எனத் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது அதனைத் திருத்தி வாசிக்கவும். (8)

# வீடுகளை விட்டுப்பொலிஸாரை வெளியேறக்கோரி ஊர்காவற்றுறையில் கவன ஈர்ப்புப் போராட்டம்

## சுதந்திரதினமான நேற்று நடந்தது

ஊர்காவற்றுறை,பெப்.5

தமது கிராமத்தின் ஒரு பகுதியை ஊர்காவற்றுறை பொலீஸார் ஆக்கிரமித்திருப்பதைக் கண்டித்தும் - உடன் அவற்றை விட்டு பொலீஸார் வெளியேறவேண்டும் எனக் கோரியும் -

ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கிராம மக்கள் சுதந்திரதினமான நேற்றுக்காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கிராமத்தில் இருந்து காலை 9.30 மணியளவில் பேரணியாக புறப்பட்ட இவர்கள், ஊர்காவற்றுறை பிரதான வீதியூடாகச் சென்று ஊர்காவற்றுறை பொலீஸ் நிலைய நுழைவாயிலில் சிறிதுநேரம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் இப்பேரணியில் பங்குபற்றினர். அவர்கள் 'எங்கள் கிராமம் எங்களுக்கு வேண்டும்' 'பொலீஸே எங்கள் கிராமத்தை விட்டு உடன் வெளியேறு,' 'எங்கள் வீட்டில் நாங்கள் குடியேற வேண்டும்', 'எங்கள கிராமத்திற்குச் செல்லும் பாதையை உடன் திறந்து விடு' என்ற கோசங்களை எழுப்பியவாறும், பதாகைகளை தாங்கியவாறும் சென்றனர்.

இதுதொடர்பாக சென்.அன்ரனிஸ் கிராம அபிவிருத்தி சங்க உபதலைவர் ஜே.ஜேம்ஸ், அதன் உறுப்பினர் ப.சுரேஸ்குமார் ஆகியோர் கருத்துக் கூறுகையில்:-

1990 ஆம் ஆண்டு தீவுப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக எமது கிராமத்தில் இருந்த பல வீடுகள் ஆலயங்கள் என்பன தரைமட்டமாகியுள்ளன. எனினும், 1996 ஆம் ஆண்டு எமது கிராம மக்கள் சொந்த இடங்களுக்கு மீளத்திரும்பியபோது எமது கிராமத்தை ஊர்காவற்றுறை பொலீஸார் ஆக்கிரமித்திருந்தனர்.

இதனால், இக்கிராமத்தை சேர்ந்த பலர் வாடகை வீடுகளிலேயே தங்கியிருந்தனர். அதன் பின்னர் கிராமத்தின் ஒரு பகுதியில் இருந்து ஊர்காவற்றுறை பொலீஸார் தமது காவலரண்களை அப்புறப்படுத்தியதுடன் ஒரு பகுதியில் இருந்தும் வெளியேறினர்.

இவ்வாறு வெளியேறிய பகுதியில் அண்மையில் போரூட் நிறுவனத்தால் சுமார் பதினேழு குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகளே அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், எமது கிராமத்தின் பிரதான வீதியும் மேலும் சில குடியிருப்புக்களும் இன்னமும் பொலீஸாரின் முகாம் பகுதிகளாகவே அமைந்துள்ளன. அவற்றில் முட்கம்பி வேலிகளும், காவலரண்களும் பொலீஸாரினால் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால், எமது கிராமத்தின் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல முடியாதுள்ளது. அதேபோன்று சில குடியிருப்புக்களுக்குத் தனியார் காணிகளூடாகவே செல்ல வேண்டியுள்ளது. அவர்கள் தற்பொழுது தமது காணிகளை மூடி அடைக்க முன்வந்துள்ளனர்.

எனவே, இந்நிலைகளைக் கருத்திற் கொண்டு எமது கிராமத்தின் பிரதான வீதியைப் பொலீஸார் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடுவதுடன், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளையும் பொதுமக்கள் குடியிருப்புக்களை அமைத்து குடியமர வசதியாக அனுமதிக்கப்படவேண்டும்.

· இதுதொடர்பான மகஜரொன்றை ஊர்காவற்றுறை பொலீஸாரிடம் கையளித்தபோது அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர், தமிழீழ விடுதலைப் புலிகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியவற்றிற்கும் நாங்கள் மகஜர் அனுப்பிவைத்துள்ளோம் - என்றனர்.

(ஞ-3-16)

**உடன் தேவை**

காரைநகர்ப் பகுதியில் இடித்து எடுக்கக் கூடிய நிலையிலுள்ள வீடுகள் அல்லது இடிபாட்டுக் கற்கள் உடன் தேவை.

தொடர்பு: 077 6176763

**வேலையாள் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு அச்சக வேலையில் அனுபவமுள்ள தட்டச்சு, கணனி தெரிந்த பெண் பிள்ளை தேவை. 07.02.2005 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்.

**மேனகா அச்சகம்**

342, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (41742)

**யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்**
**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்**

அனைத்துப் பழைய மாணவர்களையும் நாளை (06.02.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(41745) **தலைவர்.**


**விற்பனைக்கு**


- ★ யன்னல், நிலை, கதவுகள்
- ★ தீராந்திகள் ★ காட்டுத்தடிகள்
- ★ நகைக்கடைக்குரிய அலுமாரிகள்
- ★ அலுமினியப்பிற்றிங்ஸ்கள் ★ கொங்கிறீற் மிக்சர்
- ★ வைபரேற்றர்கள்

மேற்குறிப்பிட்ட பொருள்களை பார்வையிட விரும்பினால் கீழ்க் குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்க. (40821)

**கொனிக்கா கலர் லாப்,**

இல.14, ஸ்ரீவெங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3493







இலங்கையின் 57ஆவது சுதந்திர தினமான நேற்று யாழ். நகரில் இயங்கும் 51ஆவது படைப்பிரிவில் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருப்பதையும் - படை அதிகாரிகள், படையினர் நாவாந்துறை முஸ்லிம் பள்ளிவாசலில் மதவழிபாடுகளில் ஈடுபடுவதையும் மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்களுடன் கலந்துரையாடுவதையும் ஏழாலையிலுள்ள களபாவோடை வசந்த நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பராமரிப்பில் இயங்கும் சிறுவர் இல்லத்திலுள்ள சிறுவர்களுக்கு படையினர் மதிய உணவு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

**14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னை மடியில் 27 - 10 - 1978



ஆண்டவன் அடியில் 10 - 02 - 1991

**செல்வன் ஜெயக்கொடி பிரதீபன்**

திதி: ஏகாதசி

ஆண்டுகள் பதினான்கு ஆயிடினும்
ஆறவில்லை எம்மனது!
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: கு.ஜெயக்கொடி (தந்தை)
பழைய ஆஸ்பத்திரி வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. (41579)

தாய், தகப்பன், அக்கா,
அண்ணாமார்,
தங்கை (லண்டன்).

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



அமரர் **சபாரத்தினம் அருளம்பலம்**

கடந்த 06.01.2005 அன்று சிவபதமடைந்த சபாரத்தினம் அருளம்பலம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 03.02.2005 அன்று கீரிமலையில் நடைபெற்றது.

இன்று (05.02.2005) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

*66, அருளம்பலம் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (41746)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சுகாதாரத் தொண்டருக்கு சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம்,பெப்.5

சுனாமி அனர்த்த காலத்தில் சேவையாற்றிய சுகாதாரத் தொண்டர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் மற்றும் மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர், தமிழீழ சுகாதார சேவையின் யாழ். இணைப்பாளர், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், வடமராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி, யுனிசெவ் நிறுவன அதிகாரிகள், உளநலப்பிரிவு அதிகாரிகள், கடற்றொழில் சமாசத் தலைவர், பருத்தித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதாரத் தொண்டர்களையும் இந்நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கத் தலைவர் ஜெ.ரவிச்சந்திரன் கேட்டுள்ளார். (எ-203)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லர் செல்லம்மா

அச்சுவேலி, கல்லூரி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லர் செல்லம்மா அவர்கள் நேற்று (04.02.2005) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் - நாகி தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற செல்லரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னத்துரை, தேவராசாவின் அருமைச் சகோதரியும் புஸ்பமலர் (பிரான்ஸ்), இரத்தினேஸ்வரி (பிரான்ஸ்), சற்குணவதி, சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கதிரமலை (பிரான்ஸ்), இராசையா (பிரான்ஸ்), சுப்பிரமணியம் (ஆதவன் அரிசி ஆலை), யோகராணி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், செல்வக்குமார (லண்டன்), செல்வமோகன் (பிரான்ஸ்), ஜெயபவானி (பிரான்ஸ்), ராஜகுமார் (பிரான்ஸ்), சுதாஜினி (பிரான்ஸ்), இராஜினி (பிரான்ஸ்), துஷ்யந்தன் (பிரான்ஸ்), பிரதீபன் (செல்லதீப லைற்), சுகன்யா, காண்டீபன் (பிரான்ஸ்) அனுஜா, வித்யா, நிசாந்தன் (பிரான்ஸ்), மயூரன (பிரான்ஸ்), பிரவீனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2005) சனிக்கிழமை பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*அச்சுவேலி வடக்கு*
*பாடசாலை வீதி, அச்சுவேலி.* (41760) (43-11-45)

தகவல்:
ஆ.சுப்பிரமணியம்(மருமகன்).

தடைப்பட்ட பொருளியல் வகுப்புகள் மீண்டும் D.C.M.இல் ஆரம்பம்.
D C M
பொருளியல் S. வரதராஜன் B.A.(Hons)
A/L 2007
05-02-05 சனி – 8.00 AM (ப.நே)
A/L DAY CLASS
07-02-05 திங்கள் – 8.00 AM (ப.நே)
இயக்குநர் S. வரதராஜன்
D.C.M.

## வடலியடைப்பு நல்லுணி வீதி புனரமைப்பு

வடலியடைப்பு நல்லுணி வீதி வலி.தென் மேற்கு பிரதேச சபையினால் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளுவதற்கென இவ்வாரம் கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

கடந்த 18 வருடகாலமாக திருத்தப்படாதிருக்கும் இவ்வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்கம் வலி.தென் மேற்குபிரதேச சபை செயலாளரைக் கடிதம் மூலம் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(எ-135)

## இன்பருட்டியில் 150 கிணறுகளுக்கு குளோரின்

வடமராட்சி,பெப்.5

வடமராட்சி வடக்கு கரையோரக் கிராமங்களில் ஒன்றான இன்பருட்டி கிராமத்தில் குடியிருப்பாளர்களின் 150 கிணறுகள் குளோரின் இடப்பட்டு இருமுறை சுத்தம் செய்யப்பட்டு இறைக்கப்பட்டன.

இக்கிணறுகள் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையினரால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் குடியிருப்பாளரின் பாவனைக்கு விடப்படுமென கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச இணைப்பாளர் சூரியகுமார் தெரிவித்தார். (த-173)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

4 அவது வெற்றி வாரம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே.) (C/39654)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது
இன்று முதல்
சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந், நக்மா, ரகுவரன் மற்றும் பலர் நடித்த
பாட்ஷா

தினசரி காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

லக்சுமி சினிமா இணுவில்
இன்று முதல் சிம்பு. சோனியா. ஆகாஸ். வடிவேல். நாசர். ராஜ்கிரன் நடிப்பில்

கோவில்
காட்சி நேரம் 11.00. 3.00. 7.00. (பு.நே.) (41111)

A/L 2005
கணக்கீடு
திரு. பாலவாசன் B.B.A.(F.M.Spl.)
கிரயக் கணக்கீடு
Sat,Sun 7.30-8.30 am
ஆரம்பம் 06-02-2005 - சனி 7.30 மணி

மனோகரா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
விஜய், திரிஷா மற்றும் பலர் நடித்த திருப்பாச்சி
மூன்றாவது வெற்றிவாரம்
காட்சி : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.


நிரைஞ்சனாஸ் சங்கானை

பிரசாந், சினேகா நடித்த
ஆயுதம்
நேரம்: 11.00 2.45 6.00 (பு.நே.) (C/40667)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயன்தாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின் கடைசி வாரம்

ஐயா இயக்குநர் ஹரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## கோழிகளுக்கு தடுப்பூசி

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தில் சனிக்கிழமைகளில் கோழிகளுக்கு அம்மை நோய் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

இதேவேளை - நல்லின ஊர்ப்பேட்டுக் கோழிக் குஞ்சுகள் இப்பகுதியில் பொது மக்களுக்கு இந்தச் சங்கத்தினால் [illegible] விலையில் விநியோகம் செய்யப்படவுள்ளது. தேவைப்படுவோர் சங்க அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று சங்கத் தலைவர் தி.ராஜ்குமார் தெரிவித்தார்.

(எ-135)

## மெய்வன்மைப் போட்டி

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி கி.சிவராசா தலைமையில் நடைபெறும் இப் போட்டியில் பிரதம அதிதியாக டாக்டர் ஜெகணேசமூர்த்தி தம்பதிகள் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேசசெயலக உதவிப்பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் பங்குகொள்வார்.

(எ-135)

"ஓம் மஹாகணபதியே நம!"

# விவாகசோபன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் தைத் திங்கள் 24 ஆம் நாள் 06.02.2005 ஞாயிற்றுக் கிழமை பூராட நட்சத்திரமும் துவாதசி திதியும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுப தினத்தன்று பகல் 10 மணி 48 நிமிடம் முதல் 11 மணி 36 நிமிடம் வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்

புங்குடுதீவு மேற்கு பெரியபுலம் பிள்ளையார் கோயில்
பிரதம குரு காலஞ்சென்ற சிவஸ்ரீ
நா.ஸ்ரீநிவாசகக் குருக்கள் சாரதாம்பாள் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்

**ஆனந்த சர்மாவுக்கு**

நவக்கிரி மாணிக்கபிள்ளையார் கோவில்
பிரதமகுரு காலஞ்சென்ற சிவஸ்ரீ
முத்துமோகனக் குருக்கள்
இராஜராஜேஸ்வரி தம்பதிகளின்
ஏகபுத்திரி

Wedding

**செல்வி கௌரியை**

பெரியபுலம் பிள்ளையார் துணையுடன், பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு. கன்னிகாதாரண பாணிக்கிரக திருமாங்கல்யதாரண வைபவம் **நல்லூர் சிவன் கோவில் கல்யாண மண்டபத்தில்** நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:*

சமாவர்த்தனம் அதிகாலை 05.30 மணி முதல் 06.30 மணிவரை கல்வியங்காடு மடத்தடி வீதியில் உள்ள மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

வரவேற்பு 09.02.2005 அன்று மாலை 04 மணிக்கு கோவிற்குளம் சிவன் கோவில் காஞ்சி சிவமடத்தில் நடைபெறும்.

இரு வீட்டார் அழைப்பு

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்:
நா.ஸ்ரீநிவாசக இரகுநாதக் குருக்கள்
தம்பதிகளும் சகோதர, சகோதரிகளும்
சிவன் கோவில், கோவிற்குளம், வவுனியா.
T.P.: 024-2220614 (077 [illegible] 11286)

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்:
திருமதி முத்துமோகனக் குருக்களும்
சகோதர, சகோதரிகளும்.
திருமகள்வாசா, ஆவரங்கால்.
T.P.: 077-6728393

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தாமோதரம்பிள்ளை தங்கம்மா



'குகன் இல்லம்', மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையை நிரந்தர முகவரியாகவும் 'சாந்தினி வாசா' மேதர்ஸ் லேன் மானிப்பாயைத் தற்போதைய முகவரியாகவும் கொண்ட திருமதி தாமோதரம்பிள்ளை தங்கம்மா நேற்று (04.02.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பையாக் குருக்கள் - மாணிக்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராமசாமி - பறுவதம் தம்பதிகளின் அன்பு மருமகளும் கலாவல்லி, சிவானந்தவல்லி, காலஞ்சென்ற சிவயோகவல்லி மற்றும கலாதேவி (பிரான்ஸ்), சாரதாதேவி, குகனேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம், பாலசுந்தரம் மற்றும் சிவானந்தன் (அண்ணாகோப்பி) முருகானந்தம் (பிரான்ஸ்), தவமணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அமரர்களான சோமசுந்தரக்குருக்கள், வேதாரணியக குருக்கள், ஞானாம்பிகையம்மா, விசாலாட்சி மற்றும் முத்துக்குமாரசாமி குருக்கள், வைத்திலிங்கக் குருக்கள், திருஞானசம்பந்தர் (பிரீமா), சிவபாக்கியம், சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பண்டிதர் நமசிவாயத்தின் மைத்துனியும் திருமதி தேவராஜா சரோஜாமலர், ரவீந்திரன், சந்தியா, குணாளன் புஸ்பகலா, கிருபாகரக் குருக்கள குமுதினி, சிவதர்சினி, நளாயினி, சுதாகரன், செவ்வந்திநாதன் முகுந்தினி, தில்லையம்பலம் சுதர்சினி, உமாகரன், அமரர் அபிராமி (பிரான்ஸ்) மற்றும் டுஷ்யந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2005) ஞாயிற்றுக் கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சாந்தினி வாசா'*
*மேதர்ஸ் லேன், மானிப்பாய்.*
*T.P.:0776156495* (41756)(43-11-45)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி துரையப்பா கண்ணாம்பிகை



வடலியடைப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி துரையப்பா கண்ணாம்பிகை அவர்கள் நேற்று (04.02.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பாவின் (ரக்ரர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரைரத்தினம் மற்றும் திலகரத்தினம், ஞானேஸ்வரி, இராசேஸ்வரி, சுலோசனாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் கமலாதேவி, செல்வராசா பாலேந்திரன், காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-02-2005)சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரிகைகளுக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*வடலியடைப்பு,* (41751)
*பண்டத்தரிப்பு.* (43-11-45)

தகவல்:-
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## துரைரத்தினம் மகாதேவன்

பொன்னாவளை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் I.D.No.2, சந்தை வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்பொழுது இல.24,ஸ்கந்தபுர வீதி, கூமாங்குளம், வவுனியாவை இருப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் மகாதேவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசன திணைக்களம், முருங்கன்) அவர்கள் நேற்று (04.02.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம் (சீனியர் சபாரத்தினம்) - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் 8ஆம் வட்டாரம், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தர்மசூரியலிங்கம் - சிவகாமசுந்தரி ஆகியோரின் மருமகனும் சந்திராவின் அன்புக் கணவரும் அனுசியா, அனுரா, சிவரூபன், சத்தியரூபன், குகரூபன், யுமைரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாக்கியம் இராசலிங்கம், விஜயலட்சுமி, அருள்ஞானம், கோசலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*24,ஸ்கந்தபுர வீதி,*
*கூமாங்குளம், வவுனியா.* (41759)(43-11-45)

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தையா சின்னத்துரை

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வதிவிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய கந்தையா சின்னத்துரை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) 31.01.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பி கந்தையா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், பேரின்பநாயகியின் அன்புக் கணவரும், அமரர் பண்டிதர் மு.க.க.அருள்பிரகாசம் (இளைப்பாறிய அதிபர்), திருமதி பொன்னம்மா அருள்பிரகாசம்; வேலுப்பிள்ளை வரப்பிரகாசம், திருமதி சின்னம்மா வரப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மருமகனும், S.D.J. சுதர்சன் (Teacher - Wesley college colombo-09), ரோசினி (முதலாம் வருட விஞ்ஞானப்பிரிவு மாணவி, யாழ்பல்கலைக்கழகம்), சிந்துஜா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை - A/L 2004 மாணவி) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் திருமதி கந்தையா தங்கமமாவின் சகோதரரும் கந்தையா மாரிமுத்து, உருததிரன், வின்சன், பேரின்பராஜன் (Norway), இம்மானுவல் கோமஸ் (Norway), இம்மானுவல் ஜேசுதாசன் (Kuwait), பேரின்பராணி (இளைப்பாறிய கமநலசேவை உத்தியோகத்தர்), பேரின்பமாலினி, இவ்லின் (Norway), பேரின்பராஜினி (Norway), பேரின்பவதனி (Kuwait) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்,

அன்னாரின் பூதவுடல் மகிந்தமலர்ச்சாலை 591, காலி வீதி, கல்கிசையில் அஞ்சலிக்காக மு.ப.11.00 மணிக்கு 02.02.2005 அன்று வைக்கப் பட்டு பி.ப. 4 மணிக்கு ஆராதனையுடன் கல்கிசை பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

82/1, Manning Place,Wellawatte
077-7409655 ,077-7273624 (41758)(43-11-45)

தகவல்:
S.D.J.சுதர்ஷன்(மகன்)
(Accounting Teacher)

## திருமதி மருதம்மா தவமணி

இல.1, புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த திருமதி மருதம்மா தவமணி நேற்று (04.02.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (04.02.2005) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது என்பதை சகலருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இல.1,புதிய செம்மணி வீதி,*
*கல்வியங்காடு.* (41755)(43-11-45)

தகவல்:
த.சிவகுமார் (மகன், ஆசிரிய ஆலோசகர், யாழ்.கல்வி வலயம்),
த.பாலச்சந்திரன் (மகன், ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி).

# உயர் கல்வி அமைச்சின் செயலாளர் மாணவர் பேரவையினருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி எச்.ஐ.ஒபயசேகர, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப்பிரதிநிதிகளை நேற்றிரவு பேரவை அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மாணவர் பேரவை சார்பாக பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் கிருஷ்ணா ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகத் தெரியப்படுத்தப்பட்டது. தொழில்நுட்பக் கல்லூரிகளை நவீன மயப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் உயர் கல்வியை மேம்படுத்துவதன் அவசியம் குறித்தும் மாணவர் பேரவைப் பிரதிநிதிகள் கல்வி அமைச்சின் செயலாளருக்கு எடுத்துவிளக்கினர்.

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் கிளை ஒன்று வன்னியில் நிறுவப்பட வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவர் பேரவையினரின் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தருவதாக கல்வி அமைச்சின் செயலாளர் உறுதியளித்தார்

- என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கக் கண்டறியப்பட்டிருக்கின்றது.

கரையொதுங்கிய தோங்காய்களில் ஒன்றை எடுத்து முகர்ந்து பார்த்தவர் உடனடியாகவே மயக்கமுற்று வீழ்ந்தார் என்று கூறப்படுகின்றது.

இதனால் இவ்வாறு கரையொதுங்கும் தேங்காய்களை எவரும் எடுக்க வேண்டாம் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்திருக்கின்றனர். (த-12)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடன் இருக்கவேண்டும் எனவும், வவுனியா மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 14 பேரும் செம்ரெம்பர் மாதம் 20 பேரும் ஜனவரி மாதம் 72 பேரும் நெருப்புக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என இனங்காணப்பட்டிருக்கின்றனர். (த)

## உருத்திரபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் திருமாறன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்ததுடன், படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கான முதல் மலர்மாலையினை அணிவித்தார்.

தொடர்ந்து படுகொலை செய்யப்பட்வர்களின் உறவினர்கள் நினைவுத் தூபியில் மலர்மாலை வணக்கம் செலுத்தினர். நிகழ்வின் இறுதியில் நினைவுரைகளும் இடம்பெற்றன. (த)

## புலி உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து இவர்களைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், இவர்கள் மீது ரி.56 ரக துப்பாக்கி மூலம் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற சின்னத்துரை தேவநாதன் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பின்னால் அமர்ந்திருந்த கிருஷ்ணவரதன் எதுவித காயமுமின்றி உயிர் தப்பியுள்ளார் என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இறந்தவரின் சடலம் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் -

பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்படும் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (த-க)

## கருணா குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இருவரிடமிருந்து 9 எம்.எம்.ரக துப்பாக்கிகள் மற்றும் சயனைட் வில்லைகள் என்பன கைப்பற்றப்பட்டன.

இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிவான் எம்.எச்.எம். அஜ்மீர் உத்தரவிட்டார்.

பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-12)

## ஊர்காவற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரத்துக்குத் திறந்துவிடுமாறும் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

நேற்றுக் காலை அங்கு ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கான மக்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு தமது கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையைப் பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (த-12)

## கறுப்புத்துணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜரை அங்கு சமுகம் அளித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இடம்பெயர்ந்தோர் நலன் புரிச் சங்கத் தலைவர் எஸ்.கணேஷ் வழங்கினார்.

பிரதேச செயலர் அலுவலகத்தின் அதிகாரிகள் எவரும் சமுகமளிக்காததால் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், அங்கு வந்த சிப்பாய் ஒருவர் அங்கு சமுகமளித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசாவைத் தம்முடன் வருமாறு அழைத்தார்.

அமைதியாக எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் சில நிமிட நேரம் அங்கு குழப்பம் ஏற்பட்டது. (த-க-3-86)



நேற்று வலி. வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன் மற்றும் ஒரு தொகுதி மக்கள் வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டியவாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்.

## தமிழர் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதியாக ஈடுபட்டும் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

யாழ்ப்பாணத்தில்

சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து குடாநாட்டில் துக்கதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிறுவனங்கள், வாகனங்கள், பொதுமக்கள் வாழ்விடங்கள், பொது இடங்கள் எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

யாழ்.பல்கலைக்கழகப் பகுதியில் வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டு, சோககீதம் இசைக்கப்பட்டது.

பெரிய அளவில் வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்படாததாலும் போக்குவரத்து குறைவாக இருந்ததாலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது.

மக்கள் நடமாட்டம் வீதிகளில் குறைவாகக் காணப்பட்டது.

யாழ்.செயலகம், ஈ.பி.டி.பி. அலுவலகங்கள், இராணுவ முகாம்கள் ஆகியவற்றின் முன்பாக தேசியக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்ப நிறுவனம் என்பவற்றிலும் வாழைகள், தோரணங்கள், கறுப்புக் கொடிகள் என்பன கட்டப்பட்டிருந்தன.

இதேவேளை -

யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தேசியக் கொடியை ஏற்றினார். செயலக அதிகாரிகள் சிலரும் படையினரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

மன்னாரில்

மன்னாரில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நகரில் அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டிருந்தன; வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன; வாகனங்கள் ஓடவில்லை; ஆங்காங்கே கறுப்புக் கொடிகள் பறந்தன. அலுவலகங்களும் செயலிழந்திருந்தன.

தூர இடங்களுக்கான போக்குவரத்துகளும் நேற்று ஸ்தம்பித்தன.

பொலீஸாரும், இராணுவத்தினரும் முக்கிய இடங்களில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

முழு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு, மன்னார் நகரும் ஏனைய பிரதேசங்களும் வெறிச்சோடிக் கிடந்தபோதிலும் நேற்று மாலை வரை அங்கு அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில்

வவுனியாவில் அரச ஏற்பாட்டில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் அரச செயலகத்தில் பணியாற்றும் அதிகாரிகளையும், படையினரையும் தவிர வேறு எவரும் பங்குபற்றவில்லை.

வவுனியாவில் நகர்ப் பகுதியில் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் பொலீஸாராலும் இராணுவத்தினராலும் நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக அகற்றப்பட்டன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பையொட்டி கவலையும் துக்கமும் வெளியிடும் முகமாக ஏற்கனவே கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள் கூட நேற்றுமுன்தினம் இரவு படையினராலும் பொலீஸாராலும் அகற்றப்பட்டன. எனினும் வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் தொடர்ந்து கறுப்புக் கொடிகள் பறந்தவண்ணம் இருந்தன. வவுனியாவிலும் ஹர்த்தால் போன்ற மந்தநிலை காணப்பட்டது.

கிளிநொச்சியில்

விடுதலைப் புலிகளின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களிலும் இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிரான துக்கநிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் 'பேரிகை' அமைப்பினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்வில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது.

போர்க்காலங்களில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நினைவுச் சுடரேற்றப்பட்டது.

அங்கு நடைபெற்ற நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த புலிமறவன், அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். தொடர்ந்து கவியரங்கம் ஒன்று இடம்பெற்றது.

ஏனைய பிரதேசங்களில்

திருகோணமலை,மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களில் தமிழர் வாழும் பிரதேசங்களிலும் நேற்றுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

அரச செயலகங்களில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் மக்கள் பங்குபற்றவில்லை. அவை ஒப்புக்கு நடந்தேறின.

இராணுவ அச்சுறுத்தலற்ற பகுதிகளில் தமிழ் மக்களின் மனஉணர்வை வெளிப்படுத்தும் விதத்தில் கறுப்புக்கொடிகள் பறந்தன. (த-க-3-7-70-111-86-51)


GENERAL ENGLISH
A/L 2007
Sun. 3.00 p.m.
By: P.N.Shutharson
BRIGHTMAN
நாவலர் வீதி.

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, யாழ்.
ஆறே மாதத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
SPOKEN ENGLISH with GRAMMAR
By:T.THANENDRAN S.L.T.S. 2-11
B.COM, H.N.D.A., P.G.Dip.in Edu.
பகுதிநேர விரிவுரையாளர் (English)
தொழிநுட்பக் கல்லூரி.
புதிய பிரிவு ஆரம்பம்: 05.02.2005 Sat, Sun. 3.30 p.m.
(41753)

UNIT
கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
PIII கணனிகள் 27,000/- முதல்
Intel 2.4 கணனிகள் புதிய DELL மொனிட்டருடன் 47,900/- முதல்
3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்
சகல கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்
Possible which impossible
347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.

SPECIAL OFFER Softview Computer College
(Authorised Councelling Centre for Queen's Park College, London. A joint Venture with Arom Menporulagam Ltd., India.)
50% Discount
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811


| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Microsoft Office | 5 Months | 875/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | 1375/= |
| Diploma in Computer Programming | 8 Months | 2800/= |
| Diploma in Hardware Engineering | 4-5 Months | 1800/= |
| Diploma in Network Engineering | 4 Months | 2850/= |
| Diploma in Visual Basic | 4 Months | 1375/= |
| Diploma in Computer Science | 4 Months | 1375/= |
| Diploma in AutoCAD | 4 Months | 1375/= |
| Diploma in C++ | 4 Months | 1375/= |
| Diploma in Internet E-Mail | 2 Months | 750/= |


பிரிவு IV ஆரம்பம் 12,14.02.2005
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

கணக்கீடு
திரு.சதீஸ் B.B.A. (F.M.Spl.)
A/L - 2006
பங்குடமை
ஆரம்பம்: இன்று (5.2.2005) 5.00 P.M.
A/L - 2005
கம்பனி முடிவுக் கணக்கு
Sat., Sun. 4.00 - 5.00 p.m.
Paper Class Mon.,Thu.,Fri. 5.00-6.00
திகழ் கல்வி நிலையம் K/K/S. றோட் இணுவில்.
(41728)

VACANCY
★ Ms-office Lacturer
(நேரில் வரவும்)
(C-40773)
SKY COMPUTERS (PVT)LTD
NO. 89, Kandy Road,
Chundikuli, Jaffna.
(Near Kachcheri)


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சதாசிவம்

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லோட்டன் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சதாசிவம நேற்று (04.02.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வல்லிபுரம் தம்பதிகளின் மகனும் அம்பிகாவின் அன்புக் கணவரும் சிவரூபினி (கனடா), சிவதர்சினி (கனடா), சிவபிரகாஷ் (ஊழியர், குமாரசாமி அன்சன்ஸ்), சிவதாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிவரதன் (கனடா), இறைமொழி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதூஷன், நிவேதன், மயூரன், வாசுகி ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2005) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.அம்பிகா (மனைவி),
ச.சிவபிரகாஸ் (மகன்).

லோட்டன் வீதி,
மானிப்பாய். (41757)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.